
புதிய பாடத்திட்டம் - 2007

# சைவ நெறி

## தரம் 6



கவிஞர் த. துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சைவ நெறி

## தரம் 6

**இந்நூல்:**

- குறிப்புக்கள், வினா - விடைகள், பயிற்சிகள், செயற்பாடுகள் அனைத்தும் கொண்டது.
- தேசிய கல்வி நிறுவகத்தின் (2007) புதிய பாடத் திட்டத்திற்கமைய, சைவ நெறி (தரம் 6) பாடநூலில் உள்ள 20 பாடங்களையும் தழுவியதாக உருவாக்கப் பெற்றுள்ளது.
- கொழும்பு விவேகாநந்தா சபை, யாழ்-சைவ பரிபாலன சபைப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்குத் துணை புரியும் நூல்.
- உலகெலாம் வாழும் சைவச் சிறார்களின் சமய அறிவினை வளர்த்திட உதவிடும் வகையில் ஆக்கப்பெற்றது.
- பரீட்சைகளில் உச்சப் புள்ளிகள் பெற உதவும் வழிகாட்டி.

**ஆக்கம்:**
**இலக்கிய வித்தகர்,**
**கவிஞர். த. துரைசிங்கம்** B.A (Hons.), Dip-in-Ed., S.L.E.A.S
**கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)**

**வெளியீடு:**
**லங்கா புத்தகசாலை,**
**F.L. 1-14, டயஸ் பிளேஸ்,**
**குணசிங்கபுர, கொழும்பு - 12.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரக்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் | : | சைவ நெறி.<br>(தரம் 6) |
| ஆசிரியர் | : | கவிஞர் த. துரைசிங்கம் |
| முதற் பதிப்பு | : | பெப்ரவரி, 2007. |
| பதிப்புரிமை | : | நூலாசிரி யருக்கு |
| வெளியீடு,<br>விற்பனை. | : | லங்கா புத்தகசாலை<br>F.L. 1-14 டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர, கொழும்பு - 12.<br>தொலைபேசி : 2341942 |
| **ISBN :** | | **955-1013-93-X** |


# வாங்கிவிட்டீர்களா?

## ஆறாந்தர மாணவர்களுக்குப் பயன்தரும் புதிய நூல்கள்

- தமிழ் மொழியும் இலக்கியமும்
- கட்டுரை மலர்
- தமிழ் மொழித் திறன்

**ஆக்கம் : கவிஞர் த. துரைசிங்கம்**

**விற்பனையாளர்:**

**லங்கா புத்தகசாலை,**

**F.L. 1-14** டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - **12.**
தொலைபேசி : **2341942**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பாடம் : 1

குறிப்புக்கள்

# விநாயகர்



- எக்கருமத்தைத் தொடங்கு முன்பும் விநாயகரை வழிபடல் வேண்டும்.
- விநாயகரை வழிபட்டுத் தொடங்கும் செயல் யாவும் சித்திக்கும்.
- வழிபாட்டின்போது முதற் பூசை விநாயகருக்கே உரியதாகும்.
- விநாயகர் என்ற சொல்லுக்குத் தனக்கு மேல் தலைவர் இல்லாதவர் என்பது பொருளாகும்.
- விநாயகரை விக்கினேஸ்வரர் என்றும் அழைப்பர்.
- தம்மை வழிபடுவோருக்கு விக்கினங்கள் (இடையூறு, தடை, தீயது) நேராது காப்பவர் ஆதலால் விக்கினேஸ்வரர் எனப் பெயர் பெற்றார்.
- 'ஓம்' என்பது எங்ஙணும் ஓயாது ஒலிக்கின்ற ஓர் ஓசை. இதனைப் பிரணவ மந்திரம் என்பர்.
- அந்த மந்திர வடிவினராகப் பிள்ளையார் உள்ளார்.
- பிள்ளையார் சுழி (உ) 'ஓம்' என்னும் சொல்லினைக் குறிக்கும் வடிவமாகக் கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ சைவசமயத்தினர் எதனையும் எழுத முன் பிள்ளையார் சுழி இட்டு எழுதுவது வழக்கம்.
- ♦ விநாயகர் வழிபாடு ஆலயங்களிலும் வீடுகளிலும் நடைபெறுகிறது.
- ♦ அரசமரத்தடி, ஆலமரத்தடி, ஆற்றங்கரை, குளக்கரை போன்ற இடங்களிலும் விநாயகர் வீற்றிருந்து அருள் செய்கிறார்.
- ♦ விநாயகரை நாம் இலகுவாக வழிபடலாம். மஞ்சள், சந்தனம், அரிசிமா, சாணம் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றினால் பிள்ளையார் பிடித்து அதில் அறுகம் புல்லை வைத்து வழிபடுவது மரபாகும்.
- ♦ பிள்ளையாருக்கு முன் சிதறு தேங்காய் உடைத்தல், நெற்றியில் மூன்று முறை குட்டிக் கும்பிடுதல், தோப்புக்கரணம் போடுதல் என்பன வழிபடும் முறைகளாகும்.



- ♦ இவை நமது ஆணவத்தை அடக்கி விநாயகரை வழிபடுதலைக் குறிப்பனவாகும்.
- ♦ விநாயகரை வணங்குவதால் தீவினைகள், இடையூறுகள் நீங்கும்; நல்லறிவு உண்டாகும்; கல்வி அறிவு பெருகும்; நமது வேண்டுதல்கள் நிறைவேறும்; வாழ்வு சிறக்கும்.
- ♦ எந்நாளும் ''ஓம் ஓங்கார ரூபாய நமஹ'' என்ற மந்திரத்தைச் சொல்லி விநாயகரை வழிபடுவோமாக.

---

**பாடம் : 1** — **வினா - விடை**

---

**1. சைவசமயத்தில் உள்ள எல்லா மந்திரங்களுக்கும் ஆதியாய் அமைந்த மந்திரம் எது?**

✧ *'ஓம்' என்னும் மந்திரம்.*

**2. சைவ சமயத்தினர் எதனையும் எழுத முன் இடும் அடையாளம் எது?**

✧ *பிள்ளையார் சுழி (உ)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பிள்ளையார் சுழி எதனைக் குறிப்பிடுவதாகக் கருதப்படுகிறது?

✧ *'ஓம்' என்னும் சொல்லினைக் குறிக்கும் வடிவமாகக் கருதப்படுகிறது.*

4. 'ஓம்' என்பது என்ன?

✧ *எங்கணும் ஓயாது ஒலிக்கின்ற ஓர் ஓசை. இதனைப் பிரணவ மந்திரம் என்பர்.*

5. விநாயகர் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?

✧ *தனக்கு மேல் தலைவர் இல்லாதவர் என்பது பொருளாகும்.*

6. விநாயகரை விக்கினேஸ்வரர் என்று அழைப்பது ஏன்?

✧ *தம்மை வழிபடுவோரின் விக்கினங்களை நீக்குபவர் ஆதலால் விக்கினேஸ்வரர் என அழைக்கப்படுகிறார். விக்கினங்கள் நேராது (இடையூறு, தடை ஏற்படாது) காப்பவராதலின் இப்பெயர் பெற்றார் என்பர்.*

7. விநாயகரைக் குறிக்கும் வேறு பெயர்கள் எவை?

✧ *ஐங்கரன் (ஐந்து கைகளை உடையவர்), கணபதி (பூத கணங்களுக்குத் தலைவர்), பிள்ளையார் (பார்வதி - பரமேஸ்வரருக்கு இவர் பிள்ளை), ஆனைமுகன் (ஆனை முகத்தையுடையவர்) எனப் பல பெயர்களால் அழைப்பர்.*

8. விநாயகர் வீற்றிருந்து அருள் பாலிக்கும் இடங்கள் எவை?

✧ *ஆலயங்கள், வீடுகள், மரத்தடி, (அரசமரத்தடி, ஆலமரத்தடி) குளக்கரை, ஆற்றோரங்கள் போன்ற இடங்களாகும்.*

9. பிள்ளையார் பிடிக்க உதவும் பொருட்கள் எவை?

✧ *மஞ்சள்மா, சந்தனம், பசுவின் சாணம், அறுகம்புல்.*

10. பிள்ளையாரை வழிபடும் முறைகள் எவை?

✧ 1. *நெற்றியில் மூன்றுதரம் குட்டிக் கும்பிடுதல்.*
2. *தோப்புக்கரணம் போடுதல்.*
3. *சிதறு தேங்காய் உடைத்து வழிபடுதல்.*

11. சிதறு தேங்காய் உடைத்து வழிபடுவது ஏன்?

✧ *தமது பாவங்கள், கஷ்டங்கள் யாவும் தேங்காய் சிதறுவதைப் போல சிதறுண்டு போகும் என்ற நம்பிக்கையின் காரணமாகவே சிதறு தேங்காய் உடைத்து வழிபடுகின்றனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. நெற்றியில் மூன்று முறை குட்டிக் கும்பிடும் முறையினை விளக்குக.

✧ முட்டியாகப் பொத்திப் பிடித்த இரண்டு கைகளாலும் மூன்று முறை குட்டி, வலக்காதை . இடக்கையினாலும் இடக்காதை வலக் கையினாலும் பிடித்துக்கொண்டு மும்முறை தாழ்ந்தெழுந்து கும்பிடல் வேண்டும். (ஆதாரம் - சைவ வினாவிடை)

13. இதனோடு தொடர்புடைய புராணக் கதையைத் தருக.

✧ அகத்தியர் காவிரி நீரைத் தமது கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு பொதிய மலைச் சாரலில் இருந்தார். அவ்வேளையில் விநாயகர் காக்கை வடிவம் கொண்டு அகத்திய முனிவருடைய கமண்டலத்தின் மேல் ஏறியிருந்தார். அகத்தியர் காகத்தைத் துரத்த அது கவிழ்ந்து விட்டது. அதனால் கமண்டலத்தில் இருந்த காவிரி நீர் பெருக்கெடுத்து ஓடியது. அகத்தியர் கோபத்துடன் காக்கையைத் துரத்திய போது காகமாக இருந்த பிள்ளையார் பிராமணச் சிறுவனாக மாறினார். அகத்தியர் அச்சிறுவனைப் பிடித்துக் குட்டுவதற்குக் கையை ஓங்கினார். பிள்ளையார் தமது சுயஉருவைக் காட்டினார். மனம் நொந்த அகத்தியர் விநாயகரைக் குட்டஓங்கிய கைகளால் தமது நெற்றியின் இரு பக்கமும் குட்டிக் கொண்டார். அத்துடன் அவ்வாறு குட்டி வழிபாடு செய்வோருக்கு அருள் பாலிக்குமாறும் வேண்டிக் கொண்டார். அதனால் நெற்றியில் மூன்று முறைகுட்டி வழிபடுவது வழக்கமாயிற்று.

14. பிள்ளையாருக்குரிய சிறப்பான வழிபாட்டு முறை யாது?

✧ தோப்புக்கரணம் போட்டு வழிபடுதலாகும்.

15. விநாயகரை வழிபடும் போது தோப்புக்கரணம் போடும் வழக்கம் எவ்வாறு உண்டாயிற்று?

✧ யானை முகமுடைய கஜமுகன் என்னும் அசுரன் தேவர்களை அடிமையாக்கி அவர்களைத் தம்முன் ஆயிரம் முறை தோப்புக்கரணம் போடச் செய்தான். தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர் கஜமுகனை அடக்க விநாயகரை அனுப்பினார். விநாயகர் அவனுடன் போர் புரிந்தார். அவனது உடலைப் பிளந்தார். அவன் பெருச்சாளி வடிவெடுத்து விநாயகரை எதிர்த்தான். விநாயகர் அவனது செருக்கை அடக்கி ஞானோபதேசம் செய்தார். அதன்பின் அவன் விநாயகரைத் தொழுதான். பெருச்சாளியை விநாயகர் தமது வாகனமாக்கிக் கொண்டார். அதன் பின்னர் தேவர்கள் கஜமுகாசுரனுக்குத் தோப்புக்கரணம் போட்ட நிலை மாறி விநாயகருக்கு முன் அவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தொடங்கினர். விநாயகர் அவர்கள் மீது இரக்கங் கொண்டு தமக்கு முன் மூன்று முறை தோப்புக்கரணம் போட்டால் போதும் என்றார். அதனால் விநாயகரை வழிபடும் போது பக்தர்கள் தோப்புக்கரணம் போடுவது வழக்கமாயிற்று.

**16. விநாயகர் கஜமுகனை எவ்வாறு அடக்கினார்?**

✧ கஜமுகன் சாகா வரம் பெற்றவன். ஆயுதங்கள் அவனைத் தாக்க மாட்டா. அதனால் விநாயகர் தம் வலப்பக்கத் தந்தத்தை முறித்து அவன் மேல் வீசினார். அது அவனது உடலைப் பிளந்தது. அவன் பெருச்சாளி உருவெடுத்து அவரை எதிர்த்தான். விநாயகர் அவ்வேளை அவனுக்கு ஞான உபதேசம் செய்தார். அதனால் கஜமுகன் செருக்கு அடங்கி விநாயகரைச் சரணடைந்தான்.

**17. விநாயகருக்குப் படைத்தற்குரிய பொருட்கள் எவை?**

✧ மோதகம், அவல், கடலை, பால், தேன், பழங்கள் ஆகியவற்றைப் படைப்பர்.

**18. விநாயகரை வழிபடுவதால் பெறும் பயன்கள் எவை?**

✧ வழிபடுவோரின் இடையூறுகள், துயர்கள் நீங்கும். வினைகள் வேரோடு அழியும். விரும்பியவை கிட்டும். சிறந்த கல்வியறிவு பெருகும். வாழ்வு சிறக்கும்.

**19. விநாயகரை வழிபடும் போது சொல்லப்படும் மந்திரம் எது?**

✧ 'ஓம் ஓங்கார ரூபாய நமஹ' என்பதாகும்'.

**20. அம்மந்திரத்தின் பொருள் யாது?**

✧ 'ஓம் என்னும் பிரணவ மந்திர வடிவினருக்கு வணக்கம்' என்பதாகும்.

**21. விநாயகர் வழிபாட்டுக்குரிய பாடல்கள் சில தருக.**

✧ விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணுக்கும் மண்ணுக்கும்நாதனுமாம்
தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

பாடம் : 1 பயிற்சி : 1

1. பொருத்தமுற இணையுங்கள்.

| | |
|---|---|
| ஓம் | விநாயகர் |
| விக்கினேஸ்வரர் | பூதகணங்களுக்குத் தலைவர் |
| ஓங்கார ரூபன் | பிரணவ மந்திரம் |
| கணபதி | கஜமுகன் |
| யானைமுகம் உடைய அசுரன் | விக்கினங்களை நீக்குபவர் |

2. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ) எக்கருமத்தைத் தொடங்கு முன்பும் விநாயகருக்கு வணக்கம் செலுத்துதல் நமது ..........................................................

ஆ) பார்வதி, பரமேஸ்வரருக்குப் பிள்ளை என்பதாலேயே .............................. என்ற பெயர் வழங்கப்படுகிறது.

இ) மரத்தடியிலும் குளக்கரையிலும் ஆற்றோரங்களிலும் .......................................... வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) கஜமுகன் .............................. வரம் பெற்றவன்; ஆதலால் ஆயுதங்கள் அவனைத் தாக்கவில்லை.

உ) தனக்கு மேல் தலைவர் இல்லாதவர் ................................

ஊ) விநாயகனே வெவ்வினையை வேரறுக்க ..........................

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வல்லான் | பிள்ளையார் | மரபாகும் | விநாயகர் | சாகா | விக்கினேசுவரர் |

3. பின்வருவன சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுங்கள்.

அ) பிரணவ மந்திரப் பொருளாய் அமைபவர் பிள்ளையார். (..........)

ஆ) பிள்ளையாரை வழிபடுவது மிகவும் கஷ்டமானது. (..........)

இ) எதனையும் எழுதத் தொடங்கும் போது பிள்ளையார் சுழி போடுவோம். (..........)

ஈ) கஜமுகனை விநாயகர் அழிக்கவில்லை. (..........)

உ) கஜமுகனுக்குத் தேவர்கள் ஆயிரம் முறை தோப்புக்கரணம் போட்டனர். (..........)

ஊ) விக்கினங்களைப் போக்குபவர் விக்கினேஸ்வரர். (..........)

4. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) வழிபாட்டின் போது முதற் பூசைக்கு உரியவர்,

1. முருகன் 2. விநாயகர்
3. நந்தியெம்பெருமான் 4. சண்டேசுரர்

ஆ) பிள்ளையார் சுழி குறிக்கும் மந்திரம்,

1. ஓம் 2. நமசிவாய
3. ஓம் சக்தி 4. குகாய நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) பிள்ளையார் வீற்றிருக்காத இடம்,

1. அரசமரத்தடி
2. ஆற்றங்கரை
3. குளக்கரை
4. பலிபீடம்

ஈ) பிள்ளையாருக்கு உகந்த பண்டங்கள் அல்லாதவை,

1. மோதகம்
2. முப்பழங்கள்
3. தேன்
4. காய்கறிகள்

உ) தனக்கு மேல் தலைவர் ஒருவர் இல்லாதவர்,

1. முருகன்
2. சண்டேசுவரர்
3. நந்தியெம்பெருமான்
4. விநாயகர்

5. விடை எழுதுங்கள்.

அ) விநாயகரை விக்கினேசுவரர் என்று அழைப்பது ஏன்?

.........................................................................................................

.........................................................................................................

ஆ) நாம் ஒரு செயலைத் தொடங்கும் போது முதலில் யாரை வணங்க வேண்டும்?

.........................................................................................................

இ) விநாயகரைக் குறிக்கும் வேறு பெயர்கள் நான்கு எழுதுங்கள்.

.........................................................................................................

.........................................................................................................

ஈ) 'ஓம்' என்னும் பிரணவ மந்திர வடிவான கடவுள் யார்?

.........................................................................................................

உ) விநாயகர் வழிபாடு நடைபெறும் இடங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ) தோப்புக்கரணம் போடும் முறையை விளக்குக.

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

எ) விநாயகரை வழிபடுவதால் பெறும் பயன்கள் யாவை?

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

ஏ) எம்மந்திரத்தைச் சொல்லி விநாயகரை வழிபட வேண்டும்?

.............................................................................................

ஐ) பிள்ளையாருக்கு சிதறு தேங்காய் அடித்து வழிபடுவது ஏன்?

.............................................................................................

.............................................................................................

ஒ) நெற்றியில் குட்டிக் கும்பிடுதலுடன் தொடர்புடைய கதை எது?

.............................................................................................

- செயற்பாடு:

அ) மஞ்சள் மா, அரிசி மா, சந்தனம் என்பவற்றால் பிள்ளையார் பிடித்து அறுகம்புல் சாத்தி வழிபடும் முறையை வகுப்பில் செய்து காட்டுக.

ஆ) நெற்றியில் மும்முறை குட்டிக் கும்பிடுதல், தோப்புக்கரணம் போடுதல் என்பவற்றைச் சரியான முறையில் செய்து பழகுக.

இ) காவிரி பிறந்த கதையினை உமது வகுப்பில் கூறுக.

ஈ) விநாயகர் படத்தை உமது கொப்பியில் வரைக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 2

குறிப்புக்கள்

# கடவுள்



- கடவுள் ஒருவரே உண்மையானவர்; அழிவற்றவர்.
- அவரே அனைத்தையும் படைப்பவர். நாம் எல்லோரும் கடவுளின் படைப்புக்கள். எல்லாச் செயல்களுக்கும் அடிப்படையாக இருப்பவரும் அவரே.
- கடவுள் எங்கும் இருக்கிறார். அவர் இரக்கம் உடையவர். அவர் நம்மைக் காக்கிறார்.
- இறைவனின் இரக்க இயல்பினைக் காட்டும் கதைகளில் ஒன்று செம்மனச் செல்வியின் கதை. இது மதுரையில் நிகழ்ந்த கதை.
- தமிழ் நாட்டில் மதுரை மாநகரம் உள்ளது.
- மதுரைக்கு அருகே வைகை என்ற நதி ஓடுகிறது.
- ஒருமுறை பெரு மழையினால் வைகை நதி பெருக்கெடுத்தது. வெள்ளம் பெருகி ஓடியது.
- வெள்ளம் காரணமாக அங்குள்ள மக்கள் பெரும் துன்பமுற்றனர்.
- வீடு, பொருட்கள், கால்நடைகள் முதலியனவற்றை இழந்தனர்.
- மக்கள் படும் துன்பத்தை மன்னன் அறிந்தான்.
- வெள்ளப் பெருக்கைத் தடுக்க வைகை நதியின் கரையில் பெரிய அணையினை அமைக்குமாறு கட்டளையிட்டான்.
- அணையினை அமைக்கும் வேலை ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. அதற்கமைய ஒவ்வொரு வீட்டினருக்கும் ஒவ்வொரு பங்கு அளந்து விடப்பட்டது.
- எல்லோரும் மண்வெட்டி, கூடை என்பவற்றை எடுத்துக்கொண்டு வைகைக் கரையை அடைந்தனர். தத்தம் பங்கினைக் கட்டி முடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ மதுரையில் செம்மனச் செல்வி என்னும் மூதாட்டி வாழ்ந்து வந்தார். அவருக்கு உறவினர் எவரும் இல்லை. அவர் பிட்டு அவித்து விற்று வாழ்க்கை நடத்தி வந்தார்.

♦ ஏழையான அவர் சிவபெருமானிடம் மிகுந்த பக்தி உள்ளவர்.

♦ நாள்தோறும் மதுரையில் உள்ள சோமசுந்தரப் பெருமானின் கோவில் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டவர்.

♦ அரசனின் கட்டளைப்படி அவரும் வைகைக்கரையில் தன் பங்கினைக் கட்ட வேண்டியிருந்தது.

♦ பாவம்! மூதாட்டி. அணை கட்டுவதற்குக் கூலி ஆள் எவரும் கிடைக்கவில்லை. எங்கும் தேடியும் உதவுவார் எவரும் கிட்டாதமையால் பெரும் கவலை கொண்டார். 'திக்கற்றவருக்குத் தெய்வமே துணை' என்பர். செம்மனச் செல்வியும் தமது குறையை இறைவனிடம் சொல்ல எண்ணினார். நேராக மதுரைக் கோயிலுக்குச் சென்றார். சிவபெருமானிடம் தனது குறையைக் கூறினார். அருள் செய்யுமாறு வேண்டினார்.

♦ மூதாட்டியின் வேண்டுதல் கேட்டு சிவபெருமான் இரக்கம் கொண்டார். தாமே கூலி ஆள் வேடம் கொண்டு மதுரை வீதியிலே காட்சி அளித்தார். கூலி ஆளிடம் மூதாட்டி தமது பங்கு அணையைக் கட்டித் தருமாறு கேட்டார். அவரும் அதற்கு உடன்பட்டார். கூலியாள் பசிக்கிறது எனக் கூறி மூதாட்டியிடம் பிட்டு வாங்கி உண்டார். பின்னர் மூதாட்டியின் பங்கினை அடைக்கப் புறப்பட்டார்.

♦ கூலியாள் வைகைக்கரையை வந்தடைந்தார். ஒரு கூடையில் மண்ணை நிரப்பினார். அதனைக் கொண்டு சென்று கொட்டினார். இப்படி இடைக்கிடை கொட்டுவதும் மரநிழலில் அமர்ந்து கந்தைத் துணியில் கட்டிவந்த பிட்டை எடுத்து உண்பதுமாகக் காலங்கழித்தார். வைகைக்கரையில் அணைகட்டும் வேலை பெருமளவில் பூர்த்தியடைந்தது. ஆனால் மூதாட்டியின் பங்கு மட்டும் கட்டி முடிக்கப்படவில்லை. கூலியாள் மரநிழலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்.

♦ அணை கட்டும் வேலையைப் பார்வையிட மன்னன் வைகைக்கரைக்கு வந்தான். மூதாட்டியின் கூலியாள் குறிப்பிட்ட பங்கைக் கட்டி முடிக்காததைக் கண்டான். கோபம் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்து உறங்கிக் கொண்டிருந்த கூலியாளின் முதுகில் பிரம்பினால் அடித்தார். அந்த அடி அரசன் உட்பட்ட எல்லோர் முதுகிலும் பட்டது. அதேவேளை கூலியாளாக வந்திருந்தவர் ஒருகூடை மண்ணை உடைப்பெடுத்த இடத்தில் இட்டுவிட்டு மறைந்தருளினார். வைகைக்கரையும் அடைபட்டது. இந்த அற்புதத்தை விளைவித்தவர் சிவபெருமானே என்று எல்லோரும் அறிந்தனர்.

- பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்ட சிவனார் அடியார் தம் துயர் போக்க எங்கும் எழுந்தருளுவார் என்பதை இக்கதை உணர்த்துகிறது.

## பாடம் 2

**வினா-விடை**

**1. கடவுளின் இயல்புகள் எவை?**

✧ *கடவுள் ஒருவரே. அவர் எங்கும் இருப்பவர். எல்லாம் அறிபவர். அவர் எல்லாம் வல்லவர். அவர் உயிர்களிடத்து இரக்கம் உள்ளவர். அவரே நம்மைக் காப்பவர்.*

**2. கடவுளை நாம் ஏன் வணங்க வேண்டும்?**

✧ *நாம் எல்லோரும் கடவுளின் படைப்புக்கள். நம்மைப் படைத்துக் காத்து வழிநடத்தும் கடவுளை நாம் எந்நாளும் வணங்க வேண்டும்.*

**3. மதுரையில் உள்ள நதியின் பெயர் என்ன?**

✧ *வைகைநதி*

**4. வைகை பெருக்கெடுத்தது ஏன்?**

✧ *மதுரையில் பெருமழை பொழிந்தமையினால் வைகைநதி பெருக்கெடுத்தது.*

**5. வைகை பெருகியதால் ஏற்பட்ட விளைவு யாது?**

✧ *மக்கள் தம் வீடு, பொருட்கள், கால்நடைகள் முதலானவற்றை இழந்தனர்.*

**6. அரசன் இட்ட கட்டளை யாது?**

✧ *வைகை நதியின் அணையை உயர்த்துமாறும் ஒவ்வொருவரும் தத்தம் பங்கினைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் கட்டளையிட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **இறைவனின் இயல்பினை விளக்கும் கதைகளில் ஒன்றின் பெயர் தருக.**

✧ *செம்மனச் செல்வியின் கதை.*

8. **செம்மனச் செல்வி என்பவர் யார்? அவரது பண்பு யாது?**

✧ *மதுரையில் பிட்டு அவித்து விற்றுச் சீவனம் நடத்தும் ஓர் ஏழை மூதாட்டி. சிவபெருமானிடம் மிகுந்த பக்தி கொண்டவர். நாள்தோறும் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடும் பண்பு மிக்கவர்.*

9. **செம்மனச் செல்வி தனது குறையை யாரிடம் முறையிட்டார்?**

✧ *மதுரையில் உள்ள சிவபெருமானிடம் (சோமசுந்தரரிடம்) முறையிட்டார்.*

10. **சிவபெருமான் கூலி ஆள் வேடம் பூண்டது ஏன்?**

✧ *தமது அடியாளான செம்மனச் செல்வியின் குறை போக்குவதற்காக.*

11. **கூலியாளாக வந்த சிவபெருமானுக்குச் செம்மனச் செல்வி கொடுத்த கூலி என்ன?**

✧ *பிட்டு*

12. **கூலியாளுக்குப் பிரம்படி விழுந்தது ஏன்?**

✧ *குறித்த அணைப்பகுதியைக் கட்டி முடிக்காமல் நித்திரை செய்தமையால்.*

13. **அரசன் அடித்த அடி எல்லோர் முதுகிலும் பட்டமை எதனை எடுத்துக் காட்டுகிறது?**

✧ *இறைவன் எங்கும் இருப்பவர் என்பதனை எடுத்துக் காட்டுகிறது.*

14. **பிட்டுக்கு மண் சுமந்தவர் யார்?**

✧ *சிவபெருமான்.*

15. **செம்மனச் செல்வியின் கதை நமக்கு எவற்றை உணர்த்துகிறது?**

✧ *கடவுள் ஒருவரே உண்மையானவர், அவர் எங்கும் இருப்பவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், இரக்கம் உடையவர், அடியவரைக் காப்பவர் என்னும் உண்மைகளை உணர்த்துகிறது.*

16. **கடவுள் ஆன்மாக்களுக்காகச் செய்யும் தொழில்கள் எவை?**

✧ *படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றுமாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

1. உலகத்துக்குக் கருத்தா யார்?
   1. சிவபெருமான் 2. முருகன் 3. பிள்ளையார்

2. கடவுள் ஒருவர்,
   1. இல்லை 2. இருக்கிறார் 3. இருக்கமாட்டார்

3. கடவுள் இரக்கம்,
   1. இல்லாதவர் 2. உடையவர் 3. அற்றவர்

4. செம்மனச் செல்வி வாழ்ந்த ஊர்,
   1. தமிழகம் 2. மானாமதுரை 3. மதுரை

5. மதுரையில் உள்ள நதியின் பெயர்,
   1. காவேரி 2. பாலாறு 3. வைகை

6. வைகை நதி பெருகியமைக்குக் காரணம்,
   1. அணை உடைந்தமையால் 2. பெருமழை பொழிந்தமை
   3. அணை திறக்கப்பட்டமை

7. பிட்டுக்கு மண் சுமந்த கூலியாள் யார்?
   1. செம்மனச்செல்வி 2. பாண்டிய மன்னன் 3. சிவபெருமான்

8. செம்மனச் செல்வி கூலி ஆளுக்குக் கொடுத்த கூலி என்ன?
   1. பிட்டு 2. காசு 3. பிரம்படி

9. இறைவன் கூலி ஆளாக வந்தமைக்குக் காரணம்,
   1. பிட்டு உண்பதற்காக 2. கூலி பெறுவதற்காக
   3. தமது அடியவளின் துயர் போக்க

10. அரசன் அடித்த அடி எல்லோர் முதுகிலும் பட்டமையானது எதை உணர்த்துகிறது?
   1. கடவுள் எங்கும் இருக்கிறர் என்பதை.
   2. கடவுளுக்கு அடி படாது என்பதை
   3. அரசன் தவறு செய்தான் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புங்கள்.

1. திக்கற்றவர்க்குத் தெய்வமே ..............................................
2. .................................. சிவபெருமானிடத்து மிகுந்த பக்தி கொண்டவர்.
3. சிவபெருமான் உயிர்களிடத்து மிகுந்த .............................. உடையவர்.
4. நம்மைப் படைத்துக் ................................. கடவுளாவார்.
5. கருத்தா என்றால் செய்வோன், தலைவன், ..................... எனப் பொருள்படும்.
6. சக்தி என்னும் சொல்லுக்கு .............................................. என்பது பொருளாகும்.
7. கூலி ஆள் கொன்றை மர நிழலில் .................................. செய்தார்.
8. பாண்டிய மன்னன் கூலி ஆளின் முதுகில் பிரம்பால் ..............................................
9. .............................................. நம்பினோர் கைவிடப்படார்.
10. சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை நடத்தியுள்ளார்; அவற்றில் ............................ ஒன்றாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கடவுளை | துணை | காப்பவர் | அடித்தார் | வல்லமை |
| செம்மனச் செல்வி | கடவுள் | நித்திரை | இதுவும் | இரக்கம் |

இ) பின்வருவன சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுங்கள்.

1. சிவபெருமான் சக்தியைக் கொண்டு தொழில்களைச் செய்வார். (...............)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கடவுள் எங்கும் இருப்பவர்; அதனாற்றான் அவர் மீது பட்ட அடி எல்லோர் மீதும் பட்டது. (...............)

3. செம்மனச் செல்வியிடம் நல்ல பண்புகள் எதுவும் இருக்கவில்லை. (...............)

4. பிட்டுக்கு மண் சுமந்தமையாற்றான் பிரம்படி கிடைத்தது. (...............)

5. சிவபெருமான் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதையும் உண்டு. (...............)

ஈ) விடை எழுதுங்கள்.

1. கடவுளின் இயல்புகள் நான்கு எழுதுங்கள்.

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

2. கடவளின் இயல்புகள் குறித்துப் பாலபாடம் நூலில் ஆறுமுகநாவலர் குறிப்பிட்டுள்ள மகா வாக்கியங்கள் ஐந்து தருக.

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

3. செம்மனச் செல்வியின் கதை மூலம் நீங்கள் உணர்ந்து கொள்ளும் உண்மைகள் எவை?

..................................................................................................

..................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சிவபெருமான் கூலி ஆளாக வந்தது ஏன்?

..............................................................................................

..............................................................................................

5. சிவபெருமான் நிகழ்த்தும் ஐந்தொழில்களும் எவை?

..............................................................................................

6. ஆன்மாக்களுக்காக அவர் செய்யும் முத்தொழில்களும் எவை?

..............................................................................................

7. சிவபெருமான் எப்படிப்பட்டவர்?

..............................................................................................

..............................................................................................

8. செம்மனச் செல்வியின் கதையில் கடவுள் எங்கும் இருக்கின்றார் என்பதை விளக்கும் பகுதி எது?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

9. 'கடவுளை நம்பினோர் கை விடப்படார்' என்பதற்கு எடுத்துக் காட்டுக்கள் இரண்டு தருக.

..............................................................................................

..............................................................................................

- செயற்பாடு:
  1. கடவுளை நம்பினோர் கை விடப்படார் என்னும் தலைப்பில் ஒரு கதை எழுதுக.
  2. சிவபெருமான் உயிர்கள் மீது இரக்கம் கொண்டு அருள் செய்த வேறொரு கதையினை மாணவர் மன்றக் கூட்டத்தில் கூறுக.
  3. கூலியாளின் முதுகில் மன்னன் அடித்த அடி அவன் முதுகிலும் பட்ட காட்சியைப் படமாக வரைக..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 3

குறிப்புக்கள்

# வீட்டில் சைவம்



- நாம் அன்றாட வாழ்வில் பல சைவப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்து வருகின்றோம். அவை சரியான முறையில் பயிற்சியுடன் அமைதல் வேண்டும்.
- வீட்டில் சைவப் பழக்க வழக்கங்களை நன்கு கடைப்பிடித்தாற்றான் கோயில், பாடசாலை போன்ற இடங்களிலும் நாம் ஒழுங்காக, நற்பண்பு உள்ளவர்களாக விளங்க முடியும்.
- வீட்டில் நாளாந்தம் நாம் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கங்களில் விபூதி (திருநீறு) தரித்தல், சுவாமி படங்களுக்கு விளக்கேற்றல், கடவுளை வணங்குதல் என்பன முக்கியமானவையாகும்.
- தினமும் காலையில் நீராடி, திருநீறு தரித்து, சுவாமி அறையில் பூவும் நீரும் வைத்து, விளக்கேற்றி, தூப, தீபங் காட்டி, தோத்திரம் பாடி இறைவனை வழிபடுதல் நல்ல பழக்கமாகும்.
- காலையிலும் மாலையிலும் கை, கால், முகம் கழுவிய பின் அல்லது நீராடிய பின் கடவுளை வழிபடுதல் வேண்டும்.
- நமது இல்லம் புனிதமானதாக இருத்தல் வேண்டும். வழிபாட்டிற்குத் தனியிடம் (சுவாமி அறை) பொருத்தமானது.
- வெள்ளிக்கிழமைதோறும் மாலை வேளைகளில் வீட்டில் எல்லோரும் ஒன்றுகூடி இறைவனை வழிபடுதல் வேண்டும். அவ்வேளையில் பஞ்ச புராணம் பாடுதல், கூட்டுப் பிரார்த்தனை செய்தல் விரும்பத்தக்கது.
- வெள்ளிக்கிழமை, தைப்பொங்கல், புதுவருடப் பிறப்பு, தீபாவளி மற்றும் விரத நாட்களில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய சைவப் பழக்கவழக்கங்கள் பல உள்ளன.
- வீட்டையும் சுற்றாடலையும் சுத்தம் செய்தல், புனிதம் பேணல், இறைவழிபாடு செய்தல், கூட்டுப் பிரார்த்தனை நடத்துதல் போன்றவற்றில் ஈடுபடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ பண்டிகை நாட்களில் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்தல், மாவிலைத் தோரணம் போடுதல், கோலம் போடுதல், நிறைகுடம் வைத்தல் போன்றவற்றைச் செய்யலாம். இவற்றின் மூலம் வீட்டுக்குத் தெய்வீகப் பொலிவும் நமக்கு மனச்சாந்தியும் காரிய சித்தியும் கிட்டும்.
- ♦ இப்பழக்கவழக்கங்களை நாம் தொடர்ந்து கடைப்பிடித்தல் வேண்டும்.
- ♦ தினமும் ஆலயம் சென்று வழிபடுதல் நல்ல பழக்கமாகும். அது இயலாத பட்சத்தில் வெள்ளிக்கிழமைகளில், விசேட விழா நாட்களில் தவறாது ஆலய தரிசனம் செய்தல் வேண்டும்.
- ♦ காலையும் மாலையும் கடவுளை வணங்குவோமாக.

---

**பாடம் : 3** — **வினா-விடை**

---

**1. வீட்டில் கடைப்பிடிக்க வேண்டிய சைவசமயப் பழக்கங்கள் எவை?**

✧ *தினமும் காலையில் நீராடுதல், திருநீறு தரித்தல், சுவாமி அறையில் விளக்கேற்றுதல், தூப,தீபங் காட்டுதல், பஞ்சபுராணம் ஓதுதல், பிரார்த்தனை செய்தல் போன்றன.*

**2. காலையும் மாலையும் செய்ய வேண்டியன யாவை?**

✧ *காலையிலும் மாலையிலும் கை, கால், முகம் கழுவிய பின்னர் கடவுளை வழிபடல் வேண்டும்.*

**3. வெள்ளிக்கிழமைகளில் என்ன செய்ய வேண்டும்?**

✧ *வெள்ளிக்கிழமைகளில் வீட்டையும் சுற்றாடலையும் சுத்தம் செய்தல் வேண்டும். நீராடி ஆசாரசீலர்களாக சுவாமி அறையில் விளக்கேற்றி, பூவும் நீரும் வைத்து, தூப, தீபங் காட்டி, வழிபட வேண்டும். இவ்வழிபாட்டில் வீட்டில் உள்ளார் அனைவரும் பங்குகொள்ள வேண்டும். பஞ்சபுராணம் பாடுதல், கூட்டுப் பிரார்த்தனை செய்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.*

**4. பண்டிகை நாட்களில் செய்யத்தக்கன எவை?**

✧ *பண்டிகை நாட்களில் வீட்டையும் சுற்றாடலையும் சுத்தம் செய்தல் வேண்டும். வீட்டின் முன் கோலம் இடுதல், மாவிலைத் தோரணம் கட்டுதல், நிறைகுடம் வைத்தல், விசேட வழிபாடுகளை நடத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இச்செயல்களால் பெறும் பயன்கள் எவை?

✧ நமது உள்ளம் பரிசுத்தமடையும். வீட்டிற்குத் தெய்வீகப் பொலிவு ஏற்படும். நமக்குக் காரிய சித்தி உண்டாகும்.

6. சைவப் பழக்கவழக்கங்களை நாம் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமா?

✧ ஆம். நமது அன்றாட வாழ்வில் இவற்றை நாம் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டும். இதன்மூலம் நல்ல பண்புள்ளவர்களாக, நல்ல பிரசைகளாக நாம் வாழ முடியும்.

7. 'காலையும் மாலையும் கடவுளை வணங்கு' என்று ஏன் கூறினார்கள்?

✧ கடவுள் ஒருவரே உண்மையானவர். அவரே நம்மைப் படைத்துக் காத்து வருபவர். அவரை நாம் ஒருபோதும் மறத்தல் ஆகாது. இதனாற்றான் நமது முன்னோர் காலையும் மாலையும் கடவுளை வணங்கு என்று கூறிச் சென்றுள்ளனர்.

---

பாடம் : 3 பயிற்சி : 3

---

1. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.

அ) நாம் வீட்டிலும் வெளியிலும் சைவப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து வருகின்றோம். (.........)

ஆ) நீராடுதல், விபூதி தரித்தல், கடவுள் வழிபாடு செய்தல் என்பன வீண் வேலையாகும். (.........)

இ) நாம் காலையும் மாலையும் கடவுளை வணங்குதல் வேண்டும். (.........)

ஈ) பண்டிகை நாட்களை நாம் சிறப்பாகக் கொண்டாடுவோம். (.........)

உ) விசேட தினங்களின்போது வீட்டில் புனிதம் பேணுவது இல்லை. (.........)

ஊ) சித்திரைப் புது வருடப் பிறப்பை நாம் கொண்டாடுவது இல்லை. (.........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ) பண்டிகை நாட்களில் வீட்டில் மாவிலைத் தோரணம் இட்டு, கோலம் போட்டு, நிறைகுடம் வைப்போம். (.........)

ஏ) வெள்ளிக்கிழமைகளில் வீடுகளில் விசேட வழிபாடு நடைபெறும். (.........)

ஐ) சமயப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்காதோர் சிறந்த சமயிகள் ஆவர். (.........)

ஒ) சமயப் பழக்கவழக்கங்களை நாம் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். (.........)

**2.** பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளி நிரப்புங்கள்.

அ) சித்திரைப் புதுவருடப் பிறப்பன்று ........................................ வைத்து நீராடுவோம்.

ஆ) தைப்பொங்கல் தினத்தில் வீட்டில் .................. வைப்போம்.

இ) தீபாவளித் தினத்தன்று ................................ அணிவோம்.

ஈ) விசேட விழாக்களின் போது மாவிலைத் தோரணம் ..................

உ) வெள்ளிக்கிழமைகளில் வீடுகளில் விசேட ........................ நடைபெறும்.

ஊ) ........................... மாலையும் கடவுளை வணங்குவோம்.

எ) வீட்டையும் சுற்றாடலையும் ................................................ வைத்திருத்தல் வேண்டும்.

ஏ) சமயப் பயிற்சி, சாதனை என்பனவற்றைத் தொடங்கி நிகழ்த்துதற்குரிய இடம் நமது ..........................................

ஐ) சைவ இல்லங்களில் சுவாமி அறை ஒன்று இருத்தல் ..................................

ஒ) தினமும் பஞ்சபுராணம் ஓதி இறைவனை ..........................

| | | | | |
|---|---|---|---|---|
| நிறைகுடம் | மருத்துநீர் | புனிதமாக | வழிபாடுகள் | புத்தாடை |
| வீடாகும் | வேண்டும் | இடுவோம் | காலையும் | வணங்குவோம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. நாம் கொண்டாடும் பண்டிகைகளில் ஒன்று,

1. நத்தார்
2. மகாசிவராத்திரி
3. புதுவருடப்பிறப்பு
4. ஐப்பசிவெள்ளி

ஆ. சிவவிரதங்களில் ஒன்று,

1. நவராத்திரி
2. சிவராத்திரி
3. தீபாவளி
4. விசாகம்

இ. வீட்டில் கூட்டுவழிபாடு, பிரார்த்தனைகள் நடத்துவதால் ஏற்படும் பயன்களில் ஒன்று,

1. மனஅமைதி ஏற்படுதல்
2. வீண்செலவேற்படுதல்
3. நேரவிரயம்
4. செல்வம் நிறையும்

ஈ. வீட்டில் மங்களநிகழ்ச்சிகளின் போது நிறைகுடம்,

1. வைப்பதில்லை
2. வைக்கமாட்டார்கள்
3. வைப்பர்
4. வாங்குவர்

உ. வீட்டில் நிகழும் மங்கள நிகழ்ச்சி ஒன்று,

1. சமக்கிரியை
2. பிதிர்க்கடன்
3. புதுமனை புகுவிழா
4. சிவராத்திரி

4. விடை எழுதுங்கள்.

அ. உங்கள் வீட்டுச் சுவாமி அறையில் இருக்கும் சுவாமி படங்கள் எவை?

.............................................................................................................

.............................................................................................................

ஆ. வீட்டில் சமயக்கிரியைகள், விரதங்கள் நிகழும்போது எவ்வாறு அலங்கரித்தல் வேண்டும்?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. வீட்டில் மங்கள நிகழ்ச்சிகள் நிகழும் போது என்ன செய்ய வேண்டும்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஈ. சுவாமி படத்தின் முன் காணப்படும் பொருட்கள் எவை?

..........................................................................................

..........................................................................................

உ. வீட்டில் நிகழும் மங்கள நிகழ்ச்சி இரண்டு எழுதுக.

..........................................................................................

..........................................................................................

- செயற்பாடு:

அ. பூரண கும்பம் ஒன்றின் படத்தை வரையுங்கள்.

ஆ. உங்கள் வீட்டில் நிகழ்ந்த மங்கள நிகழ்ச்சி ஒன்று பற்றி எழுதுங்கள்.

இ. சித்திரைப் புதுவருடப்பிறப்பின் போது வீட்டில் பின்பற்றிய சமயப் பழக்க வழக்கங்களை எழுதுங்கள்.

ஈ. பின்வரும் செயற்பாடுகளை வகுப்பறையில் செய்து காட்டுக.

1. நிறைகுடம் வைத்தல்
2. கோலம் போடுதல்
3. மாவிலை போடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய கருமங்கள்



- நாம் நாளாந்தம் செய்யும் செயற்பாடுகள் யாவும் நித்திய கருமங்கள் எனப்படும்.
- நாம் செய்ய வேண்டிய நித்திய கருமங்கள் பல உள்ளன. அவற்றுட் சில வருமாறு:

  1. அதிகாலையில் நித்திரை விட்டெழல்.
  2. எழும்பும் போது இறைவனை நினைத்துக் கொண்டு எழுதல்.
  3. காலைக்கடன்களை முடித்து, நீராடி, தூய ஆடை அணிதல்.
  4. விபூதி, உருத்திராக்கம் முதலான சிவசின்னங்களை அணிந்து கொண்டு இறைவனை வழிபடல்.
  5. விபூதியை உத்தூளனமாக (பரவிப்பூசுதல்) அல்லது திரிபுண்டரமாக (மூன்று குறிகளுடன்) தரித்தல்.
  6. இறைவனை வழிபடும்போது சுவாமி அறையில் அல்லது அதற்குரிய இடத்தில் பக்தி சிரத்தையுடன் தீபமேற்றி, நீரும் பூவும் வைத்து, தூப, தீபங்களைக் காட்டி, திருமுறைப் பாடல்களைப் பாடி வழிபடுதல், அயலவர், நண்பர்கள், குடும்பத்தினர் அனைவரதும் நலம் வேண்டிப் பிரார்த்தித்தல்.

- காலையும் மாலையும் இறைவனை வழிபட்டபின் நாம் பெற்றோரின் கால்களில் வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.
- பெற்றோரே நம் கண்கண்ட தெய்வங்கள்.
- அவர்களது ஆசிமொழிகள் நம்மை நன்கு வாழ வைக்கும்.
- நித்திய கருமங்களில் ஒன்று புனிதம் பேணுதலாகும்.
- வழிபாடு செய்யும் இடங்கள், வீடு, சுற்றாடல் எல்லாவற்றையும் புனிதமாக வைத்திருத்தல் நல்ல செயலாகும்.
- நாம் உணவு உண்ணத் தொடங்குமுன் இறைவனை நினைந்து வணங்க வேண்டும். அவன் அருளாலேயே உணவு கிடைக்கின்றது என எண்ண வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உணவு உண்ணத் தொடங்கும் போது பின்வரும் தேவாரத்தையும், புராணத்தையும் பாடுதல் நல்ல பழக்கமாகும்.

  1. "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்..."

  2. " மண்ணிற் பிறந்தார் பெறும் பயன்..."

- நாம் உண்ணும் உணவின் ஒரு பகுதியை பசு, காகம், கோழி முதலிய பிராணிகளுக்கு இடுதல் நல்லது. வீண்வார்த்தைகள் பேசுதல், உணவை வீணாக்குதல் கூடாது.

- இளமைப் பருவத்தில் இருந்தே பிறர்க்கு உதவப் பழகுதல் நல்லது. ஏழைகளுக்கு, அகதிகளுக்கு உணவளிக்கவும் ஆதரவு வழங்கவும் பழகுதல் வேண்டும். தருமம் செய்யத் தவறக் கூடாது.

---

## பாடம் : 4 — வினா - விடை

---

**1. நித்திய கருமங்கள் என்றால் என்ன?**

✧ *நாம் நாளாந்தம் செய்யும் கருமங்கள் யாவும் நித்திய கருமங்கள் எனப்படும்.*

**2. கடவுளின் அருளை எவ்வாறு பெறலாம்?**

✧ *நாம் கடவுளிடத்து பக்தியுடைவர்களாக, அவரை என்றும் மறவாதவர்களாக, தரும நெறியில் வாழ்வதன் மூலம் அவரது அருளைப் பெறலாம்.*

**3. நித்திய கருமங்கள் சில எழுதுங்கள்.**

✧ 1. *அதிகாலையில் சூரியன் உதிக்குமுன் நித்திரை விட்டு எழும்புதல்.*
2. *எழும்பும் போது இறைவனை நினைத்துக் கொண்டு எழுதல்.*
3. *காலைக்கடன்களை முடித்து, நீராடி, தூய ஆடை அணிதல்.*
4. *விபூதி, உருத்திராக்கம் முதலான சிவசின்னங்களைத் தரித்தல்.*
5. *இறைவனை மெய்யன்புடன் வழிபடல்.*

**4. சிவசின்னங்கள் எவை?**

✧ 1. *விபூதி* 2. *உருத்திராக்கம்*


**5. இறைவனை வழிபடும் முறை யாது?**

✧ *சுவாமி அறையில் அல்லது அதற்குரிய இடத்தில் இறை சிந்தனையோடு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கேற்றி, பூக்களை வைத்து, தூப, தீபங்களைக் காட்டி, திருமுறைப் பாடல்களைப் பாடி வழிபடலாம். வழிபடும் போது நமக்காக மட்டுமன்றி குடும்பத்தவர், அயலவர், நண்பர் அனைவரும் நலமாக வாழ அருள் செய்யுமாறு பிரார்த்தித்தல் வேண்டும். அடியார்கள் வேண்டுவனவற்றை வேண்டியபடி ஈபவன் இறைவன். எனவே அவனிடம் நமது வேண்டுதல்களைச் சமர்ப்பிப்பது நன்று.



**6. நாம் பெற்றோரை ஏன் வணங்க வேண்டும்?**

✧ பெற்றோரே நம் கண்கண்ட தெய்வங்கள். அவர்களை வணங்கி ஆசீர்வாதம் பெறுவதன் மூலம் நமது வாழ்வு வளம் பெறும். ஆதலால் பெற்றோரை நாம் தினமும் வணங்குதல் வேண்டும்.

**7. உணவு உண்ணும் போது நாம் கடைப்பிடிக்க வேண்டியன யாவை?**

✧ உணவு உண்ணுமுன் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். உணவில் ஒரு பகுதியை பசு, காகம், கோழி முதலிய பிராணிகளுக்கும், ஏழைகளுக்கும் கொடுக்க வேண்டும். உண்ணும் போது வீண் வார்த்தைகள் பேசாதும், உணவை வீணாக்காமலும் உண்ணல் வேண்டும்.

**8. சிறியவர்களாக இருக்கும் போதே நாம் பழகிக் கொள்ள வேண்டிய நல்ல செயல் ஒன்று கூறுக.**

✧ சிறுவர்களாக இருக்கும் போதே பெற்றோரின் உதவியுடன் நாம் தருமச் செயல்களில் ஈடுபடப் பழகிக் கொள்ள வேண்டும். ஏழைகள், அகதிகள் போன்றோருக்கு உதவ வேண்டும். அவர்களுக்கு உணவளித்தல், ஆதரவு காட்டல் நமது கடமையாகும்.

**9. நாம் தினமும் செய்ய வேண்டிய கருமங்களைத் தொகுத்துக் கூறுக.**

✧ இறைவனை நினைத்தல், சிவசின்னங்களைத் தரித்தல், பிரார்த்தனை செய்தல், தருமம் செய்தல், புனிதம் பேணுதல், உணவு உண்ண முன் திருமுறை ஓதுதல், காலையும் மாலையும் கடவுளையும் பெற்றோரையும் வழிபடுதல் ஆகியவை யாவும் நாம் நாள்தோறும் செய்ய வேண்டிய கருமங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. உணவு உண்ணும் முன்பு பாடத்தக்க திருமுறைகள் இரண்டினை எழுதுங்கள்.

✧ *திருச்சிற்றம்பலம்*

*"அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்*
*பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை*
*என்னம் பாலிக்கும் மாறு கண்டின்புற*
*இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே"*

*"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்மதி சூடும்*
*அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்*
*கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்*
*உண்மையாமெனில் உலகர்முன் வருக என உரைப்பார்"*

*திருச்சிற்றம்பலம்*

---

பாடம் 4 பயிற்சி : 4

---

1. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| தினமும் செய்ய வேண்டிய கருமங்கள் | வீண் வார்த்தை பேசுதல் கூடாது. |
| நாம் கடவுளுடைய | பரவிப் பூசுதல் |
| நமது கண்கண்ட தெய்வங்கள் | பிள்ளைகள் |
| உத்தூளனமாகப் பூசுதல் | பெற்றோர்கள் |
| உணவு உண்ணும் போது | நித்திய கருமங்கள் |

2. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) சிவசின்னம் அல்லாதது,

1. விபூதி 2. தங்கமாலை
3. உருத்திராக்கம் 4. திருநீறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) நாளாந்தம் நாம் செய்யும் செயல்கள்,

1. நித்திய கருமங்கள்
2. விபூதி தரித்தல்
3. உணவுண்ணல்
4. நித்திரை செய்தல்

இ) சிறியவர்களாக இருக்கும் போதே நாம் பழக வேண்டியது,

1. விளையாட்டுக்களைப் புறக்கணித்தல்.
2. தருமச் செயல்களில் ஈடுபடல்.
3. பணம் தேடுதல்
4. பெற்றோரை மறத்தல்.

ஈ) காலையும் மாலையும் நாம் செய்ய வேண்டியது,

1. காலைக்கடன் முடித்தல்
2. உணவு உண்ணுதல்
3. கடவுளை வணங்குதல்
4. நித்திரை செய்தல்

உ) உண்ணும் உணவில் ஒரு பகுதியைப் பிராணிகளுக்கு,

1. இடக் கூடாது
2. இடுதல் வேண்டும்
3. இடுதல் நல்லதல்ல
4. இடாதீர்

3. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

அ) நாம் பக்தி உடையவர்களாக இருந்தால் ........................ அருள் செய்வார்.

ஆ) சிவசின்னங்களை நாம் ........................ கருத வேண்டும்.

இ) பெற்றோர்களின் ஆசீர்வாதம் எம்மை நன்கு ...................

ஈ) .................................... கருமங்களில் புனிதம் பேணுதல் நல்ல செயலாகும்.

உ) எச்செயலையும் ................................ செய்தல் வேண்டும்.

ஊ) ஏழைகள், அகதிகளுக்கு உதவி செய்தல் ......................

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வேண்டும் | புனிதமாக | இறைவன் | நித்திய | வாழவைக்கும் | இறை சிந்தனையுடன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.

அ) கடவுளிடம் மிகுந்த பக்தி உடையவர்களுக்கு இறையருள் கிடைக்கும். (..........)

ஆ) காலையும் மாலையும் கடவுளை வணங்குதல் வேண்டும். (..........)

இ) பிறர் நலனுக்காகப் பிரார்த்தனை செய்தல் கூடாது. (..........)

ஈ) வீட்டில் எல்லா இடங்களையும் புனிதமாக வைத்திருத்தல் வேண்டும். (..........)

உ) ஏழைகள் அகதிகள் போன்றோருக்கு உதவுதல் தகாது. (..........)

ஊ) நாம் அறம் செய்ய விரும்ப வேண்டும். (..........)

5. விடை எழுதுங்கள்.

அ) நீங்கள் தினமும் செய்யும் கருமங்களைப் பட்டியலிடுங்கள்.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

ஆ) 'சுத்தம் பேணுவோம்' என்ற தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) உங்களைத் தவிர, யார் யாருக்காகப் பிரார்த்தனை செய்வீர்கள்?

..........................................................................................

..........................................................................................

ஈ) கடவுளின் அருளை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்?

..........................................................................................

..........................................................................................

உ) உணவு உண்ணும்போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் எவை?

..........................................................................................

..........................................................................................

ஊ) நமது சமூகக் கடமையாகக் கருதப்படுவன எவை?

..........................................................................................

..........................................................................................

- செயற்பாடு:
  1. அண்மையில் நீங்கள் செய்த தருமச் செயல் ஒன்றினைப் பற்றி வகுப்பில் கூறுக.
  2. விபூதி தரிக்கும் முறைகளை வகுப்பில் செய்து காட்டுக.
  3. நன்மை தரும் பிரார்த்தனை ஒன்றினை எழுதி வகுப்பில் வாசித்துக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 5 குறிப்புக்கள்

# சமய விழுமியங்கள்



- மனித வாழ்வை மேம்படுத்தக் கடைப்பிடிக்கப்படும் பெறுமதிமிக்க, நல்ல வாழ்க்கைப் பண்புகளை விழுமியங்கள் என்பர்.
- சமயம் சார்ந்த மனிதப் பண்புகள் சமய விழுமியங்கள் ஆகும்.
- உண்மை பேசுதல், பிற உயிர்களிடத்து அன்பு செலுத்துதல், இன்னா செய்தார்க்கும் இனியன செய்தல், பெரியோரைக் கனம் பண்ணுதல், பகிர்ந்துண்ணல், தன்னம்பிக்கையை வளர்த்தல் என்பன சமயம் சார்ந்த விழுமியங்களாகும்.
- இவற்றைக் கற்பதன் மூலம் எமது வாழ்வு வளம்பெறும். நல்ல பண்புள்ளவர்களாக உருவாகுவோம். உண்மை, அன்பு, தெய்வபக்தி மிக்கவர்களாக, ஏழைகளுக்கு இரங்குபவர்களாக, சுய முயற்சியில் நம்பிக்கை கொண்டவர்களாக நாம் விளங்குவதற்கு இவ்விழுமியங்கள் வழிவகுக்கும்.

பாடம்: 5(அ) வினா-விடை

# உண்மை பேசுவோம்

1. மெய்ம்மை என்னும் கதை எந்த நூலில் உள்ளது?

✧ *இரண்டாம் பாலபாடம் என்னும் நூலில் உள்ளது.*

2. இக்கதையினை எழுதியவர் யார்?

✧ *ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்*

3. இக்கதையில் வரும் கதாபாத்திரங்கள் யாவர்?

✧ *முருகன், கிருஷ்ணன், பெரிய மனிதர்*

4. முருகனிடம் காணப்பட்ட இரண்டு நல்ல பண்புகள் எவை?

✧ *1. உண்மை பேசுதல் 2. பொய் பேசாமை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இக்கதை நமக்குப் போதிக்கும் படிப்பினை யாது?

✧ *உண்மை உயர்வு தரும் என்பதாகும்.*

6. முருகனிடம் காணப்பட்ட சிறந்த பண்புகள் எவை?

✧ *௧. உண்மை பேசுதல் ௨. பொய் சொல்லாமை ௩. பணிவு ௪. நேர்மை*

7. உண்மையைக் குறிக்கும் வேறு சொற்கள் மூன்று தருக.

✧ *௧. மெய்ம்மை, ௨. சத்தியம், ௩. வாய்மை*

8. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய நூல்கள் சில எழுதுங்கள்.

✧ *௧. சைவவினாவிடை, ௨. பாலபாடம், ௩. இலக்கணச்சுருக்கம்*

9. உண்மை பேசியதால் முருகன் பெற்ற நன்மைகள் எவை?

✧ *௧. வியாபாரம் நன்கு நடைபெற்றமை.*

*௨. பெரிய மனிதரின் பண்டகசாலையில் வேலை பெற்றமை.*

*௩. நாளடைவில் எசமானோடு வர்த்தகத்தில் ஒரு பங்காளியானமை.*

10. எசமான் என யாரைக் குறிப்பிடுவர்?

✧ *முதலாளியை*

11. முருகனை மூடன் என ஏசிய கிருஷ்ணனுக்கு அவன் அளித்த பதில் என்ன?

✧ *''கிருஷ்ணா, எனக்கு இன்று காலையில் கிடைத்த காசைப் போல இரண்டு பங்கு காசுதான் வந்தாலும், நான் ஒரு பொய் சொல்லவும் மாட்டேன். பொய்யாய் நடக்கவும் மாட்டேன். அல்லாமல், இது கடைசியிலே எனக்குத்தான் நயம். எனக்கு ஒரு வாடிக்கையாளர் அகப்பட்டார்: உனக்கொருவர் போய் விட்டார்'' என்பதாகும்.*

12. உண்மையை வலியுறுத்தும் திருக்குறள் இரண்டு எழுதுங்கள்.

✧ *''வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாது ஒன்றும்*
*தீமை இலாத சொலல்''*

*''புறம் தூய்மை நீரான் அமையும் அகம் தூய்மை*
*வாய்மையால் காணப்படும்''*

13. "இது என்ன நல்ல பழத் தேங்காயா?" என்று கேட்ட பெரிய மனிதருக்கு கிருஷ்ணன் கூறியது என்ன?

✧ *''ஆம் ஐயா, நல்ல பழக்காய், நேற்றுத்தான் பிடுங்கினது. நான்தான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரித்தேன்" என்பதாகும்.

14. பொய் பேசியதால் கிருஷ்ணனுக்கு ஏற்பட்ட நட்டம் யாது?

✧ அவனது கடையில் வியாபாரம் நடைபெறவில்லை. பெரிய மனிதர் கிருஷ்ணன் கடையில் ஒன்றுமே வாங்குவதில்லை. இதனால் கிருஷ்ணன் நட்டமடைந்தான்.

15. இக்கதையைப் படித்ததன் மூலம் நீங்கள் உணர்ந்து கொள்வன யாவை?

✧ உண்மை பேசுவோர் உயர்வடைவர். பொய் பேசுவோர் தாழ்வுறுவர். "உண்மை பேசிக் கெட்டாரும் இல்லை: பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை" என்னும் முதுமொழியினையே இக்கதை நமக்கு உணர்த்துகிறது. உ. என்றும் உண்மை பேசுவோம் என உறுதி கொள்வோம்.

16. சந்தர்ப்பம் கூறுக.

அ. "இந்த முலாம்பழம் ஒன்று தான் என்னிடத்தில் மிகுந்தது, இது நல்ல பழம்போல் தோன்றினாலும் இதில் கொஞ்சம் பழுது இருக்கின்றது ஐயா"

✧ யாரால் : முருகனால்

யாருக்கு : வாங்கவந்த பெரிய மனிதருக்கு

எச்சந்தர்ப்பத்தில் : பழத்தை வாங்குவதற்குப் பெரியவர் விலை கேட்ட வேளையில்.

ஆ. "முருகா, நீ பெரிய மூடன்: முலாம்பழத்தில் உள்ள பழுதை அந்த மனிதருக்குக் காட்டுகிறதா? நீ சொன்ன உண்மைக்காக அந்தப்பழத்தை இனி வீட்டுக்குக் கொண்டு போ"

✧ யாரால் : கிருஷ்ணனால்

யாருக்கு : முருகனுக்கு

எச்சந்தர்ப்பத்தில் : பெரிய மனிதர் முலாம்பழத்தில் உள்ள பழுதைப் பார்த்து அதை வாங்காது திரும்பிச் சென்றபோது.

இ. "பொய் சொல்வதைப் பார்க்கிலும் இது நல்லது ஐயா"

✧ யாரால் : முருகனால்

யாருக்கு : பழம் வாங்கவந்த பெரியவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சந்தர்ப்பத்தில் : "உன்னுடைய பழத்தில் உள்ள பழுதை வாங்க வருபவர்களுக்குக் காட்டுவது விற்க வந்த உனக்கு ஆகுமா?" எனப் பெரியவர் கேட்டபோது.

ஈ. "கிருஷ்ணா, எனக்கு இன்று காலையில் கிடைத்த காசைப் போல இரண்டு பங்கு காசுதான் வந்தாலும் நான் ஒரு பொய் சொல்லவும் மாட்டேன், பொய்யாய் நடக்கவும் மாட்டேன்"

✧ யாரால் : முருகனால்

யாருக்கு : கிருஷ்ணனுக்கு

எச்சந்தர்ப்பத்தில் : முருகா, நீ பெரிய மூடன் என்று முருகனைப் பார்த்துக் கிருஷ்ணன் கூறிய போது

பாடம் : 5 (அ) பயிற்சி : 5

1. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ. ........................................ பேசுதலும் சிறந்த விழுமியப் பண்புகளில் ஒன்றாகும்.

ஆ. முருகன் உண்மை பேசி ..............................................

இ. கிருஷ்ணன் பொய் பேசியதால் .................... அடைந்தான்.

ஈ. நன்கு பழுக்காத தேங்காயை ................................ என்பர்.

உ. உண்மை பேசி ............................................ வாழ்வோம்.

ஊ. முருகனிடம் நல்ல ................................ வாங்கலாம் எனப் பெரிய மனிதர் கண்டு கொண்டார்.

| | | |
|---|---|---|
| உத்தமராக | உண்மை | நட்டம் |
| முட்டுக்காய் | உயர்வடைந்தான் | பொருள்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய நூல் அல்லாதது,

1. சைவவினாவிடை
2. இலக்கணச்சுருக்கம்
3. பாலபாடம்
4. நல்வழி

ஆ. உண்மை பேசி உயர்வடைந்த சிறுவனின் பெயர்,

1. கிருஷ்ணன்
2. கண்ணன்
3. முகுந்தன்
4. முருகன்

இ. கிருஷ்ணன் விற்பனை செய்த பொருள்,

1. பழங்கள்
2. காய்கறிகள்
3. தேங்காய்
4. இளநீர்

ஈ. பெரிய மனிதர் கிருஷ்ணன் கடைப்பக்கம் போகாமைக்குக் காரணம்,

1. அவன் உண்மை பேசியதால்
2. அவன் பொய் சொல்லாமையால்
3. அவன் பொய் சொன்னமையால்
4. அவனிடம் தேங்காய்கள் இல்லாமையினால்

உ. பொய் பேசியதால் கிருஷ்ணனுக்கு ஏற்பட்ட பயன்,

1. அவனுடைய கடையில் வியாபாரம் நடைபெறவில்லை.
2. பெரிய மனிதர் முருகனுடைய கடையிலேயே பொருள்களை வாங்கிச் சென்றார்.
3. வியாபாரம் நடைபெறாமையினால் நட்டமடைந்தான்.

3. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| பாலபாடம் | விழுமியங்கள் |
| உண்மைபேசி | கிருஷ்ணன் |
| பெறுமதிமிக்க வாழ்க்கைப் பண்புகள் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் |
| "பொய் சொல்வதிலும் இது நல்லது ஐயா" | உயர்வடைவோம் |
| "நல்ல பழக்காய், நேற்றுத்தான் பிடுங்கினது" | முருகன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொருத்தமான எழுத்துக்களைக் கட்டங்களுள் எழுதுங்கள்.

அ. முட்டுக்காய் என்பது நன்கு பழுக்காத

ஆ. நாம் உண்மை பேசி உத்தமராக

இ. எசமான் என அழைக்கப்படுபவர்

ஈ. உண்மை என்பதற்கு வேறு பெயர்

உ. காலையும் மாலையும் கடவுளை

ஊ எசமானோடு வர்த்தகத்தில் பங்காளி ஆனவன்

| | | | |
|---|---|---|---|
| தே | ___ | கா | ___ |
| வா | ___ | வோ | ___ |
| ___ | த | லா | ___ |
| மெ | ய் | ___ | மை |
| ___ | ண | ___ | கு |
| மு | ___ | க | ___ |

5. விடை எழுதுங்கள்.

அ. உண்மை என்பதைக் குறிக்கும் வேறு சொற்கள் மூன்று எழுதுங்கள்.

..........................................................................................

ஆ. முருகனிடம் காணப்பட்ட நல்ல பண்புகள் இரண்டு எழுதுங்கள்.

..........................................................................................

..........................................................................................

இ. உண்மை பேசி உயர்வடைந்தோர் இருவர் பெயர் தருக.

..........................................................................................

..........................................................................................

ஈ. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய நூல்கள் இரண்டின் பெயர் தருக.

..........................................................................................

உ. உண்மை பேசியதால் முருகனுக்குக் கிடைத்த நன்மைகள் எவை?

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.

அ. அரிச்சந்திரன் உண்மை பேசி உயர்வடைந்தான். (.........)

ஆ. உண்மை பேசின் நன்மை விளையும். (.........)

இ. உண்மை என்பதற்குப் பொய்ம்மை என்றும் பெயருண்டு. (.........)

ஈ. முருகன் உண்மை பேசாததால் பெரிய மனிதர் அவனை வெறுத்தார். (.........)

உ. எசமானன் என்பது முதலாளியைக் குறிக்கும். (.........)

ஊ. கிருஷ்ணன் நல்ல பழத்தேங்காய்களை விற்றான். (.........)

எ. சமய விழுமியப் பண்புகளில் உண்மை பேசுதலும் ஒன்றாகும். (.........)

- செயற்பாடு

1. உண்மை உயர்வு தரும் என்னும் தலைப்பில் கதை ஒன்று எழுதுங்கள்.
2. அரிச்சந்திரன் கதையை அறிந்து அதன் சுருக்கத்தை வகுப்பில் கூறுங்கள்.
3. உண்மையை வலியுறுத்தும் திருக்குறள் இரண்டினை எழுதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம்: 5(ஆ) குறிப்புக்கள்

## அன்பு செலுத்துதல்

- அன்பு, நேயம், நேசம், பற்று, கருணை என்பன ஒருபொருட் சொற்களாகும்.
- 'ஒருவருக்குத் தம்மோடு தொடர்புடையவராய், தமக்கு இனியவராய் உள்ளவர்களிடத்தே நிகழும் உள்ளத்தின் நெகிழ்வு அன்பு' ஆகும் என்கிறார் நாவலர்.
- அன்பு செலுத்த வேண்டியவர்களில் முதன்மையானவர் இறைவன். அவரை இடையறாது சிந்திக்க வேண்டும்.
- கடவுளால் படைக்கப்பட்ட மனிதர்கள், பிராணிகளிடமும் நாம் அன்பு செலுத்த வேண்டும்.
- சிபிச் சக்கரவர்த்தி ஒரு புறாவைக் காப்பதற்காகத் தன் தசையையே அறுத்து ஈந்தான்.
- மனுநீதிகண்ட சோழன் கன்றை இழந்த பசுவுக்கு நீதி வழங்கத் தன் மகனையே இழந்தான்.
- திருவள்ளுவர் அன்பின் பெருமையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.
- 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
  என்பும் உரியர் பிறர்க்கு' என்பது அவரது குறளாகும்.
- அன்பில்லாதவர்களது பொருட்கள் அனைத்தும் அவர்களுக்கே உரியதாகும். அன்புடையோரிடமுள்ள பொருட்கள் மட்டுமன்றி அவருடைய உடலும் (என்பும்) பிறர்க்கு உரியதாகும் என்கிறார் திருவள்ளுவர்.
- நாம் பெற்றோர், பெரியோர், சகோதரர்கள் அனைவரிடத்தும் அன்பு செலுத்த வேண்டும்.
- அன்பு, கருணை உள்ள மாணவர்களே வீட்டுக்கும் பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் மகிழ்ச்சி தருபவர்களாவர்.
- நமக்குத் தீமை செய்பவர்களிடமும் அன்பு காட்ட வேண்டும்.
- அதற்கு மோகன் எடுத்துக்காட்டாக உள்ளான். அவனது கதையைப் படியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அன்பு என்னும் கருத்துடைய வேறு சொற்கள் நான்கு எழுதுங்கள்.
*1. நேயம், 2. நேசம், 3 பற்று, 4. கருணை*

2. பருந்திடம் இருந்து புறாவைக் காத்த அரசன் யார்?
*சிபிச்சக்கரவர்த்தி*

3. கன்றை இழந்த பசுவுக்காகத் தன் மகனையே தேர்ச்சில்லின் கீழ் கிடத்தித் தேர் ஊர்ந்த மன்னன் யார்?
*மனுநீதிச் சோழன்*

4. அன்பில்லாதோருக்கும் அன்புடையோருக்கும் உள்ள வேறுபாடு யாது?
*அன்பில்லாதோரது பொருட்கள் எல்லாம் அவர்களுக்கு உரியனவாகும். அன்புடையோரது பொருட்கள் மட்டுமன்றி அவர்களது என்பும் கூடப் பிறருக்கு உரியனவாகும்.*

5. உங்கள் வீட்டில் நீங்கள் அன்பு செலுத்துகின்றவர்களின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.
*அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, பாட்டன், பாட்டி.*

6. எத்தகைய மாணவர்கள் வீடு, பாடசாலை, சமுதாயம் என்பவற்றுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றனர்?
*பெற்றோர், பெரியோர், சகோதரர்கள் முதலானோரிடம் அன்பு, கருணை காட்டும் மாணவர்கள்.*

7. மோகன் யாரிடம் அன்பு காட்டினான்?
*கூன் விழுந்த கிழவரிடம்.*

8. ஒருவர் நமக்குத் தீமை செய்தவராயின் அவருக்கு உதவலாமா?
*ஆம். நமக்குத் தீங்கு செய்தோருக்கும் நாம் நன்மை செய்ய வேண்டும். பகைவனுக்கும் அருள்வாய் நன்னெஞ்சே என்று கூறுவது நமது உயர்ந்த பண்பாகும்.*

2. சந்தர்ப்பம் கூறுக:

அ) "அவரை வைத்து என்ன செய்வது?"
*யாரால்* : *முதலாளியினால்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கு : மோகனுக்கு

எச்சந்தர்ப்பத்தில் : கிழவரை வீட்டுக்கு அழைத்து வந்த பின்னர்.

ஆ) "அவர் என்னுடன் இருக்கட்டும். அவரால் செய்யக்கூடிய வேலைகளைக் கண்டிப்பாகச் செய்ய வைக்கிறேன்"

யாரால் : மோகனால்

யாருக்கு : முதலாளிக்கு

எச்சந்தர்ப்பத்தில் : அவரை வைத்து என்ன செய்வது என்று முதலாளி கேட்ட போது.

இ) "ஏன் இந்தக் கிழவருக்காக இப்படிக் கஷ்டப் படுகிறாய்? அவர் உனக்கு உறவுக்காரரா?"

யாரால் : முதலாளியினால்

யாருக்கு : மோகனுக்கு

எச்சந்தர்ப்பத்தில் : நோய் வாய்ப்பட்டிருந்த கிழவருக்கு மோகன் அருகிலிருந்து உதவி செய்து கொண்டிருப்பதைப் பார்த்த போது.

3. இப்பாடத்தினைப் படித்ததன் மூலம் நீங்கள் அறிந்துகொண்ட உண்மைகள் எவை?

உயிர்களிடத்து நாம் அன்பு காட்ட வேண்டும். தீமை செய்தவருக்கும் நன்மை செய்தல் வேண்டும். இறைவன் மீது அன்பு கொள்ள வேண்டும். அன்பே சிவம் என்பதை உணர்தல் வேண்டும்.

---

பாடம் : 5 (ஆ) பயிற்சி : 6

---

1. விடை எழுதுங்கள்.

அ) அன்பு என்னும் சொல்லுக்கு ஒத்த கருத்துடைய சொற்கள் நான்கு தருக.

..........................................................................................................

ஆ) அன்பு என்பதற்கு நாவலர் பெருமான் தரும் விளக்கம் யாது?

..........................................................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) நாம் யாரிடம் இடையறாது அன்பு செலுத்த வெண்டும்?

.............................................................................................

ஈ) பிராணிகளிடம் அன்பு செலுத்திய அரசர் இருவரது பெயர் தருக.

.............................................................................................

.............................................................................................

உ) 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்னும் குறளின் பொருளை விளக்குக.

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

ஊ) நீங்கள் யாரிடம் அன்பு செலுத்துகிறீர்கள்?

.............................................................................................

எ) உங்கள் வீட்டில் வளர்க்கும் பிராணிகள் எவை?

.............................................................................................

ஏ) வீட்டிற்கும் பாடசாலைக்கும் சமுதாயத்திற்கும் அதிக மகிழ்ச்சியைத் தருவோர் எத்தகையோர்?

.............................................................................................

.............................................................................................

ஐ) இக்கதை எக்கருத்தை விளக்குகிறது?

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

ஒ) மோகனிடம் காணப்பட்ட சிறந்த பண்புகள் சில எழுதுக.

.............................................................................................

.............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ) மோகன் கிழவரை அழைத்துச் செல்ல விரும்பியது ஏன்?

.......................................................................................................

.......................................................................................................

ஔ) முதலாளி தன்னிடம் வேலை செய்பவரிடம் கற்றுக்கொண்ட பாடம் என்ன?

.......................................................................................................

.......................................................................................................

2. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.

அ) பருந்திடமிருந்து புறாவைக் காப்பதற்காகத் தன் உடலின் தசையையே ஈந்தான் சிபிச்சக்கரவர்த்தி. (...........)

ஆ) கன்றை இழந்த பசுவுக்காக மனுநீதிச்சோழன் நீதி வழங்கவில்லை. (...........)

இ) நாம் அன்பு, கருணை உள்ளவர்களாக விளங்க வேண்டும். (...........)

ஈ) நமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நன்மை செய்தல் வேண்டும். (...........)

உ) மோகன் தனக்குத் தீமை செய்த பகைவனுக்கும் அன்பு செய்தான். (...........)

ஊ) உயிர்களிடத்து அன்பு காட்டுதல் ஆகாது. (...........)

எ) மோகன் அன்பு வழியை நன்கு அறிந்திருந்தான். (...........)

ஏ) அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அல்லர். (...........)

3. சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) தம்மிடம் உள்ள பொருள்களால் மட்டுமன்றி உடம்பாலும் பிறர்க்கு உரியவர்,

1. அன்பிலார் 2. அன்புடையோர்

3. வருத்தமுடையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) முதலாளி மோகனுக்குப் பதவி உயர்வு வழங்கியமைக்குக் காரணம் மோகனின்,

1. விசுவாசம் 2. செல்வாக்கு 3. பணபலம்

இ) கிழவர் மோகனின் பழைய,

1. நண்பர் 2. பகைவர் 3. உறவினர்

ஈ) உயிர்களிடத்துக் காட்டும் அன்பு இறைவனிடத்துச் செலுத்தும் அன்புக்குச்,

1. சமமானது 2. பாதகமானது 3. விரோதமானது

உ) கல்லூரிப் படிப்புப் படித்தவர்களை விட மோகன் அன்பு வழியை நன்கு

1. அறியவில்லை 2. அறிந்திருந்தான்
3. தெரிந்திருக்கவில்லை

4. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ) நாம் உயிர்களிடத்து ........................................ செலுத்த வேண்டும்.

ஆ) ................................ மீது நாம் என்றும் அன்பு கொள்ள வேண்டும்.

இ) ........................................ என்பும் உரியர் பிறர்க்கு.

ஈ) கன்றை இழந்த பசுவுக்காக ....................... இரங்கினான்.

உ) மோகன் தனது பகைவனான ........................................ உதவி செய்தான்.

ஊ) ஒரு புறாவின் உயிரைக் காக்கத் தன் தசையையே அரிந்து கொடுத்தார் ....................................................................

| | | |
|---|---|---|
| கிழவருக்கு | சிபிச்சக்கரவர்த்தி | அன்பு |
| மனுநீதிச் சோழன் | அன்புடையார் | உயிர்கள் மீது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 'அன்பிலார் ......' என்னும் திருக்குறளின் பொருளை எழுதுங்கள்.

.................................................................................................

.................................................................................................


.................................................................................................

- செயற்பாடு:
  1. அன்பு என்னும் தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.
  2. சிபிச்சக்கரவர்த்தியின் கதையைத் தேடி அறிந்து வகுப்பில் வாசித்துக் காட்டுங்கள்.
  3. மனுநீதிச் சோழன் கன்றை இழந்த பசுவுக்கு இரங்கிய கதையினை வகுப்பில் கூறுக.
  4. நீங்கள் அன்பு காட்டும் பிராணிகள் குறித்து வகுப்பில் கலந்துரையாடுங்கள்.

---

பாடம்: 5 (இ) குறிப்புக்கள்

## பெரியோரைக் கனம் பண்ணுதல்



♦ நமது சமய விழுமியப் பண்புகளில் ஒன்று பெரியோரைக் கனம் பண்ணுதலாகும்.

♦ பெற்றோர், குரு, வயதில் மூத்தோர் முதலானோரைப் பெரியோர் என அழைப்பர்.

♦ வயதில் மூத்தோரை மதித்து நடத்தல் வேண்டும்.

♦ காலையிலும் மாலையிலும் கடவுளை வழிபட்ட பின்னர் நாம் பெற்றோரை வணங்குதல் வேண்டும். பெற்றோரே நம் கண்கண்ட கடவுள்கள். அவர்கள் சொற்கேட்டு நடத்தல் வேண்டும்.

♦ நாம் சைவசமயிகள். சைவசமயி ஒருவரின் கடமைகளில் பெற்றோரை, பெரியோர்களைக் கனம் பண்ணுதல் முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழந்தைப் பருவம் முதல் பெற்றோரே நம்மைப் பேணி வளர்க்கின்றனர். நமது முன்னேற்றத்திற்காக, உயர்ச்சிக்காக அவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். நமக்கு உணவு, உடை, கல்வி தந்து காத்து வருகின்றார்கள். அவர்களது உதவிகளை நாம் ஒருபோதும் மறத்தல் ஆகாது.
- நாம் பெரியவர்களாகும்போது நமது பெற்றோர் முதியோராகி விடுவர். பெற்றோரைப் பேணிக் காப்பது நமது கடமையாகும்.
- சிறுவயதிலிருந்தே பெற்றோருக்கு எம்மாலான உதவிகளைச் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.
- நாம் செய்யும் சிறிய சிறிய உதவிகள் கண்டு அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.
- நாம் பெரியோரைக் கனம் பண்ண வேண்டும்.
- பெரியோரில் குரு முதலானவர். குரு என்பது ஆசிரியரைக் குறிக்கும்.
- ஆசிரியரிடம் (குருவிடம்) நாம் மரியாதையுடனும் பயபக்தியுடனும் நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு வணக்கம் செலுத்த வேண்டும். அவர்கள் கற்பிக்கும் பாடங்களைக் கவனமாகச் செவிமடுத்துச் செயற்பட வேண்டும். அவர்கள் சொற் கேட்டுப் பணிவுடன் நடக்க வேண்டும். ஆசிரியர்களைப் போன்றே ஆலயங்களில் உள்ள சமய குருமார்களையும் வணங்கி மதித்து நடக்க வேண்டும். அவர்கள் தரும் விபூதிப் பிரசாதத்தை இரு கைகளாலும் வாங்க வேண்டும்.
- வீட்டுக்கு வரும் பெரியோரை வணங்கி இன்முகத்துடன் வரவேற்க வேண்டும். பெரியோர் வருவதைக் கண்டால் இருக்கையை விட்டு எழ வேண்டும். அவர்கள் கூறுவனவற்றை முகம் மலர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் கூறும் பணிகளை மகிழ்வுடன் செய்தல் வேண்டும்.
- அவர்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும்போது அவர்களுடன் வாயில் வரை சென்று வழி அனுப்புதல் வேண்டும்.
- விழாக்கள், விசேட பண்டிகைகள் நிகழும் போது பெரியோரைத் தேடிச் சென்று அவர்களது ஆசீர்வாதத்தைப் பெறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பேருந்து, தொடருந்து (புகைவண்டி) போன்றவற்றில் பயணம் செய்யும் போது பெரியோர், வயோதிபர், ஊனமுற்றோர் போன்றோர் வந்தால் எழுந்து அவர்களுக்கு இருக்கையினைக் கொடுத்தல் வேண்டும்.
- பெரியோர்களுக்கு முன் உயர்ந்த ஆசனத்தில் இருத்தல், காலை நீட்டிக் கொண்டிருத்தல், எதிர்த்துப் பேசுதல், கைகாட்டிப் பேசுதல் போன்றவற்றைச் செய்தல் கூடாது.
- மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோரை ஒருபோதும் மறத்தல் ஆகாது. அவர் மலரடி தொழுது வாழ்வோமாக.

---

பாடம் : 5-இ வினா - விடை

---

1. நமது சமய விழுமியப் பண்புகளில் ஒன்று கூறுக.
   *பெரியோரைக் கனம் பண்ணுதல்.*

2. பெரியோர் எனக் கூறப்படுபவர் யாவர்?
   *பெற்றோர், குரு, வயதில் மூத்தோர் முதலானோர்.*

3. காலையிலும் மாலையிலும் நாம் செய்ய வேண்டியன யாவை?
   *கடவுளை வழிபடல், பெற்றோரை வழிபடல்.*

4. சைவசமயி ஒருவரின் முக்கிய கடமைகளில் ஒன்று கூறுக.
   *பெற்றோரைப், பெரியோரைக் கனம் பண்ணுதலாகும்.*

5. குருவை நாம் எவ்விதம் கனம் பண்ணலாம்?
   1. *குரு வகுப்பறைக்குள் வரும்போது எழுந்து வணக்கம் கூறல்.*
   2. *குரு கற்பிக்கும் விடயங்களை ஆர்வத்துடன் கற்றல்.*
   3. *குரு கூறும் வேலைகளை ஒழுங்காகச் செய்தல்.*
   4. *வேறு இடங்களில் அவரைக் காணும் போது வணக்கம் கூறி மரியாதை செலுத்துதல்.*
   5. *குருவின் கட்டளைகளுக்குப் பணிந்து நடத்தல்.*

6. சமய குருமாருக்கு எவ்விதம் மதிப்பளிப்பீர்?
   1. *சமய குருமாரைக் காணும்போது வணக்கம் கூறல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨. ஆலயத்தில் விபூதி பிரசாதம் வழங்கும் போது வணங்கி இரு கைகளாலும் வாங்குதல்.

௩. பேரூந்து, தொடருந்து போன்றவற்றில் பயணம் செய்யும் போது எழுந்து அவர்களுக்கு இருக்கையளித்தல்.

௪. சமயகுருமார் வேண்டும் உதவிகளைச் செய்தல்.

**7. உங்கள் வீட்டுக்கு வரும் பெரியோரை எவ்விதம் வரவேற்பீர்?**

௧. பெரியோர் வருவதைக் கண்டதும் இருக்கையை விட்டு எழுந்து முகம் மலர்ந்து இனிய சொற்களைக் கூறி வரவேற்பேன்.

௨. அவர்களை ஆசனத்தில் அமரச் செய்து வேண்டிய பணிவிடைகளைச் செய்வேன்.

௩. அவர்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது அவர்களுடன் வாயில் வரை சென்று வழியனுப்பி வைப்பேன்.

**8. போக்குவரத்துச் செய்யும் வேளைகளில் பெரியோரை எவ்விதம் கனம் பண்ணலாம்?**

நாம் பேரூந்து, தொடருந்து போன்றவற்றில் பயணம் செய்யும் வேளைகளில் பெரியோர், வயதானவர்கள், ஊனமுற்றோர் வந்தால் உடனே எழுந்து அவர்களுக்கு இருக்கையினைக் கொடுத்தல் வேண்டும். வயது முதிர்ந்தோருக்கு உதவி தேவைப்படுமிடத்து அதனை வழங்குதல் வேண்டும்.

**9. பெரியோர் முன்னால் தவிர்க்க வேண்டிய செயல்கள் எவை?**

௧. உயர்ந்த ஆசனத்தில் இருத்தல்.

௨. கால் நீட்டிக் கொண்டு இருத்தல்.

௩. கால் மேல் கால் போட்டுக் கொண்டிருத்தல்.

௪. எதிர்த்துப் பேசுதல்.

௫. கைகாட்டிப் பேசுதல்.

௬. வீண் கதைகள் கதைத்தல்.

**10. பெற்றோரை நாம் ஏன் வணங்க வேண்டும்?**

நம்மைப் பெற்று வளர்ப்பவர்கள் பெற்றோர். நமக்கு உணவு, உடை, உறையுள் அனைத்தும் வழங்குபவர்கள் அவர்களே. நாம் நல்ல கல்வி பெற எத்தனையோ கஷ்டங்களைத் தாங்கி வழிகாட்டுபவர்கள் பெற்றோரே. நமக்குத் தேவையானவற்றை எல்லாம் உதவுபவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரே. பெற்றோரே நம் கண்கண்ட தெய்வங்கள். ஆதலால் அவர்களை நாம் காலையும் மாலையும் வணங்குதல் வேண்டும். அதுவே நமது முக்கிய கடமையாகும்.

11. **வீட்டுக்கு வரும் பெரியோரை எவ்விதம் வரவேற்றல் வேண்டும்?**

நமது வீட்டுக்கு வருகை தரும் பெரியோரைக் கண்டதும் இருக்கையை விட்டு எழுந்து வணக்கம் கூற வேண்டும். இன்முகத்துடன் வரவேற்று ஆசனத்தில் அமரச் செய்தல் வேண்டும். அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து உபசரித்தல் வேண்டும். அவர்கள் வெளியே செல்லும் போது நாமும் அவர்களுடன் வாயில் வரை சென்று அன்புடன் வழியனுப்புதல் வேண்டும்.

---

பாடம்: 5 - இ　　　　　　　　　　　　　　பயிற்சி : 7

---

1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. பெற்றோர், குரு, வயதில் மூத்தோர்,

1. பெரியோர்　　　　2. சிறியர்
3. கிழவர்　　　　4. குமரர்

ஆ. பெரியோரைக் கனம் பண்ணுதல் சிறந்த

1. பண்பாகும்　　　　2. பாவமாகும்
3. குற்றமாகும்　　　　4. மதிப்பாகும்

இ. தினமும் காலையும் மாலையும் பெற்றோரை

1. தூஷிக்கவேண்டும்　　　　2. வணங்க வேண்டும்
3. மதிக்க வேண்டும்　　　　4. தூற்ற வேண்டும்

ஈ. சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள்

1. சைவசமயிகள்　　　　2. வைணவர்கள்
3. சைனர்கள்　　　　4. பௌத்தர்கள்

உ. சிறுவயதில் இருந்தே நாம் பெற்றோருக்கு,

1. சுமையாக இருக்க வேண்டும்.
2. உதவ வேண்டும்.
3. தொல்லை கொடுக்க வேண்டும்.
4. உதவியளிக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. குருவுக்கு நாம் என்றும் மரியாதை

1. செலுத்த வேண்டும்  2. மதிக்க வேண்டும்
3. செலுத்தக் கூடாது  4. பார்க்கக் கூடாது.

**2.** விடை எழுதுங்கள்.

அ. பெரியோர் எனப்படுவோர் யாவர்?

.......................................................................................................

.......................................................................................................

ஆ. குருவுக்கு நாம் எவ்வகையில் மதிப்பளிக்கலாம்?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

இ. பெற்றோரை நாம் ஏன் வணங்க வேண்டும்?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

ஈ. பெற்றோருக்கு நாம் செய்யக்கூடிய உதவிகள் எவை?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

உ. சமயகுருமார்கள் முன் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

.......................................................................................................

.......................................................................................................

ஊ. வீட்டுக்கு வருவோரை எப்படி வரவேற்க வேண்டும்?

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. விழாக்கள், விசேட பண்டிகைகளில் நாம் யாரிடம் ஆசி பெற வேண்டும்?

..........................................................................................

ஏ. பேருந்து, தொடருந்துகளில் பயணம் செய்யும் போது நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

..........................................................................................

..........................................................................................

ஐ. நாம் பெரியோர் முன்னிலையில் தவிர்க்க வேண்டிய நான்கு செயல்களைக் குறிப்பிடுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஒ. மாதா, பிதா, குரு, தெய்வம் எனப்படுவோர் யாவர்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

3. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| குரு | தாய், தந்தையர் |
| வயதில் மூத்தோர் | சைவசமயிகள் |
| பெற்றோர் | இருக்கையை விட்டு எழுதல் வேண்டும். |
| நாம் | ஆசிரியர் |
| பெரியோரைக் கண்டால் | பெரியோர் |
| ஆசிரியரை மதித்தல் | நமது சமய விழுமியப் பண்பாகும். |
| பெரியோரைக் கனம் பண்ணுதல் | வேண்டும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொருத்தமான எழுத்துக்களைக் கட்டங்களுள் எழுதுங்கள்.

அ. குரு என அழைக்கப்படுபவர்

ஆ. ஆசிரியர் வகுப்பறைக்குள் வரும்போது நாம் கூற வேண்டியது

இ. ஆலயங்களில் குரு நமக்கு வழங்குவது

ஈ. பெரியோர்களிடம் ஆசீர்வாதம் பெறுதல்

உ. சமய விழுமியப் பண்புகளில் பெரியோரைக் கனம் பண்ணுதல் சிறந்த

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | ___ | ரி | ___ | ர் |
| வ | ___ | க் | க | ___ |
| ___ | ர | சா | ___ | ம் |
| ந | ___ | றா | ___ | ம் |
| ___ | ண் | பா | ___ | ___ |

5. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.

| | | | |
|---|---|---|---|
| மதித்து | வரவேற்றல் | வேண்டும் | பெரியோர் |
| எழுந்து | ஆசீர்வாதம் | நடத்தல் | பெற்றோரை |

அ. வீட்டுக்கு வரும் பெரியோர்களை முகம் மலர்ந்து ................................... வேண்டும்.

ஆ. பெரியோர்களின் ........................... நமக்கு நன்மை தரும்.

இ. ஆசிரியர், சமயகுருமார் ஆகியோருக்கு நாம் மதிப்பளிக்க ...................................

ஈ. .................. காலையும் மாலையும் வணங்க வேண்டும்.

உ. பெரியோர் முன் நாம் பணிவாக ...................... வேண்டும்.

ஊ. ஆசிரியர் வகுப்பறைக்குள் வரும்போது .......................... வணங்குதல் வேண்டும்.

எ. ............... முன் காலை நீட்டிக் கொண்டிருத்தல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.

அ. நாம் பெற்றோர், பெரியோர், குரு முதலானோரை மதித்தல் கூடாது. (............)

ஆ. பாடசாலை அதிபர், ஆசிரியர்களைக் கனம் பண்ணுதல் வேண்டும். (............)

இ. பெரியோருக்கு முன் செய்யத் தகாத செயல்களைச் செய்தல் வேண்டும். (............)

ஈ. உதவி தேவைப்படுவோருக்கு உதவுதல் நல்ல செயலாகும். (............)

உ. வீட்டில் உள்ள மூத்தோருக்கு நாம் மதிப்பளிக்க வேண்டியதில்லை. (............)

ஊ. பெரியோரைக் கனம் பண்ணுதல் சிறந்த பண்பாகும். (............)

- செயற்பாடு:

1. உங்கள் வீட்டுக்குப் பெரியோர் ஒருவர் வருகிறார். அவரை வரவேற்று உபசரிக்கும் முறையினை வகுப்பில் செய்து காட்டுக.
2. பாடசாலையில் உள்ள அதிபர், ஆசிரியர்களை எவ்வாறு கனம் பண்ணுகிறீர்கள் என்பதைக் (கொப்பியில்) எழுதுக.
3. ஆலயத்தில் குருக்கள் விபூதி பிரசாதம் தருகிறார். அதனை எவ்வாறு பெறுவீர் என்பதை வகுப்பில் செய்து காட்டுக.
4. தினந்தோறும் காலையும் மாலையும் பெற்றோரை வீழ்ந்து வணங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம்: 5 (ஈ) குறிப்புக்கள்

# பகிர்ந்துண்ணல்

- பகிர்ந்துண்ணல சமய விழுமியப் பண்புகளில் ஒன்றாகும்.
- இதனையே அறம், தர்மம் என நமது முன்னோர் அழைத்தனர்.
- அறம் செய விரும்பு, ஐயமிட்டுண் என்பன ஔவையார் வாக்கு
- பசி என்று வந்தோருக்கு நாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி உணவைக் கொடுத்து, பகிர்ந்துண்ணல் எல்லோராலும் செய்யக்கூடிய அறமாகும்.
- இதனையே திருமூலர்,

  ''யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
  யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
  யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
  யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே'' என்னும் திருமந்திரப்பாடலில் சுட்டிக் காட்டியுள்ளார்.
- திருவள்ளுவரும் மக்கள் செய்ய வேண்டிய அறங்களில் ஒன்றாகப் பகிர்ந்துண்ணலைக் குறிப்பிட்டுள்ளார்.
- ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
  தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' - என்பது வள்ளுவர் வாக்கு.
- தமக்குக் கிடைத்த உணவை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதலாகும் என்பது இக்குறளின் பொருளாகும்.
- இல்வாழ்வான் கடமைகளில் ஒன்று விருந்தோம்பல்.
- தன்னிடத்தே விருந்தாளியாக வந்தவனுக்கு விருந்தளித்து உபசரித்து, அதன்பின் வரக்கூடிய விருந்தாளியை உடனிருந்து உண்பதற்கு எதிர்பார்க்கும் இல்லறத்தான் மறுபிறப்பில் தேவனாகித் தேவர்களுக்கு விருந்தினனாகப் போற்றப்படுவான் என்கிறார் வள்ளுவர்.

  ''செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
  நல்விருந்து வானத் தவர்க்கு.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நமது சமயகுரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்டபோது இறைவன் துணையோடு பஞ்சத்தை நீக்கி மக்களைப் பாதுகாத்தார்கள்.
- நாமும் தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு, தீபாவளி பண்டிகைகளின் போது உறவினர், நண்பர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவுப்பொருட்களை வழங்கி வருகிறோம். இப்பண்பினை நாம் வளர்த்தல் வேண்டும்.
- பாடசாலையிலும் வீட்டிலும் பகிர்ந்துண்ணும் பண்பு வளரவேண்டும்.

---

**பாடம் : 5 (ஈ)** **வினா - விடை**

---

1. ஆத்திசூடி பாடியவர் யார்?

✧ *ஔவையார்*

2. 'அறம் செய விரும்பு' என்றால் என்ன?

✧ *நீ தருமம் செய்ய விரும்புவாயாக என்பதாகும்.*

3. நமது சமய விழுமியப் பண்புகளில் ஒன்று கூறுக.

✧ *பகிர்ந்துண்ணல்*

4. பகிர்ந்துண்ணலைத் திருமூலர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

✧ *'இறைவர்க்கொரு பச்சிலை, பசுவுக்கொரு வாயுறை, உண்ணும் போது ஒரு கைப்பிடி' எனக் குறிப்பிடுகிறார்.*

5. திருவள்ளுவர் பகிர்ந்துண்ணல் பற்றிக் கூறியுள்ளதைத் தருக.

✧ *'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' - என்கிறார்.*

6. தேவர்களுக்கு விருந்தினனாகப் போற்றப்படும் தகுதி யாருக்குக் கிடைக்கும்?

✧ *தன்னிடத்தே வந்த விருந்தாளிக்கு உணவளித்து உபசரித்து, அதன் பின் வரக்கூடிய விருந்தாளியை உடனிருந்து உண்பதற்கு எதிர் பார்க்கும் இல்லறத்தானுக்குக் கிடைக்கும் என்கிறார் திருவள்ளுவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. திருவீழிமிழலையில் பஞ்சம் நிலவிய போது அதனைப் போக்க உணவளித்துதவிய நாயன்மார்கள் யாவர்?

✧ 1. *திருஞானசம்பந்தர்* ௨. *திருநாவுக்கரசர்*

8. நாம் கொண்டாடும் பண்டிகைகள் சில தருக.

✧ *தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு, தீபாவளி*

9. இப்பண்டிகைகளின் போது நாம் செய்யும் தருமம் யாது?

✧ *உறவினர், நண்பர்கள், ஏழைகளுக்கு உணவுப்பொருள்களைப் பகிர்ந்தளிக்கிறோம்.*

10. வீட்டிலும் பாடசாலையிலும் வளர்க்கப்படவேண்டிய பண்பு எது?

✧ *பகிர்ந்துண்ணல், தருமம் செய்தல் ஆகியனவாம்.*

11. சைவாலயங்களில் பகிர்ந்துண்ணல் பண்பு எவ்விதம் வளர்க்கப்படுகிறது?

✧ *பிரசாதம் கொடுத்தல், பஞ்சாமிர்தம் கொடுத்தல், அன்னதானம் வழங்குதல் போன்றவற்றின் மூலம் பகிர்ந்துண்ணல் பண்பு வளர்க்கப்படுகிறது.*

---

பாடம் : 5 (ஈ) பயிற்சி : 8

---

1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. 'அறம் செய விரும்பு' என வலியுறுத்துபவர் யார்?

1. ஔவையார் 2. திருவள்ளுவர் 3. திருமூலர்

ஆ. 'அறம் செய விரும்பு' என வலியுறுத்தும் நூல்

1. மூதுரை 2. ஆத்திசூடி 3. நல்வழி

இ.திருமந்திரம் என்னும் நூலை அருளியவர்

1. திருவள்ளுவர் 2. ஔவையார் 3. திருமூலர்

ஈ. பகிர்ந்துண்ணலை வலியுறுத்தும் நூல்

1. கொன்றைவேந்தன் 2. திருக்குறள்
3. திருவிசைப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. பகிர்ந்துண்ணலுடன் தொடர்புடைய பண்டிகை ஒன்று,

1. மகாசிவராத்திரி 2. வைகாசிவிசாகம்
3. சித்திரைப் புத்தாண்டுப்பிறப்பு

ஊ. எல்லோராலும் இலகுவில் செய்யக்கூடிய தருமம் ஒன்று,

1. உண்ணும் போது ஒரு கைப்பிடி உணவு வழங்கல்
2. உடை வழங்கல் 3. நகை வழங்கல்

2. விடை எழுதுங்கள்.

அ. இன்றைய சமூகத்தில் வளர்க்கப்படவேண்டிய பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

........................................................................................................

ஆ. 'உண்ணும் போது ஒரு கைப்பிடி' என்னும் திருமூலரின் கூற்றை விளக்குக.

........................................................................................................

........................................................................................................

இ. பகிர்ந்துண்ணலின் சிறப்பை விளக்கும் திருக்குறள் இரண்டினை எழுதுக.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

ஈ. சைவ ஆலயங்களில் பகிர்ந்துண்ணல் பண்பு எவ்வகையில் வளர்க்கப்படுகிறது?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

உ. பகிர்ந்துண்ணல் பண்பினை வலியுறுத்தும் நூல்கள் நான்கின் பெயர் தருக.

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| ஐயமிட்டுண் | சித்திரை |
| புத்தாண்டுப்பிறப்பு | திருமூலர் |
| விருந்தோம்புதல் | நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. |
| பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் | இல்லறத்தான் கடமை |
| திருமந்திரம் | ஆத்திசூடி |

4. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ. திருமந்திரம் என்னும் நூலைத் ................ அருளியுள்ளார்.

ஆ. விருந்தோம்பல் இல்வாழ்வானின் கடமைகளில் ...............

இ. பசி என்று வந்தோருக்கு ................................ அளித்தல் சிறந்த தருமமாகும்.

ஈ. ............................................ வழங்கப்படும் அன்னதானம் பகிர்ந்துண்ணல் பண்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

உ. நாம் சிறுபருவத்தில் இருந்து .......................... உண்ணப் பழகுதல் வேண்டும்.

ஊ. பகிர்ந்துண்ணல் சிறந்த அறப் ..........................................

எ. பகிர்ந்துண்ணும் பண்பை நாம் .........................வேண்டும்.

ஏ. சைவாலயங்களில் பகிர்ந்துண்ணும் பண்பு வளர ............

ஐ. தருமம் தலை.................................... என்பது முதுமொழி.

ஒ. ............................ . செய விரும்பு என்றார் ஔவையார்.

| | | | | |
|---|---|---|---|---|
| பகிர்ந்து | திருமூலர் | உணவு | ஆலயங்களில் | ஒன்றாகும் |
| அறம் | பண்பாகும் | வேண்டும் | காக்கும் | வளர்த்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 5 (உ) குறிப்புக்கள்

# தன்னம்பிக்கையை வளர்த்தல்

- ஒருவருக்குத் தன்மீது ஏற்படும் நம்பிக்கை தன்னம்பிக்கை ஆகும்.
- முயற்சியும் இறைநம்பிக்கையும் திட்டமிட்ட பயிற்சியும் நமது தன்னம்பிக்கையை வளர்க்கும்.
- பயிற்சி உயர்ச்சி தரும்.
- தன்னம்பிக்கையும் முயற்சியும் என்றுமே தோல்வி அடைவது இல்லை.
- 'நம்பினோர்க்கு இயற்கை நலமே செய்யும்', 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்', 'முயற்சி திருவினையாக்கும்' என்பன முதுமொழிகள்.
- இம்முதுமொழிகள் முயற்சியின் சிறப்பையே வலியுறுத்துகின்றன.
- 'முடியாது' என்பது நமது வார்த்தையில் இருக்கவே கூடாது.
- எதையும் என்னால் செய்ய முடியும் என்று எண்ணுதல் வேண்டும்.
- உண்மை பேச முடியும், பெரியோரைக் கனம் பண்ண முடியும், ஆசியருக்குப் பணிவுள்ளவர்களாக, நல்ல மாணவர்களாக நாம் திகழ முடியும்.
- மற்றவர்களுடன் பகிர்ந்துண்டு, ஒற்றுமையை வளர்க்க முடியும்.
- இவ்வாறு சிந்திப்பீர்களானால் உங்களால் முடியாதது ஒன்றும் இல்லை என்ற நிலைக்கு வருவீர்கள்.
- தன்னம்பிக்கைதான் பெருந்தலைவர்களை, வீரர்களை உருவாக்கியது.
- காந்தியின் தன்னம்பிக்கைதான் அவரை 'மகாத்மா' ஆக்கியது.
- அரிச்சந்திரனின் தன்னம்பிக்கைதான் அவரை வாய்மையின் வடிவமாக்கியது.
- நெப்போலியனின் தன்னம்பிக்கைதான் அவனை மாவீரானாக்கியது. 'முடியாது என்ற சொல் என் அகராதியில் இல்லை' என்று அவனைப் பேச வைத்தது. 'நம்பிக்கை என்ற சொல்லின் முன்னால் கஷ்டங்கள் எல்லாம் சரிந்து விடும்' என்னும் அவனது வார்த்தை நம் அனைவருக்கும் நல்ல வழிகாட்டியாகும்.
- தன்னம்பிக்கையுடன் வாழ்வில் வெற்றி பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தன்னம்பிக்கை என்றால் என்ன?

✧ ஒருவருக்குத் தன்மீது ஏற்படும் நம்பிக்கை தன்னம்பிக்கை ஆகும்.

2. தன்னம்பிக்கையை வளர்ப்பன எவை?

✧ 1. முயற்சி 2. இறைநம்பிக்கை 3. திட்டமிட்ட பயிற்சி. இவை அத்தனையும் தன்னம்பிக்கையை வளர்க்க உதவும்.

3. முயற்சியினை வலியுறுத்தும் முதுமொழிகள் சில தருக.

✧ 1. நம்பினோர்க்கு இயற்கை நலமே செய்யும்.

2. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

3. முயற்சி திருவினையாக்கும்.

4. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.

4. முன்னேற விரும்புவோர் மனதில் கொள்ள வேண்டிய உறுதி யாது?

✧ எதையும் முடியாது எனக் கருதக் கூடாது. எதையும் என்னால் செய்ய முடியும் என உறுதி பூண வேண்டும். முயன்றால் முடியாதது எதுவும் இல்லை என்ற நம்பிக்கை - மன உறுதி கொள்ள வேண்டும்.

5. நல்ல மாணவர்களிடம் காண வேண்டிய பண்புகள் எவை?

✧ 1. உண்மை பேசுதல். 2. பெரியோரைக் கனம் பண்ணுதல். 3. ஆசிரியருக்குப் பணிந்து நடத்தல். 4. மற்றவர்களுடன் பகிர்ந்துண்டு பழகுதல். 5. ஒற்றுமை பேணுதல்.

6. காந்திஜீயை 'மகாத்மா' ஆக்கியது எது?

✧ அவரது தன்னம்பிக்கையும் தியாக மனப்பான்மையும்.

7. அரிச்சந்திரனை வாய்மைக்குறைவிடமாகக் கூறுவதற்குக் காரணம் என்ன?

✧ அவனது தன்னம்பிக்கையும் உண்மை பேசும் உறுதியும்.

8. நெப்போலியனின் தன்னம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வாக்கியம் ஒன்று எழுதுக.

✧ "நம்பிக்கை என்ற சொல்லின் முன்னால் கஷ்டங்கள் எல்லாம் சரிந்து விடும்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தன்னம்பிக்கை குறித்து சுவாமி விவேகானந்தர் கூறியவற்றைத் தருக.

✧ *"நான் என் மூதாதையரின் காரணமாக பெருமை கொள்கிறேன். பழமையைப் படிக்கப் படிக்க இந்தப் பெருமை இன்னும் அதிகரிக்கின்றது. அது எனக்கு வலிமையையும் வீர நம்பிக்கையையும் தருகிறது. இறைவன் அருளால், அதே பெருமிதம் உங்களுக்கும் உண்டாகட்டும். உங்களது முன்னோர்களிடமிருந்த நம்பிக்கை உங்கள் உதிரத்தில் கலக்கட்டும். அது உங்கள் வாழ்க்கையோடு பிரிக்க முடியாத பகுதியாக விளங்கட்டும். அது உலகை உய்விக்கத் தொண்டு புரியும்படி உங்களைத் தூண்டட்டும்".*

10. 'நம்பினோர் கெடுவதில்லை, நான்கு மறைத் தீர்ப்பு' - இவ்வாறு பாடியவர் யார்?

✧ *சுப்பிரமணிய பாரதியார்.*

---

பாடம் : 5 (உ) பயிற்சி : 9

---

1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) தன்னம்பிக்கை என்றால்,

1. தன் மீது கொள்ளும் நம்பிக்கை.
2. பிறர் நம்மீது கொள்ளும் நம்பிக்கை.
3. பிறரது உதவியைப் பெறல்.
4. பிறரை நம்பாமை.

ஆ) தோல்வியடையாதவை என்றால்,

1. பிறர் நமக்குத் தரும் ஆதரவு
2. நமது முயற்சி
3. நமது தன்னம்பிக்கையும் முயற்சியும்
4. பயிற்சி

இ) முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பது,

1. புதுமொழி 2. முதுமொழி
3. இணைமொழி 4. தனிமொழி

ஈ) நாம் வளர்க்க வேண்டிய பண்பு அல்லாதது,

1. ஒற்றுமை 2. உண்மை பேசுதல்
3. பெரியோரைக் கனம் பண்ணல் 4. பணிவின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) பெருந்தலைவர்களை, வீரர்களை உருவாக்கியது,

1. அவர்களது பணபலம்
2. அவர்களது செல்வாக்கு
3. அவர்களது தன்னம்பிக்கையும் முயற்சியும்
4. அவர்களது பயிற்சி

2. விடை எழுதுங்கள்.

அ) வாய்மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் யார்?

..................................................................................................

ஆ) தன்னம்பிக்கையின் மூலம் பெருந்தலைவனானவன் ஒருவன் பெயர் தருக.

..................................................................................................

இ) காந்திஜீயை 'மகாத்மா' ஆக்கியது எது?

..................................................................................................

ஈ) தன்னம்பிக்கையை வளர்ப்பன எவை?

..................................................................................................

..................................................................................................

உ) வாழ்வில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

ஊ) தன்னம்பிக்கை குறித்து சுவாமி விவேகாநந்தர் கூறிய வார்த்தைகள் எவை?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ) நீங்கள் உங்களது தன்னம்பிக்கையை எவ்வாறு வளர்த்துக்கொண்டீர்கள் என்பதை எழுதுங்கள்.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

- செயற்பாடு:

1. தன்னம்பிக்கையை வளர்ப்போம் என்னும் தலைப்பில் ஐந்து நிமிடம் வகுப்பில் உரை நிகழ்த்திக் காட்டுக.
2. தன்னம்பிக்கை மூலம் உயர்வடைந்தோர் சிலர் குறித்த விபரங்களைச் சேகரித்து வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
3. தன்னம்பிக்கையால் உயர்வடைந்த ஒரு பெரியார் பற்றி பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் சடங்குகள்

- மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சடங்குகள் உள்ளன.
- அவை மனித வாழ்வை அர்த்தத்துடனும் நெறிமுறை தவறாதும் வாழ வேண்டும் என்ற நோக்குடன் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.
- உலக வாழ்க்கைக்கான தேவைகளை அர்த்தத்துடன் அடைய முயற்சிக்கும் வழிமுறைகளே சடங்குகளாகும்.
- சைவ சமயத்தவர்கள் பல சடங்குகளை நடத்துவர். அவை நமது வாழ்வியலோடு தொடர்புடையனவாகும்.
- மக்களின் வாழ்வுடன் தொடர்புபடும் சடங்குகளை வாழ்வியல் சடங்குகள் என்பர்.
- பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டுதல், சோறூட்டுதல், ஏடு தொடக்குதல் முதலானவை வாழ்வியல் சடங்குகளுள் சிலவாகும்.

## அ. பெயர் சூட்டுதல்



- பெயர் சூட்டும் சடங்கு நாமகரணம் எனவும் வழங்கப்படும்.
- குழந்தை பிறந்த ஒரு மாத காலத்தினுள் பெயர் சூட்டுதல் வேண்டும்.
- முன்பு தெய்வங்களின் பெயர்களையே அதிகமாகச் சூட்டும் வழக்கம் இருந்தது.
- தற்போது அவ்வழக்கம் குன்றி வருகின்றது.
- குழந்தை பிறந்த நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு முதல் எழுத்தைத் தெரிவு செய்து பெயரிடும் வழக்கம் சைவசமயத்தவர்களிடையே உண்டு.
- பெயரிடுதல் தொடர்பான விளக்கத்தைப் பஞ்சாங்கத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ நமது கலாசாரத்தைப் பேணும் வகையிலான பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்டுதல் நல்லது.

♦ பெயர் சூட்டல் சடங்கானது ஒரு நல்ல நாளில் பெரியோர்கள் முன்னிலையில் நடைபெறும். முதலில் இறைவழிபாடு நடத்தப்படும். பின்னர் தெரிந்தெடுத்த பெயரைக் குழந்தையின் தந்தை அல்லது மாமன், குழந்தையின் காதில் மூன்றுமுறை கூறுவார். சூழ்ந்திருக்கும் பெரியோர்களும் அதனை ஏற்றுச் சொல்வர்.

## ஆ. சோறூட்டுதல்

♦ குழந்தை பிறந்த ஆறாவது மாதத்தில் சோறூட்டும் சடங்கு நடைபெறும். அச்சடங்கினை அன்னப்பிராசனம் எனவும் அழைப்பர்.



♦ சோறு (அன்னம்), தயிர், நெய், தேன் என்பவற்றைக் கலந்து முதன் முதலாகக் குழந்தைக்கு ஊட்டிவிடுதல் சோறூட்டல் எனப்படும். இதற்குரிய பொருத்தமான நாளினைப் பஞ்சாங்கத்தில் பார்த்துத் தெரிவு செய்வர்.

♦ சோறூட்டல் சடங்கு வீடு, ஆலயம் முதலான இடங்களில் நடைபெறும்.

♦ சோறூட்டல் சடங்கின் போது தாயார் குழந்தையை மடியில் வைத்திருப்பார். தந்தையார் அருகில் இருப்பார். சோறூட்டல் சடங்கு விநாயகர் பூசையுடன் ஆரம்பமாகும். ஒரு கிண்ணத்தில் சோறு, தயிர், நெய், தேன் என்பனவற்றைப் பிசைந்து, பூசையில் வைப்பர். பூசை பூர்த்தியுற்றதும் பிரசாதத்தை எடுத்து தந்தை அல்லது மாமன் குழந்தைக்கு சிவசிந்தையுடன் மூன்று முறை ஊட்டி விடுவார். அதைத்தொடர்ந்து மற்றவர்களும் ஊட்டுவர்.

♦ குழந்தை உடல் வலிமையோடு வாழ்நாளில் உணவுக்கு எந்தக் குறையுமின்றி உண்டு வாழ இறையருளைப் பிரார்த்தித்தலே இச்சடங்கின் முக்கிய நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ. ஏடுதொடக்குதல்

வ ஏடுதொடக்குதலை 'வித்தியாரம்பம்', 'அட்சர அப்பியாச ஆரம்பம்' என்றும் அழைப்பர்.



- குழந்தைக்கு மூன்று வயதானதும் விஜயதசமி அன்று அல்லது பஞ்சாங்கம் குறிப்பிடும் வேறு நல்ல நாளில் முதன் முதலில் கல்வி புகட்டுதல் ஏடுதொடக்கல் எனப்படும்.
- ஆலயம், வீடு, பாடசாலை ஆகிய இடங்களில் ஏடுதொடக்குதல் நிகழ்வு நடைபெறும்.
- சமயகுரு, குழந்தையின் தந்தை, ஆசிரியர், நல்ல கல்வி அறிவுள்ள பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவர் ஏடு தொடக்கி வைத்தல் சிறப்பானதாகும்.
- ஏடுதொடக்கும் போது குழந்தையை முதலில் விநாயகரையும் சரஸ்வதிதேவியையும் வணங்கச் செய்ய வேண்டும்.
- ஏடுதொடக்குபவரும் வணங்குவார். ஏடு தொடக்குபவர் வேட்டி அணிந்து, விபூதி தரித்து குழந்தையைத் தனது மடியில் இருக்கச் செய்து முன்னால் உள்ள தட்டத்தில் வைக்கப்பட்ட அரிசியில் குழந்தையின் விரலைப் பிடித்து 'அ' முதல் 'ஃ' வரையுள்ள எழுத்துக்களை எழுதுவதும் அதனைச் சொல்விப்பதும் நமது சமய மரபாகும்.
- சமயம் நமது வாழ்வியலோடு இணைந்தது. வாழ்வியல் சடங்குகள் அதனையே நமக்கு நினைவூட்டுகின்றன.

---

**பாடம்: 6** வினா - விடை

---

**1. வாழ்வியல் சடங்கு என்றால் என்ன?**

✧ *வாழ்வியல் சடங்கு என்பது மனிதன் உலக வாழ்க்கைக்கான தேவைகளை அர்த்தத்துடன் அடைய முயற்சிக்கும் வழிமுறையாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. சைவசமயிகள் கொண்டாடும் சடங்குகள் நான்கு தருக.**

✧ 1. பெயர் சூட்டுதல் 2. சோறூட்டல் 3. ஏடுதொடக்குதல் 4. புதுமனை புகுதல்

**3. வாழ்வியல் சடங்குகள் நடைபெறும் போது முக்கியத்துவம் பெறுவன எவை?**

✧ 1. கிரியைகள் 2. இறைவழிபாடு 3. பகிர்ந்துண்ணல்

**4. சோறூட்டல் சடங்கின் முக்கிய நோக்கம் யாது?**

✧ *குழந்தை வாழ்நாளில் உணவுக்கு எந்தக் குறையுமின்றி உண்டு வாழ இறையருளை வேண்டிப் பிரார்த்தித்தலாகும்.*

**5. ஏடுதொடக்கும் முறையை விளக்குக.**

✧ *ஏடுதொடக்கும் போதுகுழந்தையை முதலில் விநாயகரையும், சரஸ்வதி தேவியையும் வணங்கச் செய்வர். அதன் பின்னர் ஏடுதொடக்கி வைப்பவர் வேட்டி அணிந்து, விபூதி போன்ற சிவசின்னங்களை அணிந்து இறைவனை வணங்கி, குழந்தையைத் தனது மடியின் மீது இருக்கச் செய்வார். தம்முன்னால் உள்ள தட்டத்தில் வைக்கப்பட்ட அரிசியில் குழந்தையின் வலக்கை விரலைப் பிடித்து 'அ' முதல் 'ஃ' வரையுள்ள எழுத்துக்களை எழுதுவார். எழுதும்போது எழுத்துக்களைக் கூறுமாறும் செய்வார்.*

**6. ஏடுதொடக்குவதற்கு உகந்தோர் யாவர்?**

✧ *சமயகுரு, குழந்தையின் தந்தை, ஆசிரியர், கல்வி அறிவில் சிறந்த பெரியோர்கள் ஆகியோர் உகந்தோராவர்.*

**7. சோறூட்டல் என்றால் என்ன?**

✧ *குழந்தை பிறந்த ஆறாம் மாதத்தில் நல்லதொரு சுபவேளையில் சோறு, தயிர், நெய், தேன் என்பவற்றை கலந்து பிசைந்த அன்னத்தைக் குழந்தைக்கு ஊட்டுதல் சோறூட்டல் எனப்படும். இதை அன்னப்பிராசனம் என்றும் கூறுவர்.*

**8. சோறூட்டல் சடங்குகள் நடைபெறும் இடங்கள் எவை?**

✧ 1. வீடு 2. ஆலயம்

**9. நாமகரணம் என அழைக்கப்படும் சடங்கு ஏது?**

✧ *குழந்தைக்குப் பெயர் சூட்டும் சடங்காகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இச்சடங்கு நடைபெறும் முறையினை விளக்குக.

✧ பெயர் சூட்டல் சடங்கானது ஒரு நல்ல நாளில் சுபவேளையில் நடைபெறும். குழந்தை பிறந்த நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு முதல் எழுத்தைத் தெரிவு செய்து, பொருத்தமான பெயரினைத் தேர்வு செய்திருப்பர். பெரியோர்கள் முன்னிலையில் இறை வழிபாட்டின் பின்னர் குழந்தையின் தந்தை அல்லது மாமன், குழந்தையின் காதில் மூன்று முறை பெயரைக் கூறுவார். சூழ்ந்திருக்கும் பெரியோர்களும் அதனை ஏற்றுச் சொல்வர். குழந்தை பிறந்து ஒரு மாத காலத்துள் இச்சடங்கு நடைபெறும். இச்சடங்கு சைவசமயத்தவர் களால் தொடர்ந்து பேணப்பட்டு வருவது மரபாகும்.

---

பாடம் : 6 பயிற்சி : 10

---

1. சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) உலக வாழ்க்கைக்கான தேவைகளை அர்த்தத்துடன் அடைய முயற்சிக்கும் வழி முறைகளே,

1. சமயமாகும் 2. வாழ்க்கையாகும்
3. சடங்குகளாகும் 4. பண்புகளாகும்.

ஆ) சைவசமயத்தவர் தம் வாழ்நாளில் பல சடங்குகளை,

1. நடத்துவர் 2. நடத்துவதில்லை
3. கடைப்பிடிப்பர் 4. கைக்கொள்ளுவர்

இ) மக்களின் வாழ்வுடன் தொடர்புபடும் சடங்குகள்

1. நாகரிகமெனப்படும்.
2. வாழ்வியல் சடங்குகள் எனப்படும்.
3. பண்பாடெனப்படும்.
4. வழிபாடெனப்படும்.

ஈ) நாமகரணம் என அழைக்கப்படுவது,

1. பெயர் சூட்டுதல் 2. ஏடு தொடக்குதல்
3. காது குத்துதல் 4. சோறூட்டுதல்

உ) சைவசமயத்தவர் நடத்தும் சடங்கு அல்லாதது,

1. சோறூட்டுதல் 2. பெயர் சூட்டுதல்
3. ஏடு துவக்குதல் 4. அன்னதானம் வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பின்வருவன சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுங்கள்.

அ) குழந்தை பிறந்து ஒரு மாத காலத்தில் பெயர் சூட்டுதல் நிகழும். (............)

ஆ) பெயர் சூட்டல் சடங்கு சோறூட்டும் போது இடம்பெறும். (............)

இ) சோறூட்டும் நிகழ்வை அன்னப் பிராசனம் என்றும் கூறுவர். (............)

ஈ) வாழ்வியல் சடங்குகள் நிகழும் போது இறை வழிபாடு முதன்மை பெறும். (............)

உ) நாம் வாழ்வியல் சடங்குகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது இல்லை. (............)

ஊ) வாழ்வியல் சடங்குகள் நமது சமய கலாசாரத்தின் வழி நிகழ வேண்டும். (............)

3. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளி நிரப்புங்கள்.

அ) சடங்குகள் யாவும் நமது வாழ்வியலோடு ........................

ஆ) பெயரிடுதல் தொடர்பான விளக்கத்தை ............................ காணலாம்.

இ) நமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான பெயர்களையே குழந்தைகளுக்குச் சூட்ட ........................

ஈ) ...................................... சடங்கு ஆலயம், வீடு முதலான இடங்களில் நடைபெறும்.

உ) ஒரு சிறுவனின் வாழ்வில் ............................ முக்கியமான நிகழ்வாகும்.

ஊ) சமயம் நமது ............................................ இணைந்தது.

| | | |
|---|---|---|
| தொடர்புடையன | வாழ்வியலோடு | பஞ்சாங்கத்தில் |
| வேண்டும் | சோறூட்டல் | ஏடு தொடக்குதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விடை எழுதுங்கள்.

அ) வாழ்வியல் சடங்கு என்றால் என்ன?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

ஆ) சைவசமயிகள் கைக்கொள்ளும் வாழ்வியல் சடங்குகள் நான்கின் பெயர் தருக.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

இ) குழந்தைகளுக்கு எத்தகைய பெயர்களைச் சூட்டுதல் நன்றாகும்?

........................................................................................................

ஈ) சோறூட்டல் சடங்கின் முக்கிய நோக்கம் யாது?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

உ) ஏடு தொடக்குதல் என்றால் என்ன? ஏடு தொடக்குதற்கு ஏற்றோர் யாவர்?

........................................................................................................

........................................................................................................

ஊ) வாழ்வியல் சடங்குகள் நடைபெறும் போது எதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது?

........................................................................................................

எ) ஏடு தொடக்குதல் நடத்துவதற்கு உகந்த நாள் எது?

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ) நாம் வாழ்வியல் சடங்குகளுக்கு ஏன் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

ஐ) நீங்கள் பார்த்த வாழ்வியல் சடங்கு ஒன்று பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

- செயற்பாடு:
  1. நீங்கள் பார்த்த சோறூட்டல் நிகழ்ச்சி ஒன்று குறித்து ஐந்து வசனங்கள் எழுதுங்கள்.
  2. ஏடு தொடக்குதல் நிகழ்ச்சி ஒன்றினை வகுப்பில் செய்து காட்டுங்கள்.
  3. ஆசிரியரின் உதவியுடன் பெயரிடுதல் தொடர்பான விளக்கத்தைப் பஞ்சாங்கத்தில் பார்த்து அறியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்களும் பண்டிகைகளும்

- சைவசமயிகளால் பின்பற்றப்படும் ஒழுகலாறுகளில் பண்டிகைகள், விரதங்கள் என்பனவும் அடங்குகின்றன.
- அவை நமது உள்ளத்தில் இறை உணர்வையும் புனிதத்தையும் ஏற்படுத்துகின்றன.
- நாம் சைவப் பாரம்பரியத்தைப் பேணி வாழ்வதற்கு விரதங்கள் பண்டிகைகள் தொடர்பான அறிவு அவசியமாகும்.

## அ) விரதங்கள்

- நாம் பல்வேறு விரதங்களை அனுட்டிக்கிறோம்.
- "விரதமாவது மனம் பொறிவழி போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விசேடமாக வழிபடல்" என்பது நாவலர் தம் கருத்தாகும்.
- விரதம் என்பது ஒருவகை விசேட வழிபாடு எனலாம்.
- விரதம், நோன்பு, உபவாசம் என்பன ஒரே கருத்துடைய சொற்களாகும்.
- விரதங்களைப் பலவகைப் படுத்தலாம்.

1. வெள்ளிக்கிழமை விரதம், செவ்வாய்க்கிழமை விரதம், பிரதோஷம், சிவராத்திரி, கேதார விரதம், சோமவார விரதம் போன்ற சிவ விரதங்கள்.
2. சக்தி விரதம் (நவராத்திரி, வெள்ளிக்கிழமை விரதம், ஐப்பசி உத்தர விரதம்)
3. விநாயகர் விரதங்கள் (ஆவணிச் சதுர்த்தி, மார்கழி சஷ்டி முதலியன)
4. முருக விரதம் (கந்த சஷ்டி, கார்த்திகை விரதம், வெள்ளிக்கிழமை விரதம்)
5. வைரவ விரதம் (செவ்வாய்க்கிழமை விரதம், சித்திரைப் பௌர்ணமி விரதம், ஐப்பசிப் பரணி விரதம்)
6. விஷ்ணு விரதம் (ஏகாதசி, வைகுண்ட ஏகாதசி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொதுவாக விரதம் அனுட்டிப்போர் பின்பற்ற வேண்டிய செயல்கள்:
    1. அதிகாலையில் நித்திரை விட்டெழுதல்.
    2. புறத்தூய்மை, அகத்தூய்மை பேணல்.
    3. தோய்த்து உலர்ந்த ஆடை அணிதல்.
    4. ஆலயம் சென்று பக்திபூர்வமாக வழிபடல்; அர்ச்சனை செய்வித்தல்; திருமுறைகளைப் பாடுதல்.
    5. உணவைச் சுருக்குதல், பகிர்ந்துண்ணல்.
    6. முடிந்தவரை தான தருமம் செய்தல், உணவளித்தல்.
- விரதமனுட்டிப்பதால் கிடைக்கும் நன்மைகள்:
    1. நமக்கு நல்லறிவு கிட்டும்.
    2. கடவுள் மீது பக்தி ஏற்படும்.
    3. பொறுமை, புலக்கட்டுப்பாடு, மனவலிமை என்பன ஏற்படு:ம்.
    4. ஒழுக்க சீலர்களாக வாழ வழிசெய்கிறது.
    5. மனிதரை நல்வழிப்படுத்தும் மார்க்கமாகவும் அமைகிறது.

## ஆ) பண்டிகைகள்

- சமயம் சார்ந்தும் வாழ்வியல் சார்ந்தும் வருடந்தோறும் குறிப்பிட்ட நாளில் விருந்துடன் கொண்டாடப்படும் விசேட தினங்கள் பண்டிகைகள் எனப்படும்.
- பண்டிகைகள் என்ற சொல் பெருநாள், விசேட நாள் என்னும் கருத்தைத் தரும்.
- பண்டிகையானது தெய்வ உணர்வை வளர்க்க உதவுகிறது.
- பண்டிகை இல்லந்தோறும் மகிழ்வையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தக் காரணமாக அமைகிறது.
- பண்டிகைகளின் போது பலரும் கூடிப் பலவகையான உணவுகளை உண்டு மகிழும் வாய்ப்பேற்படுகிறது.
- புத்தாடை அணிதல், விருந்துண்ணல், கலை நிகழ்ச்சிகளை நடத்துதல், வாழ்த்து மடல்கள் அனுப்புதல் முதலான குதூகலச் செயற்பாடுகள் பண்டிகைகளின் போது இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி என்பன நாம் கொண்டாடும் பண்டிகைகளில் குறிப்பிடத்தக்கன.
- சித்திரை வருடப்பிறப்பு சித்திரை மாதம் முதல் நாளில் கொண்டாடப்படும்.
- அன்று விசேட வழிபாடு, பொங்கல், கைவிசேடம் வழங்குதல், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் ஆதியாம் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறும்.
- சித்திரை மாதத்தில் வரும் சித்திரா பௌர்ணமியும் சிறப்புக்குரிய விரதமாகும்.
- சித்திரைப் பௌர்ணமியில் பூம்புகாரில் இந்திர விழா நடைபெற்றதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

---

பாடம் : 7 வினா - விடை

---

**1. சைவ மக்களால் பின்பற்றப்படும் சமய ஒழுகலாறுகளில் அடங்குவன எவை?**

✧ *விரதங்கள், பண்டிகைகள்.*

**2. விரதங்கள் பண்டிகைகள் நமக்கு எவ்வகையில் உதவுகின்றன?**

✧ *சைவப் பாரம்பரியங்களைப் பேணி வாழ்வில் கடைப்பிடிப்பதற்கு உதவுகின்றன.*

**3. விரதமாவது யாது?**

✧ *விரதமாவது மனம் பொறிவழி போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விசேடமாக வழிபடலாகும்.*

**4. விரதம் என்ற கருத்துடைய வேறு சொற்கள் இரண்டு தருக.**

✧ *1. நோன்பு 2. உபவாசம்*

**5. சிவவிரதங்கள் சில தருக.**

✧ *1. சிவராத்திரி 2. திருவாதிரை விரதம் 3. உமாமகேசுவர விரதம் 4. சோமவார விரதம் 5. கேதார விரதம் 6. பிரதோஷ விரதம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சக்தி விரதங்கள் மூன்று தருக.

✧ 1. நவராத்திரி 2. வெள்ளிக்கிழமை விரதம் 3. ஐப்பசி உத்தர விரதம்

7. கிழமை விரதங்கள் சில கூறுக.

✧ வெள்ளிக்கிழமை விரதம், செவ்வாய்க்கிழமை விரதம், சனிக்கிழமை விரதம், சோமவார விரதம்

8. விநாயகர் விரதங்கள் நான்கு எழுதுக.

✧ ஆவணிச்சதுர்த்தி, மார்கழிச்சஷ்டி, சித்திவிநாயக விரதம், செவ்வாய்க்கிழமை விரதம்.

9. விநாயகர் விரதம் அனுட்டிப்பதால் ஏற்படும் பயன்கள் எவை?

✧ நினைத்த காரியம் கைகூடும், வீண்பழி அகலும், பகைவர்களும் நண்பர்கள் ஆவார்கள், தீவினை அகலும், மனச்சுமை நீங்கும், எல்லா தோஷங்களும் நீங்கும்.

10. முருகன் விரதங்கள் சில தருக.

✧ வெள்ளிக்கிழமை விரதம், கந்தசஷ்டிவிரதம், கார்த்திகைவிரதம்.

11. விரதங்களை அனுட்டிப்போர் பின்பற்ற வேண்டிய செயல்கள் எவை?

✧ 1. அதிகாலையில் நித்திரை விட்டெழுதல்.
2. புறத்தூய்மை, அகத்தூய்மை பேணுதல்.
3. தோய்த்துலர்ந்த ஆடை அணிதல்.
4. ஆலயத்திற்குச் சென்று பக்தியுடன் வழிபடல்.
5. அர்ச்சனை செய்வித்தல்
6. திருமுறைகளைப் பாடுதல்.
7. உணவைச் சுருக்குதல்.
8. பகிர்ந்துண்ணல்.
9. தான தருமம் செய்தல்.
10. ஏழைகளுக்கு உணவளித்தல்.

12. பண்டிகைகள் எனப்படுபவை எவை?

✧ சமயம் சார்ந்தும் வாழ்வியல் சார்ந்தும் வருடந்தோறும் குறிப்பிட்ட நாளில் விருந்துடன் கொண்டாடப்படும் விசேட தினங்கள் பண்டிகைகள் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. பண்டிகைகளை வேறு எப்பெயர்களால் அழைப்பர்?**

✧ *பெருநாள், விசேடநாள், கொண்டாட்ட நாள் எனப் பல பெயர்களால் அழைப்பர்.*

**14. பண்டிகைகள், விரதங்கள் நமக்கு எவ்வகையில் உதவுகின்றன?**

✧ *இறை பக்தியை வளர்க்கவும், பொறுமை, கட்டுப்பாடு, மனவலிமை போன்றவற்றை ஏற்படுத்தவும் நல்ல அறிவைத் தந்து ஒழுக்கசீலர்களாக வாழவும் உதவுகின்றன.*

**15. பண்டிகையானது குடும்பத்தினரிடையே எவற்றை ஏற்படுத்துகின்றது?**

✧ *இறைஉணர்வையும், ஒற்றுமையையும், மகிழ்வையும் ஏற்படுத்துகின்றது.*

**16. பண்டிகைகளின் போது முக்கிய இடம்பெறுவன எவை?**

✧ ௧. *சிறப்பான உணவுவகைகளைச் சேர்ந்து உண்ணுதல்.*

௨. *புத்தாடை அணிதல்.*

௩. *பெரியோர்களிடம் ஆசி பெறல்.*

௪. *வாழ்த்துமடல் அனுப்புதல்.*

௫. *ஆலயம் சென்று வழிபடல்.*

௰. *கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப்போட்டிகள் நடத்துதல்.*

**17. நாம் வருடந்தோறும் கொண்டாடும் பண்டிகைகள் சில தருக.**

✧ *தைப்பொங்கல், சித்திரைவருடப்பிறப்பு, தீபாவளி.*

**18. சித்திரைவருடப்பிறப்பைப்பற்றி சில வாக்கியங்கள் எழுதுங்கள்.**

✧ ௧. *சித்திரைவருடப்பிறப்பு சித்திரை மாதம் முதல் நாளில் கொண்டாடப்படும்.*

௨. *அன்று அதிகாலையில் மருத்துநீர் தேய்த்து நீராடுவர்.*

௩. *சூரியனுக்கு பொங்கல் இட்டு வணங்குவர், புத்தாடை அணிவர்.*

௪. *ஆலயத்திற்குச் சென்று வழிபாட்டில் கலந்து கொள்வர்.*

௫. *பெரியோர்களை வணங்கி ஆசீர்வாதம் பெறுவர்.*

௬. *வீட்லுள்ளோருடனும் உறவினரோடும் கூடி இருந்து உணவு உண்டு மகிழ்வர்.*

7. *சுப நேரத்தில் கைவிசேடம் பெறுவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. சித்திரை வருடப்பிறப்பன்று கிராமங்களில் நிகழும் விசேட நிகழ்ச்சிகள் எவை?

✧ *போர்த்தேங்காயடித்தல், காளைகளை அடக்குதல் (மஞ்சிவிரட்டுதல்) கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப்போட்டிகள் முதலானவை.*

20. சித்திரைப் பௌர்ணமி எனப்படுவது யாது?

✧ *சித்திரை மாதத்தில் வரும் பூரணைத்தினமாகும்.*

21. சித்திராகுப்த விரதம் அனுட்டிக்கப்படும் நாள் ஏது?

✧ *சித்திரை மாதத்தில் வரும் சித்திரைப் பௌர்ணமியில் சித்திராகுப்த விரதம் அனுட்டிக்கப்படும். அன்றைய தினம் ஆலயங்களில் கஞ்சி சமைத்து சித்திரைக் கஞ்சி என்ற பெயரில் அடியவர்க்கு வழங்குவர். சித்திரபுத்திரனார் கதையும் படிக்கப்படுவது வழக்கம்.*

22. இந்திரவிழா எங்கு நடைபெற்றது? அதன் சிறப்பு யாது?

✧ *தமிழ்நாட்டில் பூம்புகாரில் சித்திரைப் பௌர்ணமியில் இந்திரவிழா நடைபெற்றதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இவ்விழாவில் ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் இடம்பெற்றனவாம். இதனை வசந்த விழா என்றும் அழைத்தனர்.*

23. சித்திரா பௌர்ணமியின் முக்கியத்துவம் யாது?

✧ *சித்திரா பௌர்ணமி பல்வேறு சிறப்புகளுக்குரியது.குறிப்பாக இறந்த தமது தாயின் பொருட்டு பிள்ளைகள் இந்நாளில் விரதமிருப்பர்.*

---

பாடம்: 7 பயிற்சி : 12

---

1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. சிவ விரதங்களில் முக்கியமானது,

1. ஏகாதசி 2. நவராத்திரி 3. சிவராத்திரி

ஆ. விநாயகர் விரதமல்லாதது,

1. ஆவணிச்சதுர்த்தி 2. புரட்டாதிச்சனி
3. மார்கழிச்சஷ்டி

இ. அம்மன் விரதங்களில் ஒன்று,

1. கந்தசஷ்டி 2. சித்திரைப்பௌர்ணமி
3. வரலட்சுமி விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. முருகனுக்குரிய விசேட விரதம்,

1. கந்தசஷ்டி 2. வைகாசி விசாகம்
3. திருக்கார்த்திகை

உ. தைமாத முதல் நாளில் கொண்டாடப்படும் பண்டிகை

1. தீபாவளி 2. சித்திரைப்புத்தாண்டு
3. தைப்பொங்கல்

ஊ. இந்திரனுக்கு பழந்தமிழகத்தில் எடுக்கப்பட்ட விழா

1. கலைவிழா 2. இந்திரவிழா 3. சித்திரைவிழா

**2. பின்வருவன சரியாயின் ✓ என்றும் பிழையாயின் × என்றும் அடையாளமிடுங்கள்.**

அ. விரதமாவது நன்கு உண்டு உடுத்து மகிழும் விழாவாகும். (.............)

ஆ. பண்டிகைகளின் போது புத்தாடை அணிவது வழக்கம். (.............)

இ. சித்திரைப் புத்தாண்டின்போது கைவிசேடம் வழங்குவர். (.............)

ஈ. தைப்பொங்கல் அன்று மருத்துநீர் வைத்து நீராடுவர். (.............)

உ. சித்திரகுப்த விரதத்தின் போது சித்திரைக் கஞ்சி காய்ச்சி வழங்குவர். (.............)

ஊ. விரதம், பண்டிகை என்பன நம்மை நல்வழிப்படுத்தவல்லன. (.............)

**3. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புங்கள்.**

அ. விரதங்களை அனுட்டிக்கும் போது உரிய ........................ பின்பற்ற வேண்டும்.

ஆ. உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் இறைசிந்தையோடு நோற்பது ........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. விரதங்கள், ................................ என்பன பலநன்மைகளை நமக்குத் தருகின்றன.

ஈ. ...................................... புத்தாண்டு சித்திரை மாத முதல் நாளில் பிறக்கின்றது.

உ. சுபவேளை பார்த்துக் ...................................... கொடுப்பர்.

| | | | | |
|---|---|---|---|---|
| கைவிசேடம் | விதிமுறைகளை | பண்டிகைகள் | விரதமாகும் | சித்திரை |

4. விடை எழுதுங்கள்.

அ. விரதம் என்பதற்கு நாவலர் பெருமான் கூறும் விளக்கம் யாது?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

ஆ. உமக்குத் தெரிந்த விநாயக விரதங்கள் எவை?

..................................................................................................

..................................................................................................

இ. சைவசமயிகள் அனுட்டிக்கும் விரதங்கள் ஐந்து எழுதுங்கள்.

..................................................................................................

..................................................................................................

ஈ. கந்தசஷ்டி விரதம் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுங்கள்.

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

உ. நாம் கொண்டாடும் பண்டிகைகள் எவை?

..................................................................................................

..................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. தைப்பொங்கல் பண்டிகையின் சிறப்பு யாது? அதனை எவ்வாறு கொண்டாடுவர்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

எ. சித்திரைப் புத்தாண்டுப் பிறப்பின் போது நாம் செய்வனவற்றைப் படிமுறையில் எழுதுங்கள்.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஏ. உமக்கு விருப்பமான பண்டிகை பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. பின்வரும் தெய்வங்களுக்குரிய விரதங்களை அட்டவணையில் எழுதுங்கள்.

| தெய்வம் | விரதங்கள் |
|---|---|
| 1. விநாயகர் | ............................................................ |
| 2. சிவன் | ............................................................ |
| 3. பார்வதி | ............................................................ |
| 4. முருகன் | ............................................................ |
| 5. சரஸ்வதி | ............................................................ |
| 6. துர்க்கை | ............................................................ |
| 7. விஷ்ணு | ............................................................ |

ஒ. பண்டிகைகள் நமக்கு எவ்வகையில் உதவுகின்றன?

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

- செயற்பாடு:

1. சைவசமயிகள் அனுட்டிக்கும் விரதங்களின் பெயர்களை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.
2. நீர் கொண்டாடிய ஒரு பண்டிகையைக் குறித்து வகுப்பில் எடுத்துக் கூறவும்.
3. சைவசமயப் பண்டிகைகள் தொடர்பான தகவல்கள், படங்கள் என்பவற்றைச் சேகரித்துச் சிறு நூலாக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம்: 8 குறிப்புக்கள்

# திருக்குறிப்புத் தொண்ட நாயனார்



- இறைவன் மீது அளவிலாப் பக்தி கொண்டு, தாம் செய்யும் தொழில் அனைத்தையும் இறையர்ப்பணமாக்கி அருள் பெற்ற அருளாளர் பலர் உளர்.
- அவர்களை நாயன்மார்கள் எனச் சைவ உலகு போற்றுகிறது.
- இறையருள் பெற்ற அறுபத்து மூன்று அருளாளர்களின் வரலாற்றைப் பெரியபுராணம் கூறுகிறது.
- சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் இவர்களது வரலாறுகளைப் பக்திச்சுவை சொட்டப் பாடியுள்ளார்.
- இவர்களுள் திருக்குறிப்புத் தொண்ட நாயனாரும் ஒருவராவார்.
- இவரது இயற்பெயர் ஏகாலியர். தமிழகத்தில் உள்ள காஞ்சி மாநகரில் பிறந்தவர். சலவைத்தொழிலாளி.
- இவர் சிவனடியார்களின் உடைகளை ஊதியமின்றித் தோய்த்து உலர்த்திக் கொடுக்கும் தொண்டினைச் செய்து வந்தார்.
- சிவனடியார்களின் திருவுளக்குறிப்பு உணர்ந்து நடந்தமையால் இவரைத் திருக்குறிப்புத் தொண்டர் என அழைத்தனர்.
- இவரது தொண்டின் சிறப்பினை உலகுக்கு உணர்த்தச் சிவபெருமான் விரும்பினார்.
- மழைக்காலத்தில் ஒருநாள் சிவனடியார் வேடம் தாங்கி, திருநீறு பூசி மிகவும் அழுக்கான கந்தைத் துணியினை உடுத்திக் கொண்டு மெலிந்த மேனியராக மெல்ல மெல்ல நடந்து சென்று திருக்குறிப்புத் தொண்டரின் வீட்டை அடைந்தார்.
- அவரைக் கண்டதும் திருக்குறிப்புத் தொண்டர் மிக்க மகிழ்வடைந்தார்.
- அவரது அழுக்கான உடையைத் தந்தால், தான் சலவை செய்து தருவதாகக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 'பொழுது மறைவதன் முன் சலவை செய்து தரமுடியும் என்றால் எடுத்துச் செல்லலாம்' என்றார் சிவனடியார்.
- திருக்குறிப்புத் தொண்டர் மகிழ்ச்சியுடன் அதனை எடுத்துச் சென்றார்.
- அவர் சலவை செய்து கொண்டிருக்கும் போது சிவபிரானின் அருளால் பெருமழை பெய்யத் தொடங்கியது.
- அவரால் அந்த ஆடையை உலர வைக்க முடியவில்லை.
- இராப்பொழுதும் அண்மித்தது. சிவனடியாருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லையே எனத் திருக்குறிப்புத் தொண்டர் தவித்தார்.
- தமது தலையை துணி தோய்க்கும் கல்லுடன் மோத முற்பட்டார்.
- அவ்வேளையில் அவரது தலையை ஒரு கரம் பிடித்து நிறுத்தியது.
- சிவபிரான் உமையம்மையாருடன் இடப வாகனத்தில் காட்சி தந்தார்.
- திருக்குறிப்புத் தொண்டர் பேரன்பினால் எம்பெருமானை வீழ்ந்து வணங்கினார்.
- சிவபெருமான் 'உமது உயர்ந்த பக்தியை மூவுலகும் அறியும்படி செய்தோம் இனி எமது உலகை வந்தடைக' எனக் கூறி மறைந்தருளினார்.
- செய்யும் தொழிலே தெய்வமாகக் கொண்டு வாழ்ந்தமையால் திருக்குறிப்புத் தொண்டர் பெருமை பெற்றார்.

---

பாடம்: 8 வினா - விடை

---

1. பெரியபுராணம் குறிப்பிடும் நாயன்மார்களின் தொகை என்ன?

✧ *அறுபத்து மூவர்*

2. அருளாளர் என அழைக்கபடுவோர் யாவர்?

✧ *இறைவன் மீது அளவற்ற பக்தி கொண்டு தாம் செய்யும் செயல்கள் யாவற்றையும் இறையர்ப்பணமாக்கி அதனால் அருள் பெற்றோரே அருளாளர் ஆவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. திருக்குறிப்புத் தொண்டர் குறித்து யாது அறிவீர்?

✧ *இவரது இயற்பெயர் ஏகாலியர். இவர் தமிழகத்தில் உள்ள காஞ்சி மாநகரில் பிறந்தவர். சலவைத் தொழிலாளி. சிவபெருமானிடத்து மிகுந்த பக்தி உள்ளவர். சிவனடியார்களின் குறிப்பறிந்து அவர்களது உடைகளை ஊதியமின்றி (இலவசமாக) தோய்த்துக் கொடுக்கும் தொண்டினைச் செய்து வந்தவர். இதனால் இவரை திருக்குறிப்புத் தொண்டர் என அழைத்தனர்.*

4. திருக்குறிப்புத் தொண்டரிடம் காணப்பட்ட சிறப்பியல்புகள் எவை?

✧ 1. *சிவபெருமானிடத்தில் நிறைந்த பக்தியுடைமை.*
2. *சிவனடியார்களிடத்தே பக்தியுடைமை.*
3. *சிவனடியார்களின் உடைகளை ஊதியமின்றிச் சலவை செய்து கொடுக்கும் பண்பு.*
4. *வாக்குறுதி தவறாமை.*

5. திருக்குறிப்புத் தொண்டரின் மகிமையை உலகுக்கு உணர்த்தச் சிவபிரான் கொண்ட கோலம் யாது?

✧ *நீறுபூசிய நெற்றியுடனும் அழுக்கான கிழிந்த ஆடையுடனும் மெலிந்த தோற்றத்துடனும் சிவனடியார் போன்ற தோற்றம் கொண்டார்.*

6. அழுக்கான உடையைச் சலவை செய்து தருவதாகத் திருக்குறிப்புத் தொண்டர் கூறியபோது சிவனடியார் கூறிய பதில் யாது?

✧ *"பொழுது மறைவதன் முன் சலவை செய்து தரமுடியும் என்றால் ஆடையை எடுத்துச் செல்லலாம்" என்பதேயாகும்.*

7. திருக்குறிப்புத் தொண்டர் சலவை செய்து கொண்டிருக்கையில் நிகழ்ந்தது என்ன?

✧ *பெருமழை பொழியத் தொடங்கியது.*

8. அதன் விளைவு யாது?

✧ *ஆடையை உலர்த்த முடியாது போனமை. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றமுடியாமை.*

9. திருக்குறிப்புத் தொண்டர் தனது தலையைக் கல்லில் மோத முற்பட்டமைக்கான காரணம் யாது?

✧ *சிவனடியாருக்குப் பொழுது மறைவதன் முன் சலவை செய்து கொடுப்பதாகக் கூறிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமற்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனதே என்னும் கவலை காரணமாகத் தமது தலையைக் கல்லுடன் மோதமுற்பட்டார்.

10. இச்சம்பவம் எதனை எடுத்துக் காட்டுகிறது?

✧ திருக்குறிப்புத் தொண்டர் வாக்குறுதி தவறாதவர் என்பதையும் தமது உயிரையே துச்சமாக மதித்துச் சிவதொண்டு ஆற்றுபவர் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

11. கல்லில் தலையை மோதமுற்றபட்டவரைத் தடுத்தாட் கொண்டவர் யார்?

✧ சிவபெருமான்

12. இப்பாடத்தின் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளும் உண்மை யாது?

✧ இறைபக்தி கொண்ட அடியவரை இறைவனே தேடி வந்து ஆட்கொண்டருளுவார் என்ற உண்மையை அறிகிறோம்.

13. திருக்குறிப்புத் தொண்டரின் பணி குறித்த உமது கருத்து யாது?

✧ இவர் தாம் செய்யும் தொழிலை இறையர்ப்பணமாக்கி இறையருள் பெற்றவர். செய்யும் தொழிலே தெய்வமென வாழ்ந்தவர். வாக்குறுதி தவறாதவர். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாதபோது தமது உயிரையே துறக்கத் துணிந்தவர். பயன் கருதாது பணி செய்த பண்பாளர். சிறந்த சிவபக்தர். சிவனடியார்களைச் சிவனாகக் கருதிச் செயற்பட்டவர்.

14. சிவனடியார் பெருமை கூறும் நூல் எது? அதனை அருளியவர் யார்?

✧ பெரியபுராணம். சேக்கிழார் என அழைக்கப்படும் அருள்மொழித்தேவர்.

15. திருக்குறிப்புத் தொண்டர் என அழைக்கப்பட்டது ஏன்?

✧ சிவனடியார் திருக்குறிப்பறிந்து அவர்களது உடைகளைச் சலவை செய்து கொடுத்தமையால் திருக்குறிப்புத் தொண்டர் என அழைக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

அ. திருக்குறிப்புத் தொண்டரின் இயற்பெயர்,

1. குங்குலியக்கலயர்
2. ஏகாலியர்
3. ஏனாயர்

ஆ. திருக்குறிப்புத் தொண்டரின் தொழில்,

1. மீன்பிடித்தல்
2. சலவை செய்தல்
3. வியாபாரம்

இ. திருக்குறிப்பு என்பதன் கருத்து,

1. சிவனடியார்களின் திருவுள்ளக்குறிப்பை அறிந்து போற்றும் இயல்பு.
2. சிவனடியார்களின் உடைகளைத் தோய்த்துக் கொடுத்தல்.
3. ஆடைகளை உலர்த்துதல்.

ஈ) சிவனடியார் வேடத்தில் வந்தவர்,

1. ஏகாலியர்
2. சிவபெருமான்
3. முனிவர்

உ) திருக்குறிப்புத் தொண்டர் தலையைக் கல்லில் மோதிக்கொள்ள முற்பட்டமைக்குக் காரணம்,

1. பெருமழை பெய்தமை.
2. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமை.
3. சிவனடியாரைக் காணாமை.

2. **பின்வருவன சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுங்கள்.**

அ) திருக்குறிப்புத் தொண்டர் ஆடைகளைத் தோய்த்து உலர்த்திக் கொடுக்கும் தொழில் செய்து வந்தார். (............)

ஆ) சிவனடியாரின் திருவுள்ளக் குறிப்பை அறிந்து போற்றும் இயல்புடையவராக இருந்தமையால் திருக்குறிப்புத் தொண்டர் என அழைக்கப்பட்டார். (............)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) இவரது தொண்டின் சிறப்பை உலகுக்குணர்த்தச் சிவபெருமான் விரும்பவில்லை. (............)

ஈ) செய்யும் தொழிலே தெய்வம் என்பதை இக்கதை உணர்த்துகிறது. (............)

உ) தனது வாக்குறுதியைத் திருக்குறிப்புத் தொண்டர் நிறைவேற்றினார். (............)

ஊ) திருக்குறிப்புத் தொண்டர் என்பது அவரது காரணப் பெயராகும். (............)

3. பொருத்தமான எழுத்துக்களைக் கட்டங்களுள் எழுதுங்கள்.

அ. செய்யும் தொழிலை இறை அர்ப்பண மாக்குவோருக்கு இறையருள்

ஆ. சிவனருள் பெற்ற அடியவர்களைக் குறிக்கும் பெயர்

இ. பெரிய புராணத்தை அருளிச் செய்தவர்

ஈ. திருக்குறிப்புத் தொண்டரைத் தேடி வந்து அருள் செய்தவர்

உ. திருக்குறிப்புத் தொண்டரின் கதை மூலம் புலப்படுவது அவரது

| | | | | |
|---|---|---|---|---|
| கி | ___ | க் | ___ | ம் |
| நா | ___ | ன் | ___ | ___ |
| ___ | க் | கி | ___ | ர் |
| சி | ___ | பி | ரா | ___ |
| இ | ___ | ப | ___ | தி |

4. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ) நாம் எந்தத் தொழிலைச் செய்தாலும் அதை .................. அர்ப்பணமாகச் செய்தல் வேண்டும்.

ஆ) சிவனடியார்களின் பெருமையைப் .................. கூறுகிறது.

இ) திருக்குறிப்புத் தொண்டர் .................................................. நாயன்மார்களில் ஒருவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) சிவனடியாருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமையால் தமது தலையைக் கல்லோடு மோத ..........................................

உ) ............................................ செய்யும் தொழிலே தெய்வம் எனக் கொண்டு வாழ்ந்தவராவார்.

| | | | | |
|---|---|---|---|---|
| திருக்குறிப்புத் தொண்டர் | இறை | முற்பட்டார் | அறுபத்துமூன்று | பெரிய புராணம் |

5. விடை எழுதுங்கள்.

அ. திருக்குறிப்புத் தொண்டரின் இயற்பெயர் என்ன?

..........................................................................................................

ஆ. அவர் திருக்குறிப்புத் தொண்டர் என அழைக்கப்படக் காரணம் யாது?

..........................................................................................................

..........................................................................................................

இ. திருக்குறிப்புத் தொண்டர் மேற்கொண்ட தொழில் யாது?

..........................................................................................................

ஈ. அவரது தொண்டின் மகிமையை உலகுக்கு உணர்த்த முற்பட்டவர் யார்?

..........................................................................................................

உ. அதனை எவ்வாறு உணர்த்தினார்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

ஊ. திருக்குறிப்புத் தொண்டர் தமது தலையைக் கல்லோடு மோத முற்பட்டமைக்குக் காரணம் என்ன?

..........................................................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. இக்கதையின் மூலம் நீங்கள் தெரிந்து கொள்ளும் படிப்பினைகள் யாவை?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

- செயற்பாடு:
  1. திருக்குறிப்புத் தொண்டர் கதையை மனனம் செய்து வகுப்பில் கூறுக.
  2. செய்யும் தொழிலே தெய்வம் எனும் தலைப்பில் பத்து வாக்கியங்கள் எழுதுக.
  3. செய்யும் தொழிலைத் தெய்வமாகக் கொண்டு வாழ்ந்த வேறு நாயன்மார்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து அவர்களது தொண்டுகளைப் பட்டியலிட்டு வகுப்பறையில் காட்சிப்படுத்துக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணப்பநாயனார்



- பொத்தப்பி நாட்டில் உள்ள உடுப்பூரில் நாகன் என்னும் வேடுவத் தலைவன் வாழ்ந்து வந்தான்.
- அவனது மகனின் பெயர் திண்ணன்.
- திண்ணன் ஒருநாள் தன் நண்பர்களான நாணன், காடன் என்போருடன் காட்டுக்கு கன்னி வேட்டைக்குச் சென்றான்.
- வேட்டைக்குச் செல்கையில் பன்றி ஒன்றைத் திண்ணன் கண்டான். அது காளத்தி மலைப்பக்கமாக ஓடியது. திண்ணன் அதை அம்பெய்து கொன்றான்.
- அதை எடுத்துக் கொண்டு மூவரும் நீர் தேடி பொன்முகலி ஆற்றுப் பக்கம் சென்றனர். எதிரே திருக்காளத்தி மலையைக் கண்டனர்.
- அந்த மலைக்குச் செல்வோம் என்றான் திண்ணன். 'அங்கே குடுமித்தேவர் இருக்கிறார்; நாம் போய் கும்பிடுவோம்' என்றான் நாணன்.
- திருக்காளத்தி மலையை நெருங்க நெருங்கத் திண்ணனாரின் உள்ளத்தில் பெரும் மாற்றம் தோன்றியது.
- பொன்முகலி ஆற்றங்கரையை மூவரும் வந்தடைந்தனர்.
- காடனைத் தீக்கடைக் கோலினால் நெருப்புண்டாக்கிப் பன்றியை வதக்கும்படி கூறி அங்கே நிறுத்திவிட்டு நாணனுடன் திண்ணனார் திருக்காளத்தி மலையில் ஏறினார்.
- மலைஉச்சியை அடைந்ததும் திண்ணனார் அங்கிருந்த சிவலிங்கப் பெருமானைக் கண்டார். ஓடோடிச் சென்று கட்டி அணைத்து கண்ணீர் பெருக்கினார்.
- கொடிய விலங்குகள் திரியும் காட்டின் மத்தியில் சுவாமி துணையின்றித் தனித்திருப்பது கண்டு இரங்கினார். அவருக்கு உணவு கொடுப்பார் யாரும் இல்லையே எனக் கலங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு வேண்டுவனவற்றைக் கொண்டு வரவேண்டுமெனக்கருதி, அவரைப் பிரிந்து செல்ல மனமில்லாதவராகப் பிரிந்து சென்றார்.

- காடன் இருக்கும் இடத்தை அடைந்த திண்ணனார் பன்றியின் நல்ல இறைச்சியைத் தெரிந்தெடுத்துத் தேக்கிலைக் கல்லையிலே வைத்தார். பூக்களைக் கொய்து குடுமியிலே செருகினார். பொன்முகலி ஆற்று நீரை வாயிலே மொண்டு கொண்டார். வில், அம்பு முதலியவற்றை ஒரு கையிலும் இறைச்சிக்கல்லையை மறுகையிலும் எடுத்துக்கொண்டு திருக்காளத்தி நாதரிடம் சென்றார்.
- காளத்திப் பெருமானின் முடிமீதிருந்த பூக்களை அகற்றிவிட்டு, வாயில் மொண்டு வந்த நீரால் பெருமானை நீராட்டினார். குடுமியில் செருகி வந்த பூக்களை எடுத்துச் சாத்தினார். ஊனமுதினைப் படைத்து உண்ணும்படி வேண்டினார். இரவு முழுவதும் அவருக்குக் காவலாக இருந்து விட்டுக் காலையில் அவருக்கு உணவு கொண்டு வரக் கீழே இறங்கிச் சென்றார்.
- காளத்தியப்பருக்குச் சிவாகம விதிப்படி பூசை செய்பவர் சிவகோசரியார் எனும் அந்தணர். அவர் வழக்கம் போல் பூசை செய்வதற்கு வந்தபோது அங்கே இறைச்சி படைக்கப்பட்டிருப்பதைக் கண்டு மனம் வருந்தினார். அதனை அப்புறப்படுத்திவிட்டுத் தூய்மை செய்து முறைப்படி பூசை செய்து சென்றார். ஆனால் தொடர்ந்தும் திண்ணனார் இறைச்சியைப் படைத்து வந்தமை கண்டு அவர் மனம் வருந்தி, இத்தகைய செயலை நீக்கியருளுமாறு இறைவனிடம் வேண்டினார்.
- அன்றிரவு சிவபிரான் சிவகோசரியாரின் கனவில் தோன்றினார். 'இந்தப் பொருத்தமற்ற பூசையைச் செய்பவன் வேடன் என இகழ்ச்சியாகக் கருத வேண்டாம். அவன் என்மீது பேரன்பு கொண்டவன். அந்த அன்பினாலேயே அப்படிச் செய்கிறான். அவனது செயல்கள் எனக்கு இனிதாக உள்ளன. நாளைக்கு மறைந்திருந்து பார்; அவனது அன்பினைப் புரிந்துகொள்வாய். மனக்கவலையை விடுக' என்றருளினார்.
- அடுத்தநாள் சிவகோசரியார் பூசையினை முடித்தபின் ஓர் இடத்தில் மறைந்திருந்தார்.
- திண்ணனார் வந்தார். இறைவனின் வலக்கண்ணில் இரத்தம் பெருகுவதைக் கண்டார். உள்ளம் பதறித் துடிதுடித்தார். ஓடிச்சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சிலைகளைப் பறித்து வந்து அவற்றைப் பிழிந்து கண்ணில் விட்டார். குருதி வடிவது நிற்கவில்லை. ஊனுக்கு ஊனே மருந்து என எண்ணினார். தனது வலக்கண்ணை அம்பினால் தோண்டி எடுத்து இறைவனின் வலக்கண்ணில் அப்பினார். குருதி வடிவது நின்றது. திண்ணனார் பெரு மகிழ்வுற்றார்.

- சிறிது நேரத்தில் இறைவனின் இடது கண்ணிலும் இரத்தம் ஓடத் தொடங்கியது. திண்ணனார் கவலைப்படவில்லை. தனது இடக்கண்ணையும் தோண்டி அப்பிவிட முடிவு செய்தார்.
- அடையாளத்துக்காக அந்தக் கண்ணிடத்தில் தன் காலை வைத்துக் கொண்டு, தனது இடக்கண்ணைத் தோண்ட முயன்றார்.
- அவ்வேளை 'நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப' என்று கூறியபடி சிவனார் தோன்றி திண்ணனாரின் கையைப் பிடித்துத் தடுத்தார்.
- மறைவிலிருந்து இவற்றைப் பார்த்த சிவகோசரியார் வியப்படைந்தார்.
- கண்ணப்பர் கைகளைப் பற்றிய காளத்தியப்பர், கண்ணப்பரைத் தன் வலப்பக்கத்தில் இருத்திக் கொண்டார்.
- தன் கண்ணை இழந்து காளத்தியப்பருக்கு அப்பியமையால் திண்ணனார் கண்ணப்பர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். சிவனருள் பெற்ற நாயன்மார்களுள் ஒருவரானார்.
- மறப்பக்தியின் மூலமும் இறைவனை அடையலாம் என்பதற்குக் கண்ணப்பர் கதை தக்கதோர் எடுத்துக் காட்டாகும்.

---

பாடம்: 9 — வினா - விடை

---

**1.** கண்ணப்பநாயனாரின் இயற்பெயர் என்ன?

✧ *திண்ணனார்*

**2.** திண்ணனார் எக்குலத்தைச் சேர்ந்தவர்?

✧ *வேடுவர் குலத்தைச் சேர்ந்தவர்*

**3.** இவரது தந்தையின் பெயர் என்ன?

✧ *நாகன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. திண்ணனாருடன் கன்னி வேட்டைக்குச் சென்றோர் யாவர்?

✧ *காடன், நாணன்*

5. கன்னிவேட்டையில் திண்ணனார் முதன்முதலில் எதனைக் கொன்றார்?

✧ *பன்றியைக் கொன்றார்*

6. திருக்காளத்தி மலையில் உள்ள பெருமானின் பெயர் என்ன?

✧ *திருக்காளத்தியப்பர் (குடுமித்தேவர்)*

7. அப்பகுதியில் உள்ள ஆற்றின் பெயர் என்ன?

✧ *பொன்முகலி ஆறு*

8. திண்ணனார் மலை உச்சியை அடைந்ததும் நிகழ்ந்தவை யாவை?

✧ *அங்கே இருந்த சிவலிங்கப்பெருமானை அன்பு மீதூரக் கட்டித் தழுவினார். தன்வசமிழந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். சுவாமி கொடிய விலங்குகள் திரியும் காட்டுப்பகுதியில் துணையின்றி தனித்து இருப்பதை எண்ணி இரங்கினார். அவருக்கு உணவு கொடுப்பதற்கு யாரும் இல்லையே என்று கலங்கினார். சுவாமிக்கு வேண்டியவற்றைக் கொண்டு வர வேண்டுமென நினைத்தார். அதனால் அவரைப் பிரிய மனமில்லாமல் பிரிந்து கீழே சென்றார்.*

9. திண்ணனார் திருக்காளத்தியப்பருக்கு எவ்வாறு பூசை செய்தார்?

✧ *சிவலிங்கப் பெருமான் முடிமீதிருந்த பூக்கள், இலைகளை அகற்றினார். வாயில் மொண்டு வந்த நீரை உமிழ்ந்து சிவலிங்கப்பெருமானை நீராட்டினார். குடுமியில் செருகியிருந்த பூக்களை எடுத்துச் சாத்தினார். தேக்கிலைக் கல்லையில் எடுத்து வந்த ஊனமுதைப் படைத்து, உண்ணும்படி வேண்டினார்.*

10. திருக்காளத்தியப்பருக்குப் பூசை செய்த சிவாச்சாரியார் யார்?

✧ *சிவகோசரியார்*

11. சிவகோசரியார் கவலை கொண்டது ஏன்?

✧ *குடுமித்தேவருக்குத் தினமும் ஊனமுது படைக்கப்பட்டிருப்பதைக் கண்டு கவலை கொண்டார். ஆலயத்தின் தூய்மை கெட்டுவிடுவதாக வருந்தினார்.*

12. சிவகோசரியாரின் கனவில் தோன்றிய சிவபெருமான் உரைத்தவை யாவை?

✧ *"இந்தப் பொருத்தமற்ற பூசையைச் செய்பவன் வேடன் என்று இகழ்ச்சியாக நினைக்க வேண்டாம். அவன் என்மீது கொண்ட*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினால் அவ்வாறு செய்கிறான். அவனது செயல்கள் எனக்கு இனிதாக உள்ளன. நாளைக்கு மறைந்திருந்து பார். அப்போதுதான் அவனது அன்பைப் புரிந்து கொள்வாய். மனக்கவலையை விடுக" என்பதாகும்.

**13. ஆறாவது நாள் நிகழ்ந்த சம்பவம் யாது?**

✧ *சிவனின் வலக்கண்ணில் இரத்தம் பெருகியது.*

**14. அதனைக் கண்ட திண்ணனார் யாது செய்தார்?**

✧ *உள்ளம் பதறித் துடிதுடித்தார். பெருகும் இரத்தத்தைத் துடைத்தும் அது நிற்காமை கண்டு ஏங்கினார். ஓடோடிச் சென்று பச்சிலைகளைப் பறித்து வந்து அவற்றைப் பிழிந்து கண்ணில் விட்டார். குருதி வடிவது நிற்காமை கண்டு ஊனுக்குஊன் உற்றநோய் தீர்க்குமெனக் கருதினார். தனது வலக்கண்ணினை அம்பினால் தோண்டி இரத்தம் ஓடும் கண்ணின் மீது அப்பினார். குருதி வடிவது நின்றது கண்டு மகிழ்ந்தார்.*

**15. இடது கண்ணில் இரத்தம் பெருகியமை கண்டு யாது செய்தார்?**

✧ *தனது இடது கண்ணைத் தோண்டி அப்ப நினைத்தார். அடையாளத்துக்காக அக்கண்ணிடத்தில் தனது காலை வைத்துக் கொண்டு இடது கண்ணைத் தோண்ட முயன்றார்.*

**16. அவ்வேளையில் நிகழ்ந்த அற்புதம் யாது?**

✧ *சிவன், சிவலிங்கத்தினின்றும் தோன்றி 'நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப' என்று கூறித் திண்ணனாரின் கையைத் தன் கையாற் பிடித்துத் தடுத்தார்.*

**17. இக்காட்சிகளைப் பார்த்த சிவகோசரியாரின் நிலை என்ன?**

✧ *சிவகோசரியார் பெரும் வியப்படைந்தார். வேட்டுவ குலத்தவனான திண்ணனின் பக்தி வைராக்கியத்தைப் பார்த்து உடலும் உள்ளமும் சிலிர்த்தார்.*

**18. இக்கதை எமக்கு எதனை உணர்த்துகிறது?**

✧ *ஆசாரம், ஆடம்பரம் எதுவுமின்றி உண்மையான பக்தியோடு பூசை செய்யும் அடியவருக்கு இறைவன் அருள் பாலிப்பான். அவன் குலம், கோத்திரம் எதுவும் பார்ப்பதில்லை. அன்பின் வலையில் அகப்படுபவன் இறைவன். திண்ணனின் மறப்பக்தியை, அவனது அன்பை இறைவன் பெரிதும் விரும்பி ஏற்றுக் கொண்டார் என்பதையே இக்கதை நமக்கு உணர்த்துகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. திண்ணனின் செயல்கள் ஏற்கத்தக்கன எனக் கருதுகிறீரா?

✧ *அவனது நிலையில் அவனது செயல்கள் ஏற்கத்தக்கனவே. அவன் தன்வசமிழந்து எல்லாம் இறைவசமாகி விட்ட நிலையில் அவனது செயல்கள் யாவும் இறைவனுக்கு இனியனவாகவே விளங்கின. இதனையே சிவகோசரியாருக்கும் இறைவன் கனவில் எடுத்துரைத்திருந்தார். திண்ணனின் செயல் மறப்பக்தியின் பாற்படும். அத்தகு பக்தியுடையோர் எதனையும் செய்யத் தயங்கார்.*

20. கண்ணப்பர் எனப் பெயர் வரக் காரணம் யாது?

✧ *தனது கண்ணை இடந்து அப்பினமை காரணமாகத் திண்ணனார் கண்ணப்பர் என்னும் சிறப்புப் பெயரினைப் பெற்றார்.*

---

பாடம்: 9 பயிற்சி : 14

---

1. பொருத்தமாகத் தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| நாகன் | ஆறு |
| திண்ணனார் | இறைச்சியுணவு |
| சிவகோசரியார் | உடுப்பூர் |
| குடுமித்தேவர் | வேடுவர் தலைவன் |
| பொன்முகலி | நாகனின் மகன் |
| ஊனமுது | திருக்காளத்தி மலையில் உள்ள சிவன் |
| கண்ணையப்பினவர் | முதன்முதல் ஆடும் வேட்டை |
| திருக்காளத்தி | திருக்காளாத்தி நாதருக்குப் பூசை செய்பவர் |
| கன்னிவேட்டை | கண்ணப்பர் |
| பொத்தப்பி | மலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சரியாயின் ✓ என்றும் பிழையாயின் × என்றும் அடையாளம் இடுங்கள்.

அ. நாகன் தனது அரசுரிமையைத் திண்ணனாருக்கு வழங்கினான். (............)

ஆ. திருக்காளத்தி மலைக்குத் திண்ணனார் செல்ல முடியவில்லை. (............)

இ. திருக்காளத்தியப்பருக்குச் சிவகோசரியார் ஊனமுது படைத்துப் பூசை செய்தார். (............)

ஈ. திண்ணனாரின் செயல்கள் சைவ ஆகம விதிக்கு ஏற்றவையல்ல. (............)

உ. திண்ணனாரின் பூசையைச் சிவபெருமான் ஏற்றுக் கொண்டார். (............)

ஊ. உள்ளன்போடு, எல்லாம் இறைவன் செயலெனக் கருதிச் செயற்படுவோர் இறையருள் பெறுவர். (............)

எ. இறைவன் திண்ணனாரைக் கண்ணப்பராக்கி ஆட்கொண்டார். (............)

3. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ. திருக்காளத்தி மலையில் உள்ள இறைவனுக்கு .................... பூசை செய்தார்.

ஆ. திருக்காளத்தி மலைக்கு அண்மையில் பொன்முகலி என்னும் .................................................. உண்டு.

இ. .................................... என்பது திருக்காளத்தி மலையில் உள்ள இறைவனின் மறுபெயராகும்.

ஈ. அன்பின் வலையில் அகப்படுபவன் .................................... என்பர்.

உ. திண்ணனாரின் அதிதீவிர பக்தியே அவரைக் .............................. ஆக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. கண்ணுக்குக் கண்ணே .............................................. எனக் கண்ணப்பர் நினைத்தார்.

எ. கண்ணப்பர் படைத்த ஊன் உணவைக் கண்டு சிவகோசரியார் பெரிதும் ............................................

| | | | |
|---|---|---|---|
| வருந்தினார் | மருந்து | சிவகோசரியார் | குடுமித்தேவர் |
| ஆறு | கண்ணப்பர் | இறைவன் | |

4. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. பொத்தப்பி நாட்டில் உள்ள ஊர்,

1. உடுப்பிட்டி 2. உடுகம 3. உடுப்பூர்

ஆ. குடுமித்தேவர் வீற்றிருந்த இடம்,

1. திருவாரூர் 2. திருக்காளத்திமலை
3. திருவிடை மருதூர்

இ. கன்னி வேட்டைக்குச் சென்றவன்,

1. திண்ணன் 2. காடன் 3. நாணன்

ஈ. திருக்காளத்தியப்பருக்குப் பூசை செய்த சிவாச்சாரியார்,

1. திண்ணனார் 2. சிவகோசரியார் 3. காடன்

உ. கண்ணப்பரிடம் காணப்பட்ட பக்தி,

1. அதிதீவிர பக்தி 2. சாதாரண பக்தி
3. அன்பிலாத பக்தி

5. விடை எழுதுங்கள்.

அ. திண்ணனார் மலை உச்சியைச் சென்றடைந்தபோது நிகழ்ந்தவை யாவை?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. திண்ணனார் திருக்காளத்தியப்பருக்கு எவ்வாறு பூசை செய்தார்?

.......................................................................................................

.......................................................................................................

இ. குடுமித்தேவரைத் திண்ணனார் எவ்வாறு நீராட்டினார்?

.......................................................................................................

.......................................................................................................

ஈ. திண்ணனாரின் பூசையை இறைவன் ஏற்றுக்கொண்டார் என்பதற்குரிய ஆதாரம் என்ன?

.......................................................................................................

.......................................................................................................

உ. திண்ணனாரின் பூசையைச் சிவகோசரியார் விரும்பாதது ஏன்?

.......................................................................................................

.......................................................................................................

ஊ. திண்ணனார் பூசைக்குரிய பொருட்களை எவ்வாறு எடுத்துச் சென்றார்?

.......................................................................................................

.......................................................................................................

எ. கண்ணப்பரின் செயல்கண்டு இறைவன் கூறியவை எவை?

.......................................................................................................

.......................................................................................................

ஏ. திண்ணனாரைக் கண்ணப்பர் ஆக்கியவர் யார்? அவர் செய்த செயல் என்ன?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. எத்தனை நாட் பணிகளில் கண்ணப்பர் முத்தியடைந்தார்?

.....................................................................................................

.....................................................................................................

ஒ. திண்ணனாரின் செயல்கள் நமக்கு உணர்த்துவன யாவை?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

- செயற்பாடு:

1. கண்ணப்ப நாயனார் குறித்து (கொப்பியில்) பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.
2. திண்ணனார் இறைவனிடத்து அதி தீவிர பக்தி கொண்டவர் என்பதற்கு மூன்று எடுத்துக் காட்டுக்கள் தருக.
3. திண்ணனார் கண்ணப்பரான கதையினை வகுப்பில் பாவனையுடன் எடுத்துக் கூறுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம்: 10 குறிப்புக்கள்

# பஞ்சபுராணம்

- தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பனவற்றை வரிசைக் கிரமமாக ஓதுதலைப் பஞ்சபுராணம் ஓதுதல் என்பர்
- பஞ்சபுராணம் ஓதியபின்னர் திருப்புகழ் பாடும் வழக்கமும் உண்டு.
- ஆலயங்களில் மட்டுமன்றி வீடுகளிலும் பாடசாலைகளிலும் பஞ்சபுராணம் பாடப்படுகின்றது.
- வீட்டில் தினமும் இடம்பெறும் வழிபாடுகளிலும் பாடசாலையில் இடம்பெறும் பிரார்த்தனைகளிலும் விழாக்களிலும் பஞ்சபுராணம் பாடப்படுவதைக் காணலாம்.
- பஞ்சபுராணம் ஓதும்போது முதலில் திருச்சிற்றம்பலம் என்று கூறி ஓதுதல் வேண்டும். அவற்றை இசைத்தபின் திருச்சிற்றம்பலம் என்று சொல்லி நிறைவு செய்தல் சைவசமய மரபாகும்.
- பஞ்சபுராணத்தை எழுதும்போதும் முதலில் திருச்சிற்றம்பலம் என்று எழுதுதல் வேண்டும். இறுதியிலும் அவ்வாறே குறித்தல் வேண்டும்.
- பஞ்சபுராணம் பாடுவோர் எழுந்து நின்று கைகூப்பி வணங்கிய வண்ணம் பக்தியோடும் பண்ணோடும் பாடுதல் மரபாகும்.

பாடம்: 10 வினா - விடை

1. பஞ்சபுராணம் எனப்படுபவை யாவை?

✧ *தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பனவாகும். இவற்றை வரிசைக் கிரமமாக ஓதுதலைப் பஞ்சபுராணம் ஓதுதல் என்பர்.*

2. பஞ்சபுராணத்திற்கு மேலதிகமாக ஓதப்படும் பாடல் எது?

✧ *திருப்புகழ்*

3. பஞ்சபுராணம் ஓதப்படும் இடங்கள் எவை?

✧ *ஆலயங்களிலும், வீடுகளிலும், விசேட விழாக்கள், பிரார்த்தனைகள் நிகழும் இடங்களிலும், பாடசாலைகளிலும் பஞ்சபுராணம் ஓதப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பஞ்சபுராணம் ஓதும் ஒழுங்குமுறை யாது?

✧ தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்.

5. பஞ்சபுராணம் ஓதும்போதும் எழுதும்போதும் எதனைக் குறிப்பிடவேண்டும்?

✧ பஞ்சபுராணம் ஓதும்போதும் எழுதும்போதும் தொடக்கத்திலும் முடிவிலும் திருச்சிற்றம்பலம் என்பதனைக் குறிப்பிட வேண்டும்.

6. பஞ்சபுராணம் பாடும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் யாவை?

✧ பாடுவோர் எழுந்து நிற்றல் வேண்டும். கைகூப்பி, பக்தியுணர்வுடன், பண்ணோடு மனமுருகிப் பாடுதல் வேண்டும்.

7. பஞ்சபுராணம் பாடப்படும் சந்தர்ப்பங்கள் சில தருக.

✧ 1. ஆலயத்தில் வசந்த மண்டப பூசையின் போது.
2. ஆலய வழிபாட்டின் போது
3. காலை, மாலை வேளைகளில் வீடுகளில் வழிபாடு செய்யும் போது
4. பாடசாலைகளில் பாடசாலை ஆரம்ப வேளையிலும், பாடசாலை விடும் போதும்.
5. விசேட பிரார்த்தனைகளின் போது.
6. விழாக்களின் ஆரம்பத்திலும் இறுதியிலும்.
7. சமய சம்பந்தமான சடங்குகளின் போது.

---

பாடம்: 10 பயிற்சி : 15

---

அ. விடை எழுதுக.

1. பஞ்சபுராணத்தில் அடங்குவன எவை?

.....................................................................................................

.....................................................................................................

2. பஞ்சபுராணம் பாடப்படும் இடங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

.....................................................................................................

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பஞ்சபுராணம் பாடமுன்பும் பாடிய பின்பும் எதனைச் சொல்ல வேண்டும்?

.......................................................................................

4. பஞ்சபுராணம் எழுதும்போது முதலிலும் கடைசியிலும் எழுத வேண்டிய சொல் யாது?

.......................................................................................

5. பஞ்சபுராணம் பாடும்போது கவனிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் எவை?

.......................................................................................

.......................................................................................

6. பஞ்சபுராணம் பாடப்படும் சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுங்கள்.

.......................................................................................

.......................................................................................

7. பஞ்சபுராணத்திற்கு மேலதிகமாகப் பாடப்படும் அருட்பாடல் எது?

.......................................................................................

8. பஞ்சபுராணத்தில் முதலில் இடம்பெறுவது எது?

.......................................................................................

ஆ. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| தேவாரம் | திருவாசகம் |
| சேந்தனார் | சம்பந்தர், அப்பர், சுந்தரர் |
| மணிவாசகர் | சேக்கிழார் |
| திருப்புகழ் | திருவிசைப்பா |
| பெரியபுராணம் | அருணகிரிநாதர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புங்கள்.

1. காலையும் மாலையும் ...................... பஞ்சபுராணம் ஓதி, கடவுளை வழிபடுவோம்.

2. பஞ்சபுராணம் பாடியபின் இறுதியாகத் திருப்புகழ் பாடப்படும் வழக்கமும் .............................................

3. பஞ்சபுராணத்தை ............................ செய்திருத்தல் நன்று.

4. .............................. ஆலயங்கள், வீடுகள், பாடசாலைகள் ஆகிய இடங்களில் பாடப்படும்.

5. பஞ்சபுராணத்தைப் ........................................ பக்தியோடும் பாடுதல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பஞ்சபுராணம் | வீட்டில் | மனனம் | உண்டு | பண்ணோடும் |

ஈ. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

1. பஞ்சபுராணத்தில் இடம்பெறாதது,
   1. திருவிசைப்பா 2. திருப்பல்லாண்டு 3. திருப்புகழ்

2. திருவாசகம் பாடியவர்,
   1. திருநாவுக்கரசர் 2. திருவாதவூரர் 3. தில்லைவாழ்அந்தணர்

3. பஞ்சபுராணத்தின் இறுதியில் இடம்பெறுவது,
   1. திருப்புகழ் 2. பெரியபுராணம் 3. திருவிசைப்பா

4. பஞ்சபுராணம் ஓதும்போது முதலிலும் இறுதியிலும் சொல்லப்பட வேண்டிய சொல்,
   1. ஓம்நமசிவாய 2. ஓம் ஓங்கார ரூபாய நம
   3. திருச்சிற்றம்பலம்

5. திருச்சிற்றம்பலம் எனும் சொல் குறிப்பது,
   1. நடராசப்பெருமானை
   2. தில்லையம்பலத்திலுள்ள நடராசப்பெருமான் திருக்கோயிலை
   3. சிதம்பரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செயற்பாடு:
  பஞ்சபுராணத்தை மனனம் செய்து, பக்தி சிரத்தையுடன் பண்ணோடு வகுப்பில் பாடிக்காட்டுக.

---

பாடம்: 10(அ) குறிப்புக்கள்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்



- ♦ சமயகுரவர் நால்வருள் ஒருவர் திருஞானசம்பந்தர்
- ♦ இவர் உமையம்மையார் ஊட்டிய ஞானப் பாலைப் பருகிய பெருமைக்கு உரியவர். அதனால் ஞானசம்பந்தர் எனப் பெயர் பெற்றார்.
- ♦ திருஞானசம்பந்தர் மூன்று வயதிலேயே தேவாரம் பாடியவர்.
- ♦ இவரது முதற் தேவாரம் 'தோடுடைய செவியன்...' எனத் தொடங்கும்.
- ♦ இவர் பிறந்த ஊர் தமிழ்நாட்டில் உள்ள சீர்காழி என்பதாகும்.
- ♦ இவரைப் பாலறாவாயர், ஆளுடையபிள்ளை எனவும் அழைப்பர்.

---

பாடம்: 10 (அ) வினா - விடை

**1. திருஞானசம்பந்தர் பிறந்த ஊர் எது?**

✧ *சீர்காழி*

**2. அவரது தாய், தந்தையர் பெயர் என்ன?**

✧ *தாயார் - பகவதி, தந்தையார் - சிவபாதவிருதயர்*

**3. திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்தவர் யார்? எத்தனையாம் வயதில் ஞானப்பால் பருகினார்?**

✧ *உமையம்மையார். மூன்றாம் வயதில் ஞானப்பால் பருகினார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஞானப்பால் பருகியமையால் பெற்ற சிறப்பு யாது?

✧ *ஞான சம்பந்தம் பெற்றார். இதன் பேறாக மூன்றாவது வயதிலேயே தேவாரப் பாடல்களைப் பாடும் ஆற்றல் பெற்றார். ஞானசம்பந்தர் என அழைக்கப்பட்டார்.*

5. திருஞானசம்பந்தர் முதன் முதல் பாடிய தேவாரம் எது?

✧ *'தோடுடைய செவியன்...' எனத் தொடங்கும் தேவாரம்.*

6. இத்தேவாரம் எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது?

✧ *யார் உனக்குப் பால் தந்தது? என்று தந்தையார் குழந்தையை அதட்டிக் கேட்ட போது குழந்தையான திருஞானசம்பந்தர் வானத்தில் காட்சியளித்த சிவபெருமானையும் உமையம்மையையும் சுட்டிக் காட்டிப் பாடியது.*

7. பிரமாபுரம் என அழைக்கப்படும் தலம் எது? அதற்கு அப்பெயர் வரக் காரணம் யாது?

✧ *சீர்காழி. பிரமா வணங்கித் துதித்த தலமாதலால் அப்பெயர் பெற்றது.*

8. சிவபெருமான் திருமேனியிற் பூசியிருந்தது என்ன?

✧ *சுடுகாட்டுச்சாம்பல்*

9. அவரது தலையில் சூடியிருப்பது யாது?

✧ *தூய வெண்ணிறமுடைய மூன்றாம் பிறைச்சந்திரன்.*

10. தோடுடைய செவியன் என்பதன் பொருள் யாது?

✧ *தோடு அணிந்த காதினை உடையவர் என்பதாகும்.*

11. உமாதேவியார் சிவபிரானைப் பூசித்துப் பெற்ற பேறு யாது?

✧ *அவரது இடப்பாகத்தில் வீற்றிருக்கும் பேறாகும்.*

12. இப்பேற்றினை உமையம்மை பெற்ற தலம் எது?

✧ *திருக்கேதாரம். இது வடஇந்தியாவில் இமய மலைச்சாரலில் உள்ளது.*

13. இத்தலத்தின் இயற்கை அழகு எவ்வாறு கூறப்படுகிறது?

✧ *வண்டுகள் பாடவும் மயில்கள் ஆடவும் மான்கன்றுகள் துள்ளவும், அழகிய வரிகளையுடைய கெண்டைமீன்கள் பாயவும், குளத்திலே நீலோற்பல மலர் மொட்டுக்கள் விரியும். இத்தகு இயற்கை அழகு மிக்க தலம் திருக்கேதாரம் எனப் பாடியுள்ளார் ஞானசம்பந்தர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14.** "தொண்டரஞ்சு களிறும் அடக்கி..." என்பதன் கருத்து யாது?

✧ அடியவர்கள் தமது ஐம்பொறிகளாகிய (மெய், வாய், கண், மூக்கு, செவி) ஆண் யானையை அடக்கி... எனப் பொருள்படும். (ஐம்பொறிகளையும் இங்கு ஆண் யானை என உருவகித்துள்ளார்)

**15.** 'சுரும்பார் மலர் இண்டை கட்டி வழிபாடு செய்யும் இடம்' என்பதனை விளக்குக.

✧ வண்டுகள் மொய்க்கின்ற பூக்களை (இண்டை - தலைமாலை) தலைமாலையாகக் கட்டிக் கொடுத்து அடியவர்கள் வழிபாடு செய்யும் தலம் திருக்கேதாரமாகும். இங்குள்ள அடியவர்கள் பூமாலை கட்டும் தொண்டைச் செய்து வழிபடுகின்றனர் என ஞானியர் கூறுவர்.

**16.** 'தொண்டரஞ்சு களிறும் அடக்கி .....' என்னும் தேவாரம் எத்தலத்தில் அருளிச் செய்யப்பட்டது?

✧ திருஞானசம்பந்தர் திருக்காளத்தித் தலத்தில் இருந்தபோது திருக்கேதாரத்தைப் பற்றிக் கேள்வியுற்று மானசீகமாக அத்தலத்தைத் துதித்து இத்தேவாரத்தைப் பாடினார்.

---

பாடம் : 10 (அ) | பயிற்சி : 16

---

1. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| தோடுடைய செவியன் | ஞான சம்பந்தம் பெற்ற குழந்தை |
| பிரமாபுரம் | தலைமாலை |
| ஏடுடைய மலரான் | சிவபெருமான் |
| ஐம்பொறிகள் | சீர்காழி |
| இண்டை | பிரமதேவர் |
| ஞானசம்பந்தர் | மெய், வாய், கண், மூக்கு, செவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பின்வருவன சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.

அ) உமையம்மை ஊட்டிய பாலைப் பருகியவர் பிரமதேவர். (........)

ஆ) சிவபெருமான் தலையில் பிறைச் சந்திரனைச் சூடி உள்ளார். (........)

இ) 'தோடுடைய செவியன்' என்னும் தேவாரத்தைத் திருநாவுக்கரசர் பாடினார். (........)

ஈ) உமையம்மை சிவபிரானைப் பூசித்த தலம் திருக்கேதாரம் ஆகும். (........)

உ) திருக்கேதாரம் திருக்காளத்தியில் உள்ளது. (........)

3. விடை எழுதுங்கள்.

அ) ஞானசம்பந்தர் எனப் பெயர்வரக் காரணம் யாது?

..........................................................................................

..........................................................................................

ஆ) திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்கள் எத்திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன?

..........................................................................................

இ) திருஞானசம்பந்தர் பாடிய முதல் தேவாரம் எது? இத்தேவாரம் பாடப்பெற்ற தலம் எது? இத்தேவாரத்தின் பண் யாது?

..........................................................................................

..........................................................................................

ஈ) திருக்கேதாரம் எங்குள்ளது? அதன் சிறப்புக்கள் யாவை?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) திருஞானசம்பந்தர் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

- செயற்பாடு
  1. தோடுடைய செவியன் என்னும் தேவாரத்தையும் அதன் பொருளையும் எழுதுக.
  2. திருஞானசம்பந்தர் பாடிய வேறு தேவாரம் ஒன்று எழுதுக.

---

பாடம் 10 (ஆ) குறிப்புக்கள்

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்



- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் தேவாரம் பாடியவர்கள்.
- இவர்களைத் தேவார முதலிகள் என அழைப்பர்.
- திருநாவுக்கரசரின் இயற்பெயர் மருணீக்கியார்.
- இவர் சமண சமயத்தில் சேர்ந்திருந்த போது தருமசேனர் எனப் பெயர் பெற்றிருந்தார்.
- திருநாவுக்கரசர் சமண சமயத்தில் இருந்த போது சூலை நோயால் பீடிக்கப்பட்டு அவதியுற்றார்.
- சமணர்களது மந்திரம், தந்திரம், வைத்தியம் எதுவுமே அவருக்குப் பயனளிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமணர்களால் கைவிடப்பட்ட நிலையில் தமக்கையாரான திலகவதியாரிடம் வந்தார்.
- திருக்கெடிலம் என்னும் ஆற்றுக்கு வடபால் திருவதிகைத் தலம் உள்ளது.
- அத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானை வீரட்டானேசுவரர் என்று அழைப்பர்.
- தம்மிடம் வந்த தம்பியாருக்குத் திலகவதியார் திருவைந்தெழுத்து (நமசிவாய) ஓதித் திருநீறு கொடுத்தார்.
- அதனைத் திருநாவுக்கரசர் தமது உடல் முழுவதும் பூசினார்.
- திலகவதியார் அவரைத் திருவீரட்டானேசுவரர் ஆலயத்துக்கு அழைத்துப் போனார்.
- திருநாவுக்கரசர் அங்குள்ள பெருமானை நினைத்து 'கூற்றாயினவாறு.....' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். சூலை நோய் நீங்கியது. இதுவே அவர் பாடிய முதற் பதிகமாகும்.
- நாவுக்கரசர் பாடிய தேவாரங்கள் யாவும் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக உள்ளன.
- நாவுக்கரசர் பாடிய பதிகங்களுள் நமச்சிவாயப் பதிகமும் ஒன்றாகும். இது திருவைந்தெழுத்தின் சிறப்புக்களைக் கூறுவது. சமய குரவர் நால்வரும் நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தின் மகிமை பற்றிப் பாடியுள்ளனர்.

---

## பாடம் 10 (ஆ) வினா - விடை

---

1. தேவார முதலிகள் எனப்படுவோர் யாவர்?
   - ✧ *திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்*
2. திருநாவுக்கரசரைப் பீடித்து வாட்டிய நோய் எது?
   - ✧ *சூலைநோய்*
3. திருவீரட்டானேசுவரர் தலம் எங்கு அமைந்துள்ளது?
   - ✧ *தமிழ்நாட்டில் திருக்கெடிலம் ஆற்றின் வடபால் அமைந்துள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. திருநாவுக்கரசரைப் பீடித்த சூலைநோய் எவ்வாறு குணமடைந்தது?

✧ *தமக்கையார் திலகவதியார் அளித்த திருநீற்றை மேனி எங்கும் பூசிய பின்னர், திருவீரட்டானேசுவரரை நினைத்து 'கூற்றாயினவாறு...' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். இப்பதிகத்தைப் பாடி முடித்ததும் அவரை வாட்டிய சூலைநோய் நீங்கியது.*

5. திருவைந்தெழுத்து எனப்படுவது யாது?

✧ *ந ம சி வா ய என்பதாகும்.*

6. திருநாவுக்கரசர் பாடிய மற்றொரு பதிகம் கூறுக.

✧ *நமச்சிவாயப் பதிகம்*

7. இப்பதிகத்தைப் பொதுப்பதிகம் எனக் கூறுவது ஏன்?

✧ *எந்தத் தலத்தின் மீதும் பாடப்படாத காரணத்தால் இதனைப் பொதுப்பதிகம் என்பர்.*

8. பூவினுக்கு அருங்கலமாவது யாது?

✧ *பொலிவுள்ள தாமரை மலராகும்.*

9. நாவுக்குச் சிறப்பாக அமைவது எது?

✧ *ந ம சி வா ய என்னும் திருவைந்தெழுத்தை உரைத்தலாகும்.*

10. பஞ்சகௌவியங்கள் எவை?

✧ *பசுவிலுண்டாகும் பால், தயிர், நெய், சலம், சாணம் ஆகிய ஐந்துமாம்.*

11. அரசனுக்கு அருங்கலமாவது யாது?

✧ *கோணல் இல்லாத, நடுநிலை தவறாத நல்லாட்சி புரிதலாகும்.*

12. திருநாவுக்கரசரது தேவாரப் பதிகங்கள் எத்திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன?

✧ *நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.*

13. திருநாவுக்கரசரைக் குறிக்கும் வேறுபெயர்கள் எவை?

✧ *மருணீக்கியார், நாவுக்கரசர், அப்பர், ஆளுடைய அரசு, வாகீசர், தாண்டகவேந்தர்.*

14. நமக்கு நல்ல துணையாக அமைவது எம்மந்திரம்?

✧ *நமசிவாய என்னும் திருவைந்தெழுத்துக்களேயாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| ஆளுடைய அரசு | சூலைநோய் |
| திருவைந்தெழுத்து | 'கூற்றாயினவாறு.....' |
| கெடிலம் | ந ம சி வா ய |
| உடலை வருத்தும் நோய் | திருநாவுக்கரசர் |
| அப்பர் பாடிய முதல் தேவாரம் | திருவதிகை |

2. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ. கெடிலம் ஆற்றங்கரையில் திருவதிகை என்னும் தலத்திலே ........................................................ எழுந்தருளியுள்ளார்.

ஆ. சமயகுரவர் நால்வரும் திருவைந்தெழுத்தைப் ................

இ. 'கூற்றாயினவாறு...' எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தை ................................................................ பாடினார்.

ஈ. நாவினுக்கு அருங்கலமாவது ......................... என்பதாகும்.

உ. ...................................... சுவாமிகளைத் தாண்டகவேந்தர் என்றும் அழைப்பர்.

| | | | | |
|---|---|---|---|---|
| அப்பர் | பாடியுள்ளனர் | வீரட்டானேசுவரர் | நமசிவாய | நாவுக்கரசர் |

3. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. தருமசேனர் என அழைக்கபட்டவர்,

1. சம்பந்தர்
2. சுந்தரர்
3. அப்பர்
4. திலகவதியார்

ஆ. சூலைநோய் கொடுத்துச் சிவபிரானால் ஆட்கொள்ளப்பட்டவர்,

1. மருணீக்கியார்
2. மாணிக்கவாசகர்
3. ஆலாலசுந்தரர்
4. திருவாதவூரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. திருவைந்தெழுத்து (பஞ்சாட்சரம்) எனப்படுவது,

1. நமசிவாய 2. சரவணபவ
3. குகாயநம 4. ஓங்கார ரூபாய நம

ஈ. பஞ்ச கௌவியம் அல்லாதது,

1. கோசலம் 2. கோமயம்
3. பன்னீர் 4. பால்

உ. அரசனுக்கு அருங்கலமாவது,

1. கொடுங்கோல்
2. நினைத்ததை நிறைவேற்றல்
3. நடுவுநிலையைக் கடைப்பிடித்தல்
4. அஞ்சாமை

4. விடை எழுதுங்கள்.

அ. தேவார முதலிகள் மூவரும் யாவர்?

..............................................................................................

..............................................................................................

ஆ. திருநாவுக்கரசரின் இயற்பெயர் யாது?

..............................................................................................

இ. நாவுக்கரசர் சமணசமயத்தில் சேர்ந்திருந்தபோது எப்பெயரால் அழைக்கப் பெற்றார்?

..............................................................................................

ஈ. நாவுக்கரசருக்குச் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டவர் யார்?

..............................................................................................

உ. அப்பர் சுவாமிகளைக் குறிக்கும் வேறு பெயர்கள் எவை?

..............................................................................................

ஊ. நாவுக்கரசரின் தமக்கையார் யார்?

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. நாவுக்கரசர் பாடிய முதற் தேவாரம் எது?

.............................................................................................

ஏ. அப்பர் சுவாமிகளின் தேவாரங்கள் எத்திருமுறைகளில் உள்ளன?

.............................................................................................

ஐ. திருத்தாண்டகம் பாடியவர் யார்?

.............................................................................................

ஒ. 'பூவினுக்கருங்கலம்...' என்னும் தேவாரத்தின் பொழிப்புரையினை எழுதுக.

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

- செயற்பாடு:

1. திருநாவுக்கரசர் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.
2. 'கூற்றாயினவாறு...' என்னும் தேவாரம் எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது என எழுதுக.
3. நாவுக்கரசர் பாடிய இரு தேவாரங்களையும் பண்ணோடு வகுப்பில் பாடிக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 10 (இ) குறிப்புக்கள்

# சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்



- சுந்தரமூர்த்திநாயனார் சிவபிரானின் தோழராவார்.
- சுந்தரரின் திருமண நாளில் சிவபெருமான் கிழப்பிராமணர் வேடம் தாங்கி வந்து அவரைத் தடுத்தாட் கொண்டார்.
- திருவெண்ணெய் நல்லூர்க் கோவிலுக்கு அவரை அழைத்துச் சென்ற பின் மறைந்தருளினார்.
- சுந்தரர் கிழப் பிராமணர் வேடம் தாங்கி வந்தவரைப் பித்தன் என ஏசினார்.
- தம்மைத் தடுத்தாட் கொள்ள வந்தவர் சிவபிரானே என அறிந்ததும் சுந்தரர் மனமுருகி நின்றார்.
- அவ்வேளையில் 'நம்மைச் செந்தமிழாற் பாடுக' என்று இறைவன் திருவாய் மலர்ந்தருளினார்.
- இறைவனைப் பித்தா என ஏசிய சொல்லையே முதலாகக் கொண்டு முதலாவது தேவாரத்தைப் பாடினார் சுந்தரர்.
- திருவெண்ணெய் நல்லூர்த் தலத்தில் இத் தேவாரத்தைப் பாடினார். 'பித்தா பிறை சூடி...' என்னும் இத்தேவாரமே சுந்தரர் பாடிய முதற் தேவாரமாகும்.
- நான் உனக்கு அடிமையாகிவிட்டேன்; இனி ஒரு போதும் நான் உனது அடிமை அல்லன்; என்று சொல்ல மாட்டேன் என இத்தேவாரத்தில் சுந்தரர் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ‘மழபாடிக்கு வருதற்கு மறந்தாயோ? எனச் சுந்தரரின் கனவில் தோன்றி வினவினார் இறைவன்.
- இறைவன் நினைவூட்டியதற்கு ஏற்பச் சுந்தரர் திருமழபாடிக்குச் சென்று பெருமானைப் பாடிப் பணிந்தார்.
- ‘பொன்னார் மேனியனே...’ எனத் தொடங்கும் இத்தேவாரம் திருமழபாடியில் உள்ள இறைவனைப் போற்றித் துதிக்கும் வகையில் அமைந்துள்ளது.
- சுந்தரமூர்த்தி நாயனாரை ஆலாலசுந்தரர், நம்பியாரூரர், திருநாவலூரார், தம்பிரான் தோழர், வன்றொண்டர், ஆளுடையநம்பி எனவும் அழைப்பர்.
- சுந்தரர் பாடிய தேவாரப் பதிகங்கள் யாவும் ஏழாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது.

---

பாடம் 10 (இ) வினா - விடை

---

1. சுந்தரரைத் திருமணநாளில் தடுத்தாட் கொண்டவர் யார்?

✧ *கிழப் பிராமணர் வடிவில் வந்த சிவபெருமான்.*

2. அவர் சுந்தரரைப் பார்த்துக் கூறியது என்ன?

✧ *‘இவன் என் அடிமை’ என்றார்.*

3. சுந்தரர் அவரை என்ன சொல்லி ஏசினார்?

✧ *‘பித்தன்’ என்று சொல்லி ஏசினார்.*

4. திருவெண்ணெய் நல்லூர்த் தலத்தில் சுந்தரர் பாடிய தேவாரம் எது?

✧ *‘பித்தா பிறை சூடி’ எனத் தொடங்கும் தேவாரமாகும்.*

5. பித்தன் என்பதன் பொருள் யாது? செயல்கள் எவை?

✧ *பித்தன் - பேரருள் உடையவன். அவன் செயல்கள் பிறரால் அறிதற்கு அரியவை. அவை கேட்டதைச் செய்தல், கேட்டதைச் செய்யாதிருத்தல், கேட்காதிருக்க வேறொன்று செய்தல். சிவபெருமானின் செயல்களும் அத்தகையன. எனவே அவர் பித்தன் எனப்படுகிறார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. திருமழபாடியில் உள்ள இறைவனின் தோற்றத்தைச் சுந்தரர் எவ்விதம் கூறுகிறார்?

✧ *பொன்போன்ற திருமேனி உடையவர். அரையில் புலித்தோலை உடுத்துள்ளவர். மின்னல் போன்ற சடையில் விளங்குகின்ற கொன்றை மாலையை அணிந்துள்ளார் எனக் கூறுகின்றார்.*

7. 'மழபாடிக்கு வருதற்கு மறந்தாயோ'? எனக் கேட்டவர் யார்?

✧ *சிவபெருமான்*

8. இவ்வினா எதனை நமக்கு உணர்த்துகிறது?

✧ *சுந்தரர் மீது இறைவன் கொண்டிருந்த தோழமையை நமக்கு உணர்த்துகிறது.*

9. மழபாடியில் உள்ள இறைவனை அன்னை போன்றவரே எனச் சுந்தரர் குறிப்பிடுவது ஏன்?

✧ *தாயினும் மிக்க அன்புடையவராய் அவர் விளங்குவதாலும் அவரே ஆதாரமாக இருப்பதாலும் வேறு யாரையும் நினைக்க முடியவில்லை என்கிறார்.*

10. சுந்தரரைக் குறிக்கும் வேறு பெயர்கள் எவை?

✧ *நம்பியாரூரர், திருநாவலூரர், ஆலாலசுந்தரர், வன்றொண்டர்.*

---

பாடம் 10 (இ) — பயிற்சி : 18

---

1. பொருத்தமுற இணையுங்கள்.

| | |
|---|---|
| பித்தனின் செயல் | 'பொன்னார் மேனியனே...' |
| நம்பியாரூரர் | சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியது |
| பித்தன் | சுந்தரர் |
| "நம்மைச் செந்தமிழாற் பாடுக" | பிறரால் அறிதற்கு அரியவை |
| 'பித்தா பிறை சூடி...' | சிவபெருமான் |
| திருமழபாடியில் பாடியது | சுந்தரர் பாடிய முதற் தேவாரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுக.

அ. நம்பியாரூரர் கிழப்பிராமணரைப் பார்த்துப்...................... என்று ஏசினார்.

ஆ. நம்மைச் செந்தமிழாற் பாடுக என்று................................ கூறினார்.

இ. திருவெண்ணெய் நல்லூர்த் தலத்தில் சுந்தரர் தனது ................ தேவாரத்தைப் பாடினார்.

ஈ. ............................................ வருதற்கு மறந்தாயோ? எனச் சிவபெருமான் கேட்டார்.

உ. 'பொன்னார் மேனியனே...' என்னும் தேவாரம்................. பாடப்பெற்றது.

ஊ. ............................... தோழர் எனச் சுந்தரரை அழைப்பர்.

| | | |
|---|---|---|
| தம்பிரான் | பித்தா | மழபாடிக்கு |
| சிவபெருமான் | முதல் | திருமழபாடியில் |

3. பின்வருவன சரியாயின் ✓ என்றும் பிழையாயின் × என்றும் அடையாளம் இடுங்கள்.

அ. சுந்தரரின் இயற்பெயர் நம்பியாரூரர். (........)

ஆ. சுந்தரரை இறைவன் திருமண நாளில் தடுத்தாட் கொள்ளவில்லை. (........)

இ. சுந்தரர் கிழப் பிராமண வடிவில் வந்தவரைப் பித்தன் என்று ஏசினார். (........)

ஈ. பொன்னார் மேனியன் எனப்படுபவர் சுந்தரர் ஆவார். (........)

உ. பிறைசூடி என்றழைக்கப்படுபவர் சந்திரன். (........)

ஊ. பெண்ணை நதியின் தெற்குப் பக்கமாகத் திருவெண்ணெய் நல்லூர் உள்ளது. (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொருத்தமான எழுத்துக்களைக் கட்டங்களுள் எழுதுங்கள்.

அ. பொன் போன்ற மேனியை உடைய சிவனார் அரையில் உடுத்திருப்பது.

ஆ. ஆலாலசுந்தரர் என அழைக்கப்பட்டவர்.

இ. சிவபெருமான் தலையில் சூடியிருப்பது.

ஈ. உன்னையன்றி இனி யாரை

உ. திருவெண்ணை நல்லூரின் தென்பால் உள்ள நதி

| | | | | |
|---|---|---|---|---|
| பு | ___ | த் | ___ | ல் |
| ___ | ந் | த | ___ | ர் |
| கொ | ___ | றை | மா | ___ |
| நி | ___ | ப் | ___ | ன் |
| ___ | ண் | ணை | ___ | தி |

5. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. சுந்தரரைத் தடுத்தாட் கொண்டவர்,

1. சடங்கவியார்  2. பிராமணர்
3. சிவபெருமான்  4. பரவையார்

ஆ. சுந்தரர் பாடிய முதற் தேவாரம்,

1. 'பொன்னார் மேனியனே...'  2. 'கூற்றாயினவாறு...'
3. 'பித்தா பிறைசூடி...'  4. 'தோடுடைய செவியன்...'

இ. சுந்தரரின் தேவாரப் பதிகங்கள் இடம்பெற்றுள்ள திருமுறை,

1. நான்காம் திருமுறை  2. ஏழாம் திருமுறை
3. இரண்டாம் திருமுறை  4. எட்டாம் திருமுறை

ஈ. பிறைசூடி என அழைக்கப்படுபவர்,

1. சுந்தரர்  2. சந்திரன்
3. சிவபெருமான்  4. உமையம்மை

உ. திருமழபாடியில் சுந்தரர் பாடிய தேவாரம்,

1. பூவினுக்கருங்கலம்  2. பொன்னார் மேனியனே
3. பித்தா பிறைசூடி  4. தொண்டரஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. விடை எழுதுங்கள்.

அ. இறைவன் சுந்தரரை எவ்வாறு தடுத்தாட் கொண்டார்?

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

ஆ. திருவெண்ணெய் நல்லூர்த் தலத்தில் நிகழ்ந்த அற்புதம் என்ன?

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

இ. சுந்தரர் கிழப் பிராமணரைப் பார்த்துப் பித்தா.. என ஏசியது ஏன்?

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

ஈ. சுந்தரர் இலங்கையில் உள்ள எத்தலத்தின் மீது தேவாரப்பதிகம் பாடியுள்ளார்?

.......................................................................................

உ. சுந்தரமூர்த்திநாயனாரைக் குறிக்கும் வேறு பெயர்கள் எவை?

.......................................................................................

.......................................................................................

- செயற்பாடு:

1. இறைவன் சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட கதையை வகுப்பில் கூறுக.
2. சுந்தரர் பாடிய இரு தேவாரங்களைப் பண்ணோடு வகுப்பில் பாடிக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 10 (ஈ) குறிப்புக்கள்

## திருவாசகம்

- சமயகுரவர்கள் நால்வருள் மாணிக்கவாசகரும் ஒருவர்.



- அவரால் பாடப்பெற்றவை திருவாசகம், திருக்கோவையார் இரண்டுமாகும்.
- இவை எட்டாம் திருமுறையில் அடங்கியுள்ளன.
- திருவாசகம் தெய்வத்தன்மையுடைய மொழி எனப் பொருள்படும்.
- திருவாசகம் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தது. 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பர்.
- 'பூசுவதும் வெண்ணீறு...' என்னும் பாடல் திருவாசகத்தில் திருச்சாழல் என்னும் பகுதியில் உள்ளது.
- சாழல் என்பது பெண்பிள்ளைகளின் ஒரு விளையாட்டாகும். தோழி ஒருவர் கேள்வி கேட்க மற்றவர் விடையளிக்கும் பாங்கில் இப்பாடல்கள் அமைந்திருக்கும்.
- திருச்சாழல் தில்லையில் (சிதம்பரத்தில்) அருளப்பட்டது.
- இறைவன் பூசிக்கொள்வது வெண்ணீறு. ஆபரணமாக அணிவது சீறுகின்ற பாம்பாகும். பேசுவது வேதமாகும். இவ்வாறு பூசுவதும் அணிவதும் செய்வதால் எல்லா உயிர்களுக்கும் உள்ள வடிவையே தாமும் வடிவாகக் கொண்டுள்ளார்.
- மாணிக்கவாசகரைத் திருவாதவூரர் என்றும் அழைப்பர்.

பாடம் : 10 (ஈ) வினா-விடை

1. திருவாசகத்தை அருளியவர் யார்?

✧ *மாணிக்கவாசக சுவாமிகள்.*

2. திருவாசகம் என்பதன் பொருள் யாது?

✧ *திருவாசகம் என்பது தெய்வத்தன்மையுடைய மொழி எனப் பொருள்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. திருச்சாழல் என்பது என்ன?**

✧ *திருச்சாழல் என்பது திருவாசகத்தின் ஒரு பகுதி. சாழல் என்பது பெண்பிள்ளைகளின் ஒரு விளையாட்டாகும். தோழி ஒருவர் வினவ மற்ற ஒருவர் விடை கூறும் வகையில் இப்பாடல்கள் அமைந்திருக்கும்.*

**4. திருச்சாழல் அருளப்பட்ட தலம் எது?**

✧ *தில்லை என அழைக்கப்படும் சிதம்பரம் ஆகும்.*

**5. சிவபெருமான் மேனியிற் பூசியிருப்பது என்ன?**

✧ *சிவபெருமான் மேனியிற் பூசியிருப்பது வெண்ணிறமான திருநீறு ஆகும்.*

**6. அவர் ஆபரணமாகப் பூண்டிருப்பது யாது?**

✧ *அவர் பூண்டிருப்பது சீறுகின்ற பாம்பாகும்.*

**7. அவர் பேசுவது எது?**

✧ *பேசுவது வேதம் ஆகும்.*

**8. இறைவன் எத்தகையவன்?**

✧ *இறைவன் தானே இயற்கையாகவும் அதில் உள்ள உயிர்களாகவும் எல்லா உயிர்களுக்கும் அவ்வவற்றிற்கு ஏற்ப பயனளிக்கும் இயல்புடையவராயும் உள்ளார்.*

---

பாடம் 10 (ஈ) பயிற்சி : 19

---

**1. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.**

அ) மாணிக்கவாசகர் திருவாதவூரர் என்றும் அழைக்கப்பட்டார். (............)

ஆ) திருவாசகம் திருமுறைகளில் ஒன்றாகும். (............)

இ) திருவாசகம் திருவள்ளுவரால் அருளப்பட்டது. (............)

ஈ) திருச்சாழல் தில்லையில் அருளப்பட்டது. (............)

உ) திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார். (............)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ) ................................... என்பது தெய்வத்தன்மையுடைய மொழி எனப் பொருள்படும்.

ஆ) சாழல் என்பது பெண்பிள்ளைகளின் ஒரு ........................

இ) ..................................... சிதம்பரத்தில் அருளப்பட்டது.

ஈ) சிவபெருமான் வெண்ணிறமான ........................................ பூசியிருப்பார்.

உ) அவரது கழுத்தில் சீறுகின்ற பாம்பை ..............................

| | | | | |
|---|---|---|---|---|
| விளையாட்டாகும் | அணிந்திருப்பார் | திருவாசகம் | திருநீறு | திருச்சாழல் |

3. பொருத்தமாக இணையுங்கள்.

| | |
|---|---|
| மாணிக்கவாசகர் | பொங்கரவம் |
| பூசுவது | சிதம்பரம் |
| தில்லை | திருவாதவூரர் |
| சாழல் | வெண்ணீறு |
| சீறுகின்ற பாம்பு | திருவாசகத்தின் ஒரு பகுதி |

4. விடை எழுதுங்கள்.

அ) மாணிக்கவாசகர் என்னும் பட்டப் பெயரைச் சூட்டியவர் யார்?

.......................................................................................................

ஆ) சிவபெருமான் அணிந்திருப்பவை எவை?

.......................................................................................................

இ) மாணிக்கவாசகர் அருளியவை எவை?

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) திருச்சாழல் என்றால் என்ன? அது எங்கு அருளிச் செய்யப்பட்டது?

.................................................................................................

.................................................................................................

உ) திருவாசகம் எத்தனையாம் திருமுறையாக உள்ளது?

.................................................................................................

ஊ) திருவாசகத்தின் சிறப்புப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுங்கள்.

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

- செயற்பாடு:
  1. மாணிக்கவாசகர் குறித்த தகவல்களைத் திரட்டி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
  2. உமக்கு விருப்பமான திருவாசகப் பாடல் ஒன்றை எழுதுக.

---

பாடம் : 10 (உ) குறிப்புக்கள்

# திருவிசைப்பா

---

- திருவிசைப்பா என்பது இறைவனின் பெருமையைப் பாடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல் என்று பொருள்படும்.
- சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னுமிரண்டும் ஒன்பதாம் திருமுறையில் அடங்கியுள்ளன.
- திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், கண்டராதித்தர், புருடோத்தம நம்பி, பூந்துருத்தி நம்பி, சேதிராயர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார் ஆகிய ஒன்பதின்மர் திருவிசைப்பாக்களைப் பாடியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 'ஒளிவளர் விளக்கே....' என்னும் திருவிசைப்பா திருமாளிகைத்தேவர் அருளியதாகும்.
- திருவிசைப்பா தில்லையில் (சிதம்பரத்தில்) அருளப்பெற்றதாகும்.
- தில்லைச் சிற்றம்பலத்தில் உள்ள பொன்னம்பலத்தை ஆனந்த நடன அரங்காகக் கொண்டு ஆடும் ஆடற் பெருமானை எங்ஙனம் புகழ்ந்து பாடுவேன் எனத் திருமாளிகைத்தேவர் இதில் வேண்டுகின்றார்.

---

**பாடம் : 10 (உ) — வினா - விடை**

---

**1. திருவிசைப்பா என்பதன் பொருள் என்ன?**

✧ *இறைவனின் பெருமையைப் பாடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல் எனப் பொருள்படும்.*

**2. திருவிசைப்பா பாடியோர் யாவர்?**

✧ *திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், கண்டராதித்தர், புருடோத்தம நம்பி, பூந்துருத்தி நம்பி, சேதிராயர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார் ஆகியோராவர்.*

**3. 'ஒளிவளர் விளக்கே....' என்னும் திருவிசைப்பா யாரால் பாடப்பட்டது?**

✧ *திருமாளிகைத் தேவரால் பாடப்பட்டது. தில்லைத் (கோயில்) தலத்தில் பாடப்பட்டது.*

**4. பொன்னம்பலத்தை அரங்காகக் கொண்டு ஆடும் பெருமான் யார்?**

✧ *நடராசர்.*

**5. தெய்வக் கூத்து என்பது யாது?**

✧ *ஆனந்த நடனம்.*

**6. 'ஒளிவளர் விளக்கே..' என்னும் திருவிசைப்பா பாடலின் பொழிப்புரையினை எழுதுக.**

✧ *ஒளி மிகும் விளக்கே, அழிவற்ற ஒப்பில்லாத பொருளே, சுட்டி அறியும் அறிவுக்கும் அப்பால் நின்று சிவஞானத்தால் அறியக்கூடிய பேரறிவே, ஒளி பொருந்திய பளிங்கின் பேரொளியினை உடைய மாணிக்க மலையே, மனத்தின் கண்ணே, இனிக்கும் தேன் போன்றவரே,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடைய மெய்யன்பர்களது உள்ளத்தின் கண் பேரானந்தத்தை விளைவிக்கும் கனியே, சிற்றம்பலத்தில் உள்ள பொன்னம்பலத்தையே ஆனந்த நடன அரங்கமாகக் கொண்டு தெய்வீக நடனத்தைச் செய்யும் உன்னை, அடியவனாகிய நான் புகழ்ந்து, வியந்து உரைப்பது எவ்வாறு என்பதைக் கூறியருள்வாயாக.

பாடம் : 10 (உ) பயிற்சி : 20

1. பொருத்தமாக இணையுங்கள்.

| | |
|---|---|
| திருவிசைப்பா பாடியோர் | சிற்றம்பலம் |
| பொன்னம்பலத்தே ஆடுபவர் | ஆனந்தநடனம் |
| அம்பலம் | ஒன்பது பேர் |
| தெய்வக்கூத்து | நடராசன் |

2. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

அ) ........................ இறைவனின் பெருமையைப் பாடுகின்ற தெய்வத்தன்மை மிக்க இசைப்பாடலாகும்.

ஆ) 'ஒளிவளர் விளக்கே...' என்னும் திருவிசைப்பா திருமாளிகைத் தேவரால் ....................................

இ) பொன்னம்பலத்தே நின்று நடராசப்பெருமான் .................... நடனம் ஆடுகிறார்.

ஈ) மெய்யன்பர்களது உள்ளத்தின்கண் இறைவன் ................. விளைக்கும் கனியாக விளங்குகிறார்.

உ) சித்தத்துள் தித்திக்கும் தேனாக ........................................ விளங்குகிறார்.

| | | | | |
|---|---|---|---|---|
| இறைவன் | திருவிசைப்பா | ஆனந்த | பேரானந்தத்தை | பாடப்பெற்றது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. விடை எழுதுங்கள்.

அ) திருவிசைப்பா என்பதன் பொருள் என்ன?

..........................................................................................

..........................................................................................

ஆ) 'ஒளிவளர் விளக்கே...' என்னும் திருவிசைப்பா எத்தலத்தில் உள்ள பெருமானைப் பற்றிக் கூறுகிறது?

..........................................................................................

இ) பொன்னம்பலத்தில் நின்றாடும் பெருமான் யார்?

..........................................................................................

ஈ) திருவிசைப்பா எத்தனையாம் திருமுறையில் அடங்கியுள்ளது?

..........................................................................................

உ) திருவிசைப்பா பாடியோர் யாவர்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஊ) நீங்கள் விரும்பும் திருவிசைப்பா ஒன்றினை எழுதுங்கள்.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

- செயற்பாடு:

1. தில்லை (சிதம்பரம்) தலத்தின் சிறப்புப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.
2. 'ஒளிவளர் விளக்கே...' என்னும் திருவிசைப்பாவைப் பண்ணோடு வகுப்பில் பாடிக் காட்டுக.
3. இத்திருவிசைப்பாவின் பொழிப்புரையை எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 10 (ஊ) குறிப்புக்கள்

## திருப்பல்லாண்டு

- திருப்பல்லாண்டு என்பது ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனைச் சிவனடியார்கள் பல்லாண்டு வாழ்வாயாக என்று வாழ்த்திப் பாடுகின்ற திருப்பாடல்களாகும்.
- இது தில்லை (கோயில்) என அழைக்கப்படும் சிதம்பரத்தில் திருவாதிரைத் தினத்தில் ஓடாது நின்ற தேரை ஓடச் செய்யச் சேந்தனாரால் பாடப்பெற்றது.
- தில்லை நடராசப் பெருமானின் திருவருட் பெருமையையும் சேந்தனாரின் பக்தித் திறனையும் திருப்பல்லாண்டு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.
- திருப்பல்லாண்டில் பதின்மூன்று பாடல்கள் உள்ளன.
- திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையில் அடங்கியுள்ளது.

பாடம் 10 (ஊ) வினா-விடை

1. திருப்பல்லாண்டு என்பதன் பொருள் யாது?

✧ *ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனைச் சிவனடியார்கள் பல்லாண்டு வாழ்வாயாக என்று வாழ்த்திப் பாடுகின்ற திருப்பாடல்களாகும்.*

2. திருப்பல்லாண்டு பாடியவர் யார்?

✧ *சேந்தனார்.*

3. திருப்பல்லாண்டு பாடப்பெற்ற தலம் எது?

✧ *தில்லைத்தலம் (சிதம்பரம்)*

4. திருப்பல்லாண்டு பாடப்பெற்ற சந்தர்ப்பத்தைக் கூறுக.

✧ *தில்லையிலே மார்கழித் திருவாதிரை நாள் ஒன்றில் சிவபெருமானின் திருத்தேர் நிலையை விட்டு அகலவில்லை. தேர் அசையாமை கண்டு சிவனடியார்கள் திகைத்து நின்றனர். அவ்வேளையிலே "சேந்தா, நீ பல்லாண்டு பாடினால் தேர் ஓடும்" என்று ஓர் அசரீரி ஒலி வானிலிருந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டது. 'சேந்தனாரும் மன்னுலக தில்லை வளர்க நம் பக்தர்கள்' என்று தொடங்கித் திருப்பல்லாண்டு பாடினார். அப்பொழுது தேர் நகரத் தொடங்கியது.

5. **இச்சம்பவம் எதனை எடுத்துக்காட்டுகிறது?**

✧ *தில்லை நடராசப் பெருமானின் திருவருட் பெருமையையும் சேந்தனாரின் பக்தித் திறனையும் எடுத்துக்காட்டுகிறது.*

6. **'சீரும் திருவும்....' என்னும் திருப்பல்லாண்டில் ஆரும் பெறாத அறிவு பெற்றேன் எனக் குறிப்பிடப்படுவதை விளக்குக.**

✧ *இறைவன் திருவடிகளின் கீழ்த் தொண்டு புரிந்து உலகில் வேறெவரும் பெறாத மெய்ஞ்ஞான அறிவை நான் பெற்றேன். அவ்வாறாக வேறு யார் பெறுவார் எனப் பெருமைபடக் கூறுகிறார் சேந்தனார்.*

7. **திருப்பல்லாண்டுப் பதிகத்தில் எத்தனை பாடல்கள் உள்ளன?**

✧ *பதின்மூன்று பாடல்கள் உள்ளன.*

8. **ஒன்பதாம் திருமுறையில் அடங்குவன எவை?**

✧ *திருவிசைப்பா, திருப்பல்லாண்டு.*

---

பாடம் 10 (ஊ) | பயிற்சி : 21

---

1. பொருத்தமாக இணையுங்கள்.

| | |
|---|---|
| சிவலோக நாயகன் | சேந்தனார் |
| பல்லாண்டு கூறுதும் | தில்லை |
| மார்கழி | சிவபெருமான் |
| திருப்பல்லாண்டு | தில்லைச்சிற்றம்பலவன் |
| சிதம்பரம் | பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோம் |
| உமை மணவாளன் | திருவாதிரைத் திருவிழா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ) திருப்பல்லாண்டு பாடியவர்,

1. கருவூர்த்தேவர் 2. அப்பர்
3. சேந்தனார் 4. திருவாலியமுதனார்

ஆ) திருப்பல்லாண்டுப் பாடல்களின் தொகை,

1. பத்து 2. பதின்மூன்று
3. இருபது 4. முப்பது

இ) கோயில் என்று கூறப்படும் தலம்,

1. சிதம்பரம் 2. காஞ்சிபுரம்
3. மதுரை 4. மாயவரம்

ஈ) பாரும் விசும்பும் அறியும்படி என்றால்,

1. விண்ணும் மண்ணும் அறியாதபடி.
2. பூமியில் உள்ளோரும் விண்ணில் உள்ள தேவர்களும் அறியும்படி.
3. மக்களும் தேவர்களும் அறிய
4. உலகெல்லாம் அறியும்படி

உ) சேந்தனாரைப் பல்லாண்டு பாடப் பணித்தவர்,

1. சிவபெருமான் 2. குருக்கள்
3. மக்கள் 4. சேந்தனார்

3. விடை எழுதுங்கள்.

அ) திருப்பல்லாண்டு எத்தனையாம் திருமுறையில் உள்ளது?

..........................................................................................................

ஆ) திருப்பல்லாண்டு பாடப்பெற்ற தலம் எது?

..........................................................................................................

இ) திருப்பல்லாண்டு பாடப்பெற்ற சந்தர்ப்பத்தைக் கூறுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) வானில் இருந்து கேட்ட அசரீரி யாது?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

உ) நீர் விரும்பும் திருப்பல்லாண்டு ஒன்றினை எழுதுக.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

- செயற்பாடு:
  1. 'சீரும் திருவும் பொலியச்....' என்னும் திருப்பல்லாண்டைப் பண்ணோடு பாடிப் பழகுக.
  2. அதன் பொழிப்புரையை உமது மொழிநடையில் எழுதுக.

---

பாடம் : 10 (எ) குறிப்புக்கள்

## பெரிய புராணம்

---



- சைவத் திருமுறைகளுள் பெரிய புராணம் பன்னிரண்டாவதாக உள்ளது.
- பக்தி நெறியில் நின்று இறைவனுக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்து முத்தியடைந்த அடியார்களின் வரலாற்றைப் பெரிய புராணம் பக்திச் சுவை சொட்டக் கூறுகிறது.
- இதனைச் சேக்கிழார் என அழைக்கப்படும் அருள்மொழித் தேவர் அருளியுள்ளார்.
- சைவ ஆலயங்களில் பஞ்ச புராணம் ஓதும் போது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடிய பின்னர் பெரியபுராணம் பாடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ பெரியபுராணத்திற்குத் திருத்தொண்டர் புராணம் என்ற பெயரும் உண்டு.

♦ திருத்தொண்டர் புராணம் பாடுதற்குச் சேக்கிழாருக்கு சிவபெருமானே முதலடியை எடுத்துக் கொடுத்தார். 'உலகெலாம்....' என அவர் எடுத்துக்கொடுத்த அடியுடன் தொடங்கும் இப்புராணம் உலகெலாம் என்ற ஈற்றடியுடன் நிறைவுறுகிறது.

♦ சிவபெருமானின் திருவருளினால் பாடப்பெற்ற இப்புராணம் சைவமக்களால் பெரிதும் போற்றப்படும் நூலாகத் திகழ்கிறது.

---

பாடம் : 10 (எ) வினா-விடை

---

1. பெரியபுராணம் எத்தனையாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது?

✧ *பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது.*

2. பெரியபுராணம் எவற்றைப் பற்றிக் கூறுகிறது?

✧ *பக்திநெறியில் நின்று இறைவனுக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்து முத்தியடைந்த அடியார்களின் வரலாற்றைச் சுவைபடக் கூறுகிறது.*

3. பெரியபுராணம் கூறும் அடியார்களின் தொகை என்ன?

✧ *பெரியபுராணம் 63 தனிஅடியார்களதும் ஒன்பது தொகையடியார் தொகுதியினதும் வரலாற்றைக் கூறுகிறது.*

4. பெரியபுராணம் யாரால் இயற்றப்பட்டது?

✧ *சேக்கிழார் என அழைக்கப்பெறும் அருள்மொழித்தேவரால் இயற்றப் பெற்றது.*

5. பெரியபுராணத்தைச் சேக்கிழார் பாடுதற்கு முதலடியினை எடுத்துக் கொடுத்தவர் யார்?

✧ *சிவபெருமான்*

6. சிவபெருமான் எடுத்துக் கொடுத்த முதலடி யாது?

✧ *'உலகெலாம்' என்பதாகும்.*

7. இம்முதலடி எங்கு? எவ்விதம்? எடுத்துக் கொடுக்கப்பட்டது?

✧ *தில்லையில் (சிதம்பரத்தில்) விண்ணிலிருந்து அசரீரி வாக்காக இறைவனால் கொடுக்கப்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சேக்கிழார் பெரியபுராணத்திற்கு இட்ட பெயர் என்ன?

✧ *திருத்தொண்டர் புராணம்*

9. அப்பெயரைச் சூட்டியதற்குக் காரணம் என்ன?

✧ *திருத்தொண்டர்களின் வரலாற்றைக் கூறும் புராணம் ஆகையால் திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிட்டார்.*

10. திருத்தொண்டர் புராணத்தைப் பெரியபுராணம் என அழைப்பது ஏன்?

✧ *செயற்கரிய செயல்கள் செய்த நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் பெருமை மிக்க நூல் ஆதலால் அதனைப் பெரியபுராணம் என்று அழைப்பது வழக்கமாயிற்று.*

---

பாடம்: 10 (எ) பயிற்சி : 22

---

1. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| பெரியபுராணம் | அசரீரி |
| சேக்கிழார் | பெரியபுராணத்தின் மறுபெயர் |
| 'உலகெலாம்...' | சிதம்பரம் |
| திருத்தொண்டர்புராணம் | 12ஆம் திருமுறை |
| பெரியபுராணம் பாடப்பெற்ற தலம் | அருள்மொழித்தேவர் |

2. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் நிரப்புங்கள்.

அ. ..............................பன்னிரு திருமுறைகளுள் ஒன்றாகும்.

ஆ. இறைவனுக்கும் இறையடியார்களுக்கும் .................................... செய்து முத்தியடைந்த அடியார்களது வரலாற்றைப் பெரியபுராணம் கூறுகிறது.

இ. ..........................................பெரியபுராணத்தைப் பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. சிவபெருமான் 'உலகெலாம்...' என்று அடியெடுத்துக்
..........................................

உ. செயற்கரிய செய்த நாயன்மார்களின் பெருமை மிகு வரலாற்றைக் கூறுவதால் அதனைப் பெரியபுராணம் என்று
..................................................

| | | | | |
|---|---|---|---|---|
| தொண்டு | கொடுத்தார் | பெரியபுராணம் | சேக்கிழார் | அழைக்கின்றனர் |

3. சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.

அ. சேக்கிழார் பாடிய பெரியபுராணம்
பன்னிரண்டாம் திருமுறையாகும். (..........)

ஆ. திருத்தொண்டத்தொகையைப் பின்பற்றித்
திருத்தொண்டர்புராணம் பாடப்பெற்றுள்ளது. (..........)

இ. பெரியபுராணம் சிவபெருமானது
வரலாற்றைக் கூறுகிறது. (..........)

ஈ. பெரியபுராணம் உலகெலாம்...
எனத் தொடங்குகிறது. (..........)

உ. திருத்தொண்டர்புராணம் மதுரையில்
அருளிச் செய்யப்பட்டது. (..........)

4. விடை எழுதுங்கள்.

அ. பெரியபுராணத்தை இயற்றியவர் யார்?

..........................................................................................................

ஆ. இந்நூல் எதனைப் பற்றிக் கூறுகிறது?

..........................................................................................................

இ. பெரியபுராணத்தின் முதலடி எது?

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. திருத்தொண்டர்புராணம் என அழைக்கப்படும் நூல் எது?

.............................................................................................

உ. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் யார்?

.............................................................................................

ஊ. அலகில் சோதியன் ஆடும் அரங்கு எது?

.............................................................................................

எ. சிவபிரான் தமது சடாமுடியில் தரித்திருப்பவை எவை?

.............................................................................................

.............................................................................................

செயற்பாடு:

பின்வரும் அட்டவணையை மனப்பாடம் செய்து வகுப்பில் கூறுக.

| பாடல்முதலடி | பாடியவர் | நூலின்பெயர் | தலம் | பண் |
|---|---|---|---|---|
| 1. தோடுடைய செவியன்... | சம்பந்தர் | தேவாரம் | சீர்காழி | நட்ட பாடை |
| 2. தொண்டரஞ்சு... | சம்பந்தர் | தேவாரம் | திருக் கேதாரம் | செவ்வழி |
| 3. கூற்றாயினவாறு.. | அப்பர் | தேவாரம் | திருவதிகை வீரட்டானம் | கொல்லி |
| 4. பூவினுக் கருங்கலம்... | அப்பர் | தேவாரம் | பொது | காந்தார பஞ்சமம் |
| 5. பித்தாபிறைசூடி... | சுந்தரர் | தேவாரம் | திருவெண்ணெய் நல்லூர் | இந்தளம் |
| 6. பொன்னார் மேனியனே... | சுந்தரர் | தேவாரம் | திருமழபாடி | நட்டை |
| 7. பூசுவதும் வெண்ணீறு... | மாணிக்க வாசகர் | திருவாசகம் | | |
| 8. ஒளிவளர் விளக்கே... | திருமாளிகைத் தேவர் | திருவிசைப்பா | கோயில் (தில்லை) | பஞ்சமம் |
| 9. சீரும்திருவும் | சேந்தனார் | திருப்பல்லாண்டு | கோயில் | பஞ்சமம் |
| 10. உலகெலாம் முணர்ந்து | சேக்கிழார் | பெரியபுராணம் | தில்லை | ...... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம்: 11

குறிப்புக்கள்

# தோத்திரப்பாடல் - திருப்புகழ்



- சைவத்திருமுறைகள் தொகுக்கப்பட்ட பின்னர் பாடப்பட்ட அருட்பாடல்கள் தோத்திரப்பாடல்கள் எனப்படும்.
- திருப்புகழ், கந்தரநுபூதி, கந்தரலங்காரம், அபிராமி அந்தாதி முதலியன அவற்றிலடங்கும்.
- திருப்புகழைப் பாடியவர் அருணகிரிநாதர் ஆவார்.
- இவர் சிறந்த முருகபக்தர்.
- முருகப்பெருமானின் புகழை, அவன் அருளாலே பலவகையிலும் புகழ்ந்து பாடியுள்ளார். இவரது அருட்பாடல்களின் தொகுப்பே திருப்புகழ் ஆகும்.
- திருப்புகழ் பாடல்கள் சந்தச்சிறப்பும் தாளச் சிறப்பும் மிக்கவை.
- ஆலயங்களில் பஞ்சபுராணம் பாடியபின் திருப்புகழ் பாடப்பெறும் சிறப்பினைப் பெற்றுள்ளது.
- திருவண்ணாமலை, பழனி, திருச்செந்தூர், பழமுதிர்ச்சோலை, சுவாமிமலை, திருப்பரங்குன்றம், திருத்தணிகை, கதிர்காமம் முதலான முருக தலங்கள் மீது திருப்புகழ் பாடப்பெற்றுள்ளது.
- கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல்விருத்தம், மயில்விருத்தம் என்பனவும் அருணகிரிநாதரால் பாடப்பெற்றனவாகும்.

பாடம்: 11

வினா - விடை

1. முருகப்பெருமானின் புகழ் கூறும் திருப்பாடல்கள் கொண்ட நூல் எது?

✧ *திருப்புகழ்*

2. இதன் சிறப்பு யாது?

✧ *ஆலயங்களில் பஞ்ச புராணத்தின் பின் பாடப்பெறும் பெருமைக்குரியது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **திருப்புகழ் பாடியவர் யார்? அவர் எங்கே வாழ்ந்தார்?**

✧ *அருணகிரிநாதர். அவர் தமிழ்நாட்டில் உள்ள திருவண்ணாமலை என்னும் ஊரில் வாழ்ந்தார்.*

4. **முருகன் அவருக்கு இட்ட பணிப்புரை யாது?**

✧ *'முத்தைத் தரு...' எனத் தொடங்கித் தன்னைப் பாடுமாறு பணித்தார்.*

5. **அருணகிரிநாதர் பாடிய நூல்கள் எவை?**

✧ *திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல்விருத்தம், மயில்விருத்தம் முதலியன.*

6. **தோத்திரப்பாடல்கள் என்றால் என்ன?**

✧ *பன்னிருதிருமுறைகள் தொகுக்கப்பட்டதன் பின்னர் பாடப்பட்ட அருட் பாடல்கள் தோத்திரப்பாடல்கள் எனப்படும்.*

7. **தோத்திரப்பாடல்களுள் குறிப்பிடத்தக்கன நான்கின் பெயர் தருக.**

✧ *௧. திருப்புகழ் ௨. கந்தரலங்காரம் ௩. கந்தரநுபூதி ௪. அபிராமி அந்தாதி*

8. **அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய தலங்கள் சில கூறுக.**

✧ *திருவண்ணாமலை, பழனி, திருச்செந்தூர், பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், சுவாமிமலை, திருத்தணிகை, கதிர்காமம்.*

9. **சிவகுரு என அழைக்கப்படுபவர் யார்? அவருக்கு இப்பெயர் வரக் காரணம் யாது?**

✧ *முருகப்பெருமான். தந்தைக்குக்குருவாக இருந்து பிரணவப் பொருளை உரைத்தமையால் சிவகுரு என்னும் பெயரினைப் பெற்றார்.*

10. **சிவபெருமான் அணிந்திருப்பன எவையெனத் திருப்புகழ் கூறுகிறது?**

✧ *யானைத்தோல் போர்வை, அழகிய திருநீற்றுப் பூச்சு, விளங்குகின்ற முப்புரிநூல், புலித்தோல் ஆடை. கையில் மழுவும் மானும், காதில் அசைந்தாடும் தோடுகள், முடிமீது அழகிய தலைமாலை ஆகியன அணிந்துள்ளார்.*

11. **முருகனிடம் அருணகிரிநாதர் வேண்டுவது யாது?**

✧ *பாசக்கயிற்றைக் கையில் பிடித்த இயம தூதுவர் என்னை (மரணவேதனையில்) வருத்தாமல், அடியேன் அயர்வுற்றிருக்கும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது, அடியேனுடைய துன்பத்தை நீக்குவதற்கு நீர் பெரிய மயில் மீதமர்ந்து என் முன்னே வந்தருளல் வேண்டும் என வேண்டுகிறார்.

12. 'உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிந்தவர்' யார்?

✧ முருகப்பெருமான். (சூரனையும் அவன் சுற்றத்தினரையும் அழியும்படி கோபித்தவர் முருகன் என்பதை இங்கு சுட்டிக்காட்டுகிறார்)

13. திருப்புகழின் சிறப்புக்கள் யாவை?

✧ முருகன் பெருமை உரைப்பது. சந்தச்சிறப்பு, தாளச்சிறப்பு மிக்கது.

---

பாடம்: 11 பயிற்சி : 23

---

1. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| அருணகிரிநாதர் | முருகன் புகழ்பாடும் பாடல்கள் |
| திருப்புகழ் | இடபவாகனம் |
| சிவகுரு | திருப்புகழ் |
| ஏறு | முருகப்பெருமான் |
| சந்தச்சிறப்பு, தாளச்சிறப்பு மிக்கவை | திருவண்ணாமலை |

2. பின்வருவன சரியாயின் ✓ என்றும் பிழையாயின் × என்றும் அடையாளம் இடுங்கள்.

அ. தோத்திரப்பாடல்கள் திருமுறைகள் எனப்படும். (........)

ஆ. திருப்புகழ் தோத்திரப்பாடல்களுள் அடங்கும். (........)

இ. முருகப்பெருமான் சிவகுரு என அழைக்கப்படுகிறார். (........)

ஈ. பலவரங்களைப் பெற்ற சூரனை முருகப்பெருமான் அழித்தார். (........)

உ. முருகப்பெருமானின் வாகனம் மயிலாகும். (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருத்தமான எழுத்துக்களைக் கட்டங்களுள் எழுதுங்கள்.

அ. முருகன் புகழ்பாடும் பாடல்களைக் கொண்டது.

ஆ. முருகன் உறையும் தலங்களில் ஒன்று.

இ. முருகப்பெருமானின் தேவியரில் ஒருவர்

ஈ. திருப்புகழ் முருகன் புகழைக்

உ. அருணகிரிநாதர் திருவண்ணாமலையில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | ___ | ப் | பு | ___ | ழ் |
| ___ | தி | ___ | கா | ___ | ம் |
| வ | ___ | ளி | ___ | ய | ___ |
| ___ | று | கி | ___ | ___ | து |
| வா | ___ | ந் | த | வ | ___ |

4. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. திருப்புகழ் பாடியவர்,

1. அப்பர் சுவாமிகள்
2. அருணகிரிநாதர்
3. ஆண்டாள்
4. ஆளுடையபிள்ளையார்

ஆ. முருக தலம் அல்லாதது,

1. பழனி
2. திருத்தணிகை
3. திருப்பரங்குன்றம்
4. திருப்பதி

இ. தோத்திரப்பாடல்களுள் அடங்காதது,

1. அபிராமி அந்தாதி
2. கந்தரநுபூதி
3. திருமுறைகள்
4. திருப்புகழ்

ஈ. அருணகிரிநாதர் அருளிய நூல் அல்லாதது,

1. கந்தரலங்காரம்
2. கந்தரநுபூதி
3. திருமுறைகள்
4. திருப்புகழ்

உ. சிவகுருநாதர் என அழைக்கப்படுபவர்,

1. விநாயகர்
2. சிவபெருமான்
3. முருகன்
4. நடராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விடை எழுதுங்கள்.

அ. முருகன் புகழ் கூறும் திருப்பாடல்கள் கொண்ட நூல் எது?

..............................................................................................

ஆ. இதன் சிறப்புக்கள் சில தருக?

..............................................................................................

..............................................................................................

இ. திருப்புகழ் பாடியவர் யார்? அவருடைய வேறு நூல்கள் எவை?

..............................................................................................

..............................................................................................

ஈ. திருப்புகழ் போற்றும் முருக தலங்கள் சில கூறுக.

..............................................................................................

..............................................................................................

உ. முருகப் பெருமானைச் சிவகுரு என்று அழைப்பது ஏன்?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

ஊ. முருகப் பெருமானிடம் அருணகிரிநாதர் வேண்டுவன யாவை?

..............................................................................................

..............................................................................................


- செயற்பாடு:

1. 'இசைந்த ஏறும்....' என்னும் திருப்புகழை மனனம் செய்து சந்தச் சிறப்புத் தோன்றப் பாடிக் காட்டுக.
2. இலங்கையில் கதிர்காமத் தலத்தின் மீது அருணகிரிநாதர் பாடிய திருப்புகழை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு



- கடவுளை வழிபடுதற்குரிய சிறப்பான இடம் ஆலயமாகும்.
- ஆலயம் என்பதற்கு ஆன்மா ஒன்றித்து (லயப்பட்டு) நிற்கும் இடம் என்பது பொருளாகும். (ஆ - பசு, ஆன்மா, லயம் - ஒன்றித்து நிற்றல்)
- இறைவன் ஆன்மாக்களின் வழிபாட்டை ஏற்று அருள் புரியும் இடம் ஆலயம் என்றும் கூறுவர்.
- தினந்தோறும் ஆலயம் சென்று வழிபடுதல் நன்று. தினமும் செல்ல இயலாதோர் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் விரதநாட்கள், மாதப்பிறப்பு, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு முதலான விசேட தினங்களிலும் ஆலயம் சென்று வழிபடுதல் வேண்டும்.
- ஆலயம் புனிதமான இடம். ஆசௌசம் உள்ளவர்கள், புலால் உண்பவர்கள், தூய்மை இல்லாதவர்கள் ஆலயத்துள் செல்லத் தகாதோர் ஆவர்.
- ஆலயம் செல்லுமுன் நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து, விபூதி தரித்தல் வேண்டும். பின்னர் பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், கர்ப்பூரம் முதலிய அர்ச்சனைப் பொருட்களுடன் பால், இளநீர், பூக்கள் போன்றவற்றையும் ஒரு தட்டத்தில் வைத்து அரைக்கு மேலே தாங்கிக் கொண்டு இறை சிந்தனையுடன் செல்லல் வேண்டும்.
- ஆலயத்தை அண்மித்ததும் முதலில் கோபுரத்தை வணங்க வேண்டும். பின்னர் அங்குள்ள நீர் நிலைகளில் தங்கள் வாய், கை, கால்கள் என்பவற்றை கழுவிச் சுத்தம் செய்து கொண்டு சிவநாமத்தை உச்சரித்த வண்ணம் ஆலயத்தினுட் புகுதல் வேண்டும். அங்கு பலிபீடத்துக்கு இப்பால் நின்று ஆண்களாயின் அட்டாங்க நமஸ்காரமும், பெண்களாயின் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- திருநந்திதேவரை வழிபட்டு அவரிடம் அனுமதி பெற்று, முதலில் விநாயகரை வணங்க வேண்டும். அவரை வணங்கிய பின் மூலமூர்த்தியாகிய சிவலிங்கப் பெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி, விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு ஏனைய மூர்த்திகளை வணங்க வேண்டும்.
- இறுதியில் சண்டேசுவரரை வணங்கி, மூன்று முறை கைகொட்டி, சிவதரிசன பலனைத் தரும்படி பிரார்த்தித்தல் வேண்டும்.
- பின்னர் நந்தி தேவரை வணங்கி, பலிபீடத்திற்கு இப்பால் வந்து மும்முறை நமஸ்கரித்து எழுந்து சிவனைத் தியானித்து திருவைந்தெழுத்தை (பஞ்சாட்சரத்தை) செபிக்க வேண்டும்.
- சுவாமி சன்னிதிகளில் மூர்த்திகளை வணங்கும் போது இரு கைகளையும் கூப்பி மார்பில் அல்லது சிரசில் வைத்துக் கொண்டு திருமுறைகளை ஓதுதல் வேண்டும்.



- ஆலயத்தில் நாம் செய்யக்கூடிய தொண்டுகள் பல உள்ளன. அவற்றுள் சில வருமாறு:
    1. திருக்கோயிலைக் கூட்டுதல், மெழுகுதல், வீதியைத் துப்புரவு செய்தல்.
    2. திருவிளக்குகள், மணிகள், பாத்திரங்கள் முதலியவற்றை விளக்குதல்.
    3. தூபமிடுதல், விளக்கேற்றுதல், சாமரை வீசுதல், தீவர்த்தி பிடித்தல், வாகனம் காவுதல், குடை, கொடி, ஆலவட்டம் என்பவற்றைப் பிடித்தல்.
    4. நந்தவனம் வைத்துப் பராமரித்தல்.
    5. பூக்கொய்து கொடுத்தல், பூமாலை கட்டிக் கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- ஆலயங்களில் செய்யத்தக்க சிவபுண்ணியச்செயல்கள் வருமாறு:

  அருச்சனை செய்வித்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், திருவிழாக்களை நடாத்தல், அபிடேகம் செய்வித்தல், நாம செபம் செய்தல், புராணபடனம், பிரசங்கம் செய்தல், அன்னதானமளித்தல் ஆதியனவாகும்.

- ஆலயவழிபாட்டினால் நமது மனம் அமைதி பெறும். ஆலயங்களில் தெய்வ அருள் நிறைந்திருப்பதால் வழிபடுவோரின் வாழ்வு வளம் பெறும். ஆன்ம ஈடேற்றம் கிட்டும்.

- 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'

---

பாடம்: 12 | வினா - விடை

---

1. கடவுளை வழிபடுதற்குரிய சிறப்பான இடம் எது?

✧ *ஆலயம்*

2. ஆலயத்தைக் குறிக்கும் மற்றோர் பெயர் என்ன?

✧ *திருக்கோயில்*

3. இறைவனின் திருவருளைப் பெற யாது செய்ய வேண்டும்?

✧ *திருக்கோயிலுக்குச் சென்று மெய்யன்போடு வழிபடுதல் வேண்டும்.*

4. ஆலயம் என்பதன் பொருள் என்ன?

✧ *ஆன்மா ஒன்றித்து (லயப்பட்டு) நிற்கும் இடம்.*

5. உயிரைக் குறிக்கும் மற்றோர் சொல் கூறுக.

✧ *பசு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உயிர் இறைவனுடன் பக்தியால் ஒன்றித்து நிற்கும் இடம் எது?

✧ ஆலயம்

7. ஆலய தரிசனம் செய்தற்குரிய காலம் எது?

✧ தினமும் வழிபடுதல் சிறந்தது. செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை விரதநாட்கள், மாதப்பிறப்பு, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, திருவிழாக்காலங்கள் ஆகிய விசேட தினங்களிலாவது ஆலயதரிசனம் செய்தல் வேண்டும்.

8. ஆலயம் செல்லத் தகாதோர் யாவர்?

✧ ஆசௌசம் உள்ளவர்கள், புலால் உண்பவர்கள், தூய்மை இல்லாதவர்கள்.

9. ஆலயத்திற்குச் செல்லும் முறை யாது?

✧ நீராடித், தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து, விபூதி தரித்துத் தூய்மையுடன் பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், கற்பூரம், பூக்கள், பால், இளநீர் போன்ற பூசைப் பொருட்களைத் தட்டொன்றில் வைத்து, அரைக்கு மேலே தாங்கிக் கொண்டு, இறைசிந்தனையுடன் செல்லல் வேண்டும்.

10. ஆலயத்துக்குச் செல்வோர் அனுசரிக்க வேண்டியன யாவை?

✧ திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தை வணங்க வேண்டும். ஆலயத்தின் அண்மையில் உள்ள நீர்நிலைகளில் (குளம், கிணறுகளில்) தங்கள் வாய், கை, கால்கள் என்பவற்றைக் கழுவிச் சுத்தம் செய்து கொண்டு சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே செல்லல் வேண்டும்.

11. ஆலயத்துட் சென்றதும் யாது செய்தல் வேண்டும்?

✧ பலிபீடத்துக்கு இப்பால் இரு கைகளையும் சிரசிலே குவித்து வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.

12. ஆண்கள் செய்யும் நமஸ்காரத்தின் பெயர் என்ன?

✧ அட்டாங்க நமஸ்காரம் (எட்டு அங்கங்களும் பூமியிலே படியும்படி செய்யும் நமஸ்காரமாகும்)

13. பெண்கள் செய்யும் நமஸ்காரம் என்ன?

✧ பஞ்சாங்க நமஸ்காரம் (ஐந்து அவயவங்கள் நிலத்தில் படியும்படி செய்யப்படும் நமஸ்காரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. ஆலயத்தில் வழிபடும் முறை யாது?**

✧ முதலில் பலிபீடத்திற்கு இப்பால் விழுந்து வணங்குதல் வேண்டும். அதன்பின் திருநந்திதேவரை வணங்கி அவரிடம் அனுமதிபெற்று முதலில் விநாயகரை வணங்கவேண்டும். பின்னர் மூலமூர்த்தியாகிய சிவலிங்கப் பெருமானையும், உமாதேவியாரையும் வணங்கி, விபூதி வாங்கித் தரித்துக் கொள்ளல் வேண்டும். நடராசர், தட்சணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், வைரவர் முதலிய மூர்த்திகளைத் தரிசனம் செய்தல் வேண்டும். ஈற்றில் சண்டேசுவரரை வணங்கி மூன்று முறை கைகொட்டி சிவதரிசன பலனைத் தரும்படி பிரார்த்தித்தல் வேண்டும். பின்னர் நந்தி தேவரை வணங்கி, பலிபீடத்திற்கு இப்பால் வந்து மும்முறை நமஸ்கரித்து எழுந்து சிவனைத் தியானித்துத் திருவைந்தெழுத்தை (பஞ்சாட்சரத்தை)ச் செபிக்க வேண்டும்.

**15. ஆலயத்தில் ஓதுதற்குரிய பஞ்ச புராணங்கள் எவை?**

✧ தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்.

**16. ஆலயத்தில் செய்யக்கூடிய தொண்டுகள் சில தருக.**

✧ க. திருக்கோயிலைக் கூட்டுதல், மெழுகுதல், துப்புரவு செய்தல்.

உ. திருவிளக்குகள், மணிகள், பாத்திரங்கள் முதலியவற்றை விளக்குதல்.

ங. தூபமிடுதல், விளக்கேற்றுதல், சாமரை வீசுதல், தீவர்த்தி பிடித்தல், வாகனம் காவுதல், குடை, கொடி, ஆலவட்டம் என்பவற்றைப் பிடித்தல்.

ச. பூந்தோட்டம் அமைத்துப் பராமரித்தல்.

ரு. பூக்கொய்து கொடுத்தல், பூமாலை கட்டிக் கொடுத்தல்.

**17. ஆலயங்களில் செய்யத்தக்க சிவபுண்ணியச் செயல்கள் எவை?**

✧ அருச்சனை செய்வித்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், திருவிழாக்களை நடாத்தல், அபிடேகம் செய்வித்தல், நாம செபம் செய்தல், புராணபடனம், பிரசங்கம் செய்தல், அன்னதானமளித்தல் ஆகியனவாகும்.

**18. ஆலய வழிபாட்டால் பெறும் பயன் யாது?**

✧ ஆலயங்களில் தெய்வஅருள் நிறைந்திருப்பதால் அங்கு வழிபடும் போது ஐம்பொறிகளும் ஒடுங்கி மனம் அமைதிபெறும். வாழ்வு வளம் பெறும், ஆன்ம ஈடேற்றம் கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பொருத்தமாக இணையுங்கள்.

| | |
|---|---|
| திருக்கோபுரம் | ஆலயம் |
| சிவாலய தரிசன பலனைத் தருபவர் | அட்டாங்கநமஸ்காரம் |
| ஆன்மா லயப்படும் இடம் | தூலலிங்கம் |
| ஆண்கள் செய்வது | வாகனம் காவுதல் |
| பெண்கள் செய்வது | சண்டேசுவரர் |
| ஆலயத்தில் செய்யத்தக்க தொண்டு | பஞ்சாங்கநமஸ்காரம் |

2. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ. ........................................ வழிபடுதற்குரிய சிறப்பான இடம் ஆலயமாகும்.

ஆ. ஆலயம் என்பது........................................ ஒன்றித்து நிற்கும் இடம் எனப் பொருள்படும்.

இ. நாங்கள் செவ்வாய், வெள்ளி, விரதநாட்களில் ................ செல்வோம்.

ஈ. சண்டேசுவரரை வணங்கி சிவதரிசன பலனைத் தரும்படி ..................................... வேண்டும்.

உ. ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் ................ நமஸ்காரமும் செய்வர்.

| பஞ்சாங்க | கடவுளை | ஆன்மா | பிரார்த்தித்தல் | ஆலயம் |
|---|---|---|---|---|

3. சரியாயின் ✓ என்றும் பிழையாயின் × என்றும் அடையாளம் இடுங்கள்.

அ. தினந்தோறும் ஆலயம் சென்று வழிபடுதல் நன்று. (.........)

ஆ. ஆசௌசம் உள்ளவர்கள் ஆலயம் செல்வதில் தவறில்லை. (.........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. இறைசிந்தையுடன் ஆலயம் செல்வதே உத்தமமான முறையாகும். (.........)

ஈ. ஆலய வழிபாட்டால் மனஅமைதி கெடும். (.........)

உ. சிறுவயதிலிருந்தே ஆலயத் தொண்டுகளில் நாம் ஈடுபடல் வேண்டும். (.........)

**4.** பொருத்தமான எழுத்துக்களைக் கட்டங்களுள் எழுதுங்கள்.

அ. ஆலயங்களில் செய்யத்தக்க தொண்டுகளில் ஒன்று.

ஆ. ஆலயங்களில் பாடப்பெறும் அருட்பாடல்கள்

இ. நாம் செய்யத்தக்க தொண்டு

ஈ. சிவதரிசன பலனைத் தருபவர்

உ. திருவைந்தெழுத்தைக் குறிக்கும் மற்றோர் சொல்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வி | __ | க் | கே | __ | ற | __ |
| ப | __ | ச | பு | __ | ண | ம் |
| __ | வா | மி | __ | வு | __ | ல் |
| ச | __ | __ | சு | வ | __ | __ |
| __ | ஞ் | __ | ட் | ச | __ | ம் |

**5.** விடை எழுதுங்கள்.

அ. திருக்கோயிலில் செய்யத்தக்க தொண்டுகள் எவை?

..........................................................................................................

..........................................................................................................

ஆ. ஆலயம் என்பதன் பொருள் யாது?

..........................................................................................................

..........................................................................................................

இ. ஆலயத்துக்குக் கொண்டு செல்லத்தக்க பூசைப்பொருட்கள் எவை?

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. நீங்கள் ஆலயத்திற்குச் செல்லும் விசேட தினங்கள் எவை?

..........................................................................................

..........................................................................................

உ. ஆலயத்தில் நீங்கள் செய்யும் தொண்டுகள் எவை?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஊ. சுவாமி சந்நிதியில் ஓதத்தக்கன எவை?

..........................................................................................

..........................................................................................

எ. ஆலய வழிபாட்டினால் பெறும் பயன்கள் எவை?

..........................................................................................

..........................................................................................

ஏ. ஆலயத்தில் வழிபடும் முறை யாது?

..........................................................................................

..........................................................................................


..........................................................................................

- செயற்பாடு:
  1. ஆலயம் செல்லுமுன் மேற்கொள்ள வேண்டிய ஆயத்தங்களைப் படிமுறையாகக் கூறுக.
  2. ஆலயத்திற்குக் கொண்டு செல்லத்தக்க பூசைப்பொருட்களின் பட்டியலைத் தயாரித்து வகுப்பில் காட்சிப்படுத்துக.
  3. ஆலயத்தினுள் பின்பற்றப்படும் வழிபாட்டு ஒழுங்கு முறைகளை வகுப்பில் செய்து காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயகுரவர் நால்வர்



- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வரும் சைவ சமய குரவர்கள் ஆவர்.
- இவர்கள் பரம்பொருளாகிய சிவனைக் குறித்துப் பல பாடல்களைப் பாடியுள்ளனர்.
- சிவன் அருளால் பல அற்புதச் செயல்களைச் செய்துள்ளனர்.
- சைவ சமயமே மெய்ச்சமயம் என்று நிலைநிறுத்தியவர்கள்.
- இவர்கள் தமிழ் நாட்டில் உள்ள தலங்கள் பலவற்றிற்கும் கால்நடையாகச் சென்று அத்தலங்களில் உள்ள தெய்வங்கள் மீது அருட்பாடல்களைப் பாடினர். பல அற்புதங்களையும் செய்தனர். சமயப் பணிகளோடு சமூகப் பணிகளையும் செய்தனர்.
- இவர்களது அருட்செயல்களால் சைவசமயம் தழைத்தோங்கியது. மக்களிடையே சமய உணர்வு பெருகியது.
- நால்வர் காட்டிய வழியை நாமும் பின்பற்றி நடப்போமாக.

(அ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

- இவர் சோழ நாட்டில் உள்ள சீர்காழிப் பதியில் அவதரித்தார். இவரது தந்தையாரின் பெயர் சிவபாதவிருதயர். தாயார் பகவதி அம்மையார்.
- ஒரு நாள் சிவபாதவிருதயர் தோணிபுரக் கோயிலுக்குச் சென்றார். குழந்தையும் அவர் பின்னே சென்றது.
- குழந்தையைக் குளக்கரையில் இருத்திவிட்டு சிவபாதவிருதயர் குளத்தில் இறங்கி நீராடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தந்தையைக் காணாது ஏங்கிய குழந்தை 'அம்மே, அப்பா' என்று அழுதது.
- அவ்வேளையில் சிவபெருமான் உமாதேவியாரோடு அங்கே தோன்றினார்.
- உமையம்மை திருமுலைப்பாலைக் குழந்தைக்கு ஊட்டினார். அதனைப் பருகிய குழந்தை சிவஞானத்தையும் கலைஞானத்தையும் பெற்றது.
- நீராடிவிட்டு வந்த தந்தை குழந்தையின் வாயில் பால் ஒழுகுவதைக் கண்டார். உனக்குப் பால் தந்தது யாரென வினவினார். உடனே அக்குழந்தை வானத்தைச் சுட்டிக்காட்டி 'தோடுடைய செவியன்...' என்னும் தேவாரப் பதிகத்தைப் பாடியது.
- மூன்று வயதில் தேவாரம் பாடிய ஞானக்குழந்தை செய்த அற்புதங்கள் பலவாகும். பாடிய தேவாரப்பதிகங்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.
- சிவபெருமான் இவருக்குப் பொற்றாளம், முத்துக்குடை, முத்துச்சின்னம், முத்துப்பந்தர் ஆகியவற்றை வழங்கினார். இறைவனிடம் படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்தார். கூன்பாண்டியனின் வெப்புநோயைப் போக்கினார். பூம்பாவையை உயிர் பெறச் செய்தார். திருமறைக்காட்டில் (வேதாரணியத்தில்) வேதங்களினால் பூட்டப்பட்டுத் திருநாவுக்கரசு நாயனாரால் திறக்கப்பட்ட திருக்கதவை அடைக்கச் செய்தார். சைவத்தையும் தமிழையும் வளர்த்தார்.
- திருஞானசம்பந்தரைப் பாலறாவாயர், ஆளுடையபிள்ளை. பரசமயகோளரி எனவும் அழைப்பர்.
- இவர் பதினாறு ஆண்டுகள் வாழ்ந்து வைகாசி மூலநாளில் சோதியுட் கலந்தார்.

(ஆ) திருநாவுக்கரசு நாயனார்

- இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வாழ்ந்த புகழனாருக்கும், மாதினியாருக்கும் மகனாகப் பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார் என்பதாகும்.
- இவர் திருஞானசம்பந்தர் காலத்தில் (கி.பி. 7 ஆம் நூற்றாண்டில்) வாழ்ந்தவர். இளமைக்காலத்தில் பல துன்பங்களுக்கு உள்ளானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமணசமயத்தில் சேர்ந்து தருமசேனர் என்னும் பெயருடன் பெரும் குருவாக விளங்கினார்.
- திருநாவுக்கரசரது தமக்கையார் திலகவதியார். இவர் சைவசமயத்தில் மிக்க பற்றுக் கொண்டவர். தம்பியாரைச் சைவத்திற்கு மீட்டுத் தருமாறு இறைவனை வேண்டி வந்தார். ஒருநாள் இறைவன் திலகவதியார் கனவில் தோன்றி 'தம்பியை மீட்டுத் தருவோம்' என்றார்.
- தருமசேனருக்குச் சூலைநோய் ஏற்பட்டது. அதனைக் குணப்படுத்த சமணர்களது தந்திரம், மந்திரம், வைத்தியம் எதுவும் பயனளிக்கவில்லை.
- வருத்தம் தாங்கமுடியாது தமக்கையாரிடம் வந்தார். தமக்கையார் திருவைந்தெழுத்தை ஓதித் திருநீறு கொடுத்தார். தமக்கையார் கொடுத்த திருநீற்றைத் தமது உடலெங்கும் பூசினார். திலகவதியார் தம்பியாரைத் திருவதிகை வீரட்டானேசுவரர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார்.
- அவர் கோயிலை வலம் வந்து 'கூற்றாயினவாறு...' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். சூலைநோய் நீங்கியது. அவ்வேளை நாவுக்கரசு என்னும் பெயர் இறைவனால் அவருக்கு வழங்கப்பட்டது.
- திருநாவுக்கரசர் சைவத்தைத் தழுவியமையைச் சமணர்கள் அறிந்தனர்.
- பல்லவமன்னன் மகேந்திரவர்மனின் ஆதரவுடன் பல கொடுமைகளைச் செய்தனர். கல்லோடு கட்டிக் கடலில் போட்டனர். எதிர்ப்பட்ட துன்பங்களை எல்லாம் இறைவன் அருளால் வெற்றி கொண்டார் நாவுக்கரசர். பல்லவமன்னனையும் சைவனாக மாறச் செய்தார். பல தேவாரப் பதிகங்களைப் பாடினார். ஊர்தோறும் உள்ள சிவாலயங்களுக்குச் சென்று உழவாரம் கொண்டு, புல், பூண்டுகளைச் செதுக்கிப் புனிதமாக்கினார்.
- சிரமதானப் பணியின் முன்னோடியாக இவரது உழவாரப் பணி அமைந்தது.
- நாவுக்கரசர் பல அற்புதங்களைச் செய்தார். அவற்றுள் சில வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சமணர்களாலே சுண்ணாம்பு அறையில் ஏழு நாட்கள் அடைக்கப்பட்டிருந்தும் வேகாது பிழைத்தமை.
2. சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டபின்பும் சாகாது உயிரோடிருந்தமை.
3. கொல்லவந்த யானை அவரை வணங்கிச் சென்றமை.
4. கல்லோடு கட்டிக் கடலில் இட்டபோது கல் தெப்பமாக மிதந்தமை.
5. சம்பந்தருடன் சேர்ந்து படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்தமை.
6. வேதாரணியக் கோயில் கதவு திறக்கப் பாடியமை.

- இவரை அப்பர், ஆளுடைய அரசு, வாகீசர், நாவுக்கரசர், தாண்டகவேந்தர், உழவாரப்படையாளி எனப் பல பெயர்களால் அழைப்பர்.
- நாவுக்கரசர் பாடிய தேவாரப் பதிகங்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.
- 81 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த அப்பர் சுவாமிகள் சித்திரைச் சதய நன்னாளில் இறையடி எய்தினார்.

(இ) சுந்தரமூர்த்தி நாயனார்

- இவரது பிள்ளைத் திருநாமம் நம்பியாரூரர். இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் சடையனாருக்கும், இசைஞானியாருக்கும் மகனாகப் பிறந்தார். நரசிங்க முனையர் என்னும் மன்னரால் வளர்க்கப் பெற்றார்.
- இவர் திருமணப் பருவத்தை அடைந்ததும் புத்தூர் சடங்கவி சிவாசாரியாரின் மகளைத் திருமணம் செய்ய ஏற்பாடாகியது. திருமணவேளையில் சிவபெருமான் கிழப் பிராமணர் வேடந்தாங்கி வந்து திருமணத்தைத் தடுத்தார். இவன் என் அடிமை என்று வாதிட்டார். சுந்தரரைத் தடுத்தாட் கொண்டார். கிழப் பிராமணரோடு வாதிட்ட போது சுந்தரர் அவரைப் பித்தா என்று ஏசினார். அதனால் வன்றொண்டர் என்னும் பெயரையும் பெற்றார்.
- திருவெண்ணெய் நல்லூர்த்தலத்தில் நற்றமிழால் எனைப் பாடுக எனப் பணிப்புரை விடுத்தார் சிவபெருமான். என்ன சொல்லிப் பாடுவேன் என்று அவர் வினவியபோது 'பித்தா என்று சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அழைத்தாய்; அப்படியே பாடுக' என்றார் இறைவன். உடனே சுந்தரர் 'பித்தா பிறை சூடி....' என்னும் தேவாரத்தைப் பாடினார்.

- சுந்தரர் பல அற்புதங்களைச் செய்தார். பல தலங்களுக்கும் சென்று தேவாரம் பாடினார். அவை ஏழாம் திருமுறையாக உள்ளன.
- சுந்தரர் செய்த அற்புதங்கள் பல. அவற்றுட் சில:

  1. செங்கட்டிகளைப் பொன் கட்டிகளாக்கியமை.
  2. ஆற்றிலிட்ட பொன்னை குளத்தில் எடுத்தமை.
  3. முதலை உண்ட பிள்ளையை மீட்டமை.

- சுந்தரர், தம்பிரான்தோழர், வன்றொண்டர், ஆலாலசுந்தரர், திருநாவலூரார், நம்பியாரூரர் எனப் பல பெயர்களால் இவரை அழைப்பர்.
- இவர் 18 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து ஆடிமாதச் சோதி நன்னாளில் திருக்கைலையை அடைந்தார்.

**(ஈ) மாணிக்கவாசக சுவாமிகள்**

- பாண்டிய நாட்டில் திருவாதவூரில் சம்புபாதாசிரியருக்கும் சிவஞானவதியாருக்கும் மகனாகப் பிறந்த இவரது பிள்ளைத்திருநாமம் திருவாதவூரர் என்பதாகும்.
- திருவாதவூரர் பாண்டிய மன்னனின் முதலமைச்சராகப் பணிபுரிந்தார்.
- அரசனின் பணிப்பின்படி குதிரை வாங்கச் சென்றபோது திருப்பெருந்துறையில் பரமாச்சாரியராக இருந்த இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். குதிரை வாங்க வந்த பணியை மறந்தமையால் அரசனின் தண்டனைகளுக்குள்ளானார்.
- இவர் பொருட்டு இறைவன் நரிகளைப் பரிகளாக்கினார். வைகை நதியைப் பெருக்கெடுத்து ஓடச் செய்தார்.
- திருவாதவூரர் பல தலங்களையும் தரிசித்தார். சிதம்பரத்தில் இவரது திருவாசகப் பாடல்களைக் கேட்டு இன்புற்ற இறைவன் இவருக்கு மாணிக்கவாசகர் என்னும் நாமத்தைச் சூட்டினார்.
- இறைவன் அடியவராக வந்து அவரது திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எழுதும் பெரும் பேறு பெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஈற்றில் எல்லோரும் காணக் கனகசபையுட் புகுந்து இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.
- மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார்.
- இவ்வுலகில் 32 ஆண்டுகள் வாழ்ந்த மாணிக்கவாசகர் ஆனிமகம் நன்னாளில் இறைவனுடன் கலந்தார்.
- இவர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது.

---

பாடம்: 13 வினா - விடை

---

1. சைவசமயகுரவர் என அழைக்கப்படுவோர் யாவர்?

✧ *திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள்.*

2. சமயகுரவர்கள் ஆற்றிய பணிகள் எவை?

✧ *தமிழ்நாட்டில் உள்ள பல சிவத்தலங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டு அங்கே கோயில் கொண்டிருக்கும் இறைவன் மீது பதிகம் பாடியதுடன் பல அற்புதங்களையும் நிகழ்த்தியமை.*

3. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பிறந்த ஊர் எது?

✧ *சோழநாட்டில் உள்ள சீர்காழி*

4. அவரது தாய், தந்தை பெயர் என்ன?

✧ *தந்தையார் - சிவபாதவிருதயர், தாயார் - பகவதி*

5. திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்தவர் யார்? எத்தனையாம் வயதில் ஞானப்பால் பருகினார்?

✧ *உமையம்மையார், மூன்றாம் வயதில் ஞானப்பால் பருகினார்.*

6. திருஞானசம்பந்தர் முதன்முதலில் பாடிய தேவாரம் எது?

✧ *'தோடுடைய செவியன் ....' எனத் தொடங்கும் தேவாரம்.*

7. திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள் எவை?

✧ I. *பாண்டிய மன்னனின் வெப்புநோயை நீக்கியமை, அவனைச் சைவசமயத்துக்கு மாற்றியமை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨. பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர் பெற்றெழச் செய்தமை
3. இறைவனிடம் படிக்காசு பெற்று அடியவருக்கு உணவளித்தமை
௪. வேதாரணியத்தில் (திருமறைக்காடு) திருக்கோயில் கதவு அடைக்கப் பாடியமை
௫. பூம்பாவையை உயிர்பெற்றெழச் செய்தமை
௬. திருக்கொடிமாடச் செங்குன்றூரில் மக்களது குளிர்ச்சுரம் நீங்கச் செய்தமை

**8. திருஞானசம்பந்தரைக் குறிக்கும் வேறுபெயர்கள் எவை?**

✧ *பாலறாவாயர், ஆளுடையபிள்ளை, பரசமயகோளரி*

**9. சிவபெருமான் ஞானசம்பந்தருக்குக் கொடுத்தவை எவை?**

✧ *பொற்றாளம், முத்துக்குடை, முத்துச்சின்னம், முந்துப்பந்தர்*

**10. தோடுடைய செவியன் யார்?**

✧ *சிவபெருமான்*

**11. திருஞானசம்பந்தரது குருபூசைத்தினம் எது?**

✧ *வைகாசிமாத மூல நன்னாள்*

**12. திருஞானசம்பந்தர் காலத்தில் வாழ்ந்த மற்றோர் நாயனார் யார்?**

✧ *திருநாவுக்கரசு நாயனார்*

**13. திருஞானசம்பந்தரது தேவாரப் பதிகங்கள் எத்திருமுறைகளில் உள்ளன?**

✧ *முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளில் உள்ளன.*

**14. திருநாவுக்கரசு நாயனாரது ஊர் எது?**

✧ *திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்த திருவாமூர்*

**15. திருநாவுக்கரசு நாயனாரின் பெற்றோர் பெயர் என்ன?**

✧ *தந்தையார் - புகழனார், தாயார் - மாதினியார்*

**16. திருநாவுக்கரசு நாயனாரின் பிள்ளைத் திருநாமம் யாது?**

✧ *மருணீக்கியார்*

**17. இவர் சமணசமயத்தில் சேர்ந்த போது பெற்ற பெயர் என்ன?**

✧ *தருமசேனர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. தருமசேனரைச் சைவத்திற்கு மீட்க முயன்றவர் யார்?

✧ *இவரது தமக்கையான திலகவதியார்*

19. இறைவன் தருமசேனருக்குக் கொடுத்த நோய் யாது?

✧ *சூலைநோய்*

20. தருமசேனர் தமக்கையிடம் வரக் காரணம் யாது?

✧ *சூலைநோயின் கொடுமை தாங்கமுடியாமை.*

21. சூலைநோய் நீங்கத் திருநாவுக்கரசர் பாடிய திருப்பதிகம் எது?

✧ *"கூற்றாயினவாறு விலக்ககலீர்....." எனத் தொடங்கும் திருவீரட்டானத் திருப்பதிகம்.*

22. நாவுக்கரசர் எனப் பட்டம் வழங்கியவர் யார்?

✧ *சிவபெருமான் (திருவீரட்டானேசுவரர்)*

23. சமணசமயத்தவர்கள் அப்பருக்குச் செய்த கொடுமைகள் எவை?

✧
1. *சுண்ணாம்பு அறையில் அடைத்தமை.*
2. *நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணக் கொடுத்தமை.*
3. *கொல்லுமாறு யானையை ஏவிவிட்டமை.*
4. *கல்லோடு கட்டிக் கடலில் போட்டமை.*

24. திருநாவுக்கரசர் செய்த அற்புதங்கள் சில தருக.

✧
1. *பாம்பு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர் பெறச் செய்தமை.*
2. *இறைவனிடம் படிக்காசு பெற்றமை.*
3. *திருமறைக்காட்டில் (வேதாரணியத்தில்) பூட்டப்பட்டிருந்த திருக்கதவு திறக்கச் செய்தமை.*
4. *கல்லோடு கட்டிக் கடலில் போட்ட போது கல்லைத் தெப்பமாக மிதக்கச் செய்தமை.*

25. திருநாவுக்கரசரைக் குறிக்கும் மறு பெயர்கள் எவை?

✧ *அப்பர், ஆளுடைய அரசு, வாகீசர், தாண்டகவேந்தர், உழவாரப் படையாளி.*

26. அப்பர் சுவாமிகள் முத்தியடைந்த தினம் எது?

✧ *சித்திரை மாதச் சதய நாள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. சுந்தரமூர்த்தி நாயனார் எங்கே பிறந்தார்?

✧ *திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலூரில் பிறந்தார்.*

28. அவரது தாய், தந்தையர் பெயர் என்ன?

✧ *தந்தையார் - சடையனார் தாயார் - இசைஞானியார்.*

29. சுந்தரர் யாரால் ஆட்கொள்ளப்பட்டார்?

✧ *கிழப் பிராமணராக வந்த சிவபெருமானால்.*

30. இச்சம்பவம் எங்கே நடைபெற்றது?

✧ *புத்தூரில் நடைபெற்றது (தமிழ்நாட்டில் உள்ளது)*

31. சுந்தரமூர்த்தி நாயனாரின் பிள்ளைத் திருநாமம் எது?

✧ *நம்பியாரூரர்.*

32. சுந்தரர் 'பித்தா' என யாரை ஏசினார்?

✧ *கிழப்பிராமணர் வடிவில் வந்த சிவபெருமானை ஏசினார்.*

33. சுந்தரர் முதன்முதலில் பாடிய தேவாரம் எது?

✧ *"பித்தா பிறை சூடி..." எனத் தொடங்கும் தேவாரம்.*

34. சுந்தரர் செய்த அற்புதங்கள் சில தருக.

✧ 1. *செங்கட்டிகளைப் பொன் கட்டிகளாக்கியமை.*

2. *மணிமுத்தாற்றிலிட்ட பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் எடுத்தமை.*

3. *முதலை உண்ட பாலகனை மீட்டமை.*

35. சுந்தரமூர்த்தி நாயனாரின் மறுபெயர்கள் சில கூறுக.

✧ *ஆலாலசுந்தரர், வன்றொண்டர், நாவலூரர், ஆளுடையநம்பி, நம்பியாரூரர், தம்பிரான் தோழர்.*

36. சுந்தரர் முத்தியடைந்த தினம் எது?

✧ *ஆடிமாதச் சோதி நாள்.*

37. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் எது?

✧ *பாண்டி நாட்டில் உள்ள திருவாதவூர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. அவரது பிள்ளைத் திருநாமம் யாது?

✧ *திருவாதவூரர்.*

39. மாணிக்கவாசகரின் தாய், தந்தையர் பெயர் யாது?

✧ *தந்தையார் - சம்புபாதாசிரியர் தாயார் - சிவஞானவதி.*

40. திருவாதவூரர் வகித்த பதவி யாது?

✧ *பாண்டிய மன்னனின் முதலமைச்சர் பதவி.*

41. பரமாச்சாரியாராக வந்தவர் யார்?

✧ *சிவபெருமான்.*

42. திருப்பெருந்துறையில் ஞானகுருவை எங்கு சந்தித்தார்?

✧ *குருந்த மர நிழலில் சந்தித்தார்.*

43. இச்சந்திப்பினால் விளைந்தது என்ன?

✧ *திருவாதவூரர் குதிரை வாங்கும் பொருட்டு மன்னரால் அனுப்பி வைக்கப்பட்ட பணியை மறந்தார். இதனால் அரசனின் தண்டனைக்கு உள்ளானார்.*

44. இறைவன் இவர் பொருட்டுச் செய்த திருவிளையாடல்கள் எவை?

✧ *நரிகளைப் பரிகளாக்கினார். வைகை நதியைப் பெருகச் செய்தார்.*

45. இறைவன் இவருக்குச் சூட்டிய பெயர் யாது?

✧ *மாணிக்கவாசகர் என்னும் நாமத்தைச் சூட்டினார்.*

46. மாணிக்கவாசகர் அருளிய நூல்கள் எவை?

✧ *திருவாசகம், திருக்கோவையார்.*

47. இவர் அத்துவித (இரண்டறக் கலத்தல்) முத்தியடைந்த நாள் எது?

✧ *ஆனி மக நன்னாள்.*

48. திருவாசகமும் திருக்கோவையாரும் எத்தனையாம் திருமுறையாக உள்ளது?

✧ *எட்டாம் திருமுறையாக உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பொருத்தமாக இணையுங்கள்.

| | |
|---|---|
| திருஞானசம்பந்தர் | மாணிக்கவாசகர் |
| பாலறா வாயர் | திருநாவலூர் |
| ஆலாலசுந்தரர் | திருஞானசம்பந்தர் |
| மருணீக்கியார் | சீர்காழி |
| திருவாதவூரர் | அப்பர் |

2. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.

அ) திருஞானசம்பந்தர் திருவாசகத்தைப் பாடினார். (..............)

ஆ) அப்பர் சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார். (..............)

இ) சித்திரை மாதத்துச் சதய நாளில் சுந்தரர் முத்தியடைந்தார். (..............)

ஈ) சுந்தரர் சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் மகனாகப் பிறந்தார். (..............)

உ) திருவாசகம், திருக்கோவையார் நூல்கள் அப்பர் சுவாமிகளால் பாடப்பட்டனவாகும். (..............)

ஊ) ஆனி மாதத்து மகம் நாளில் மாணிக்கவாசகர் முத்தியடைந்தார். (..............)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ. சமணசமயத்தில. சேர்ந்த மருணீக்கியார் ........................ என்னும் பெயரைப் பெற்றிருந்தார்.

ஆ. ........................ சமணசமயத்தை விடுத்துச் சைவத்துக்கு மாறினான்.

இ. சிவபெருமான் கிழப்பிராமணர் வடிவில் வந்து சுந்தரரை ..................................

ஈ. ஆலாலசுந்தரர் திருநாவலூரில் ..................................

உ. மாணிக்கவாசகருக்காக இறைவன் .................................. பரிகளாக்கினார்.

உ. வைகாசி மாத மூலநன்னாளில் .................................. இறையடி சேர்ந்தார்.

| | | |
|---|---|---|
| மகேந்திரவர்மன் | சம்பந்தர் | நரிகளை |
| அவதரித்தார் | தருமசேனர் | ஆட்கொண்டார் |

4. விடை எழுதுங்கள்.

அ. ஆளுடைய அரசு என்று அழைக்கப்பட்டவர் யார்?

..........................................................................................

ஆ. திருமுனைப்பாடி நாட்டில் அவதரித்த நாயனார் யார்?

..........................................................................................

இ. திருவாதவூரர் அருளிய நூல்கள் யாவை?

..........................................................................................

ஈ. சமணர்கள் திருநாவுக்கரசருக்கு ஏற்படுத்திய தீங்குகள் எவை?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. பாண்டிய மன்னன் மாணிக்கவாசகரைத் தண்டித்தது ஏன்?

..........................................................................................

..........................................................................................

5. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| நாயன்மார் பெயர் | தாய் – தந்தை பெயர் | மறுபெயர் | செய்த அற்புதங்கள் |
|---|---|---|---|
| 1. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் | ............... ............... | ............ ............ | ........................ ........................ |
| 2. திருநாவுக்கரசு நாயனார் | ............... ............... | ............ ............ | ........................ ........................ |
| 3. சுந்தரமூர்த்தி நாயனார் | ............... ............... | ............ ............ | ........................ ........................ |
| 4. மாணிக்கவாசகர் | ............... ............... | ............ ............ | ........................ ........................ |

- செயற்பாடு:

1. சைவசமயகுரவர் நால்வரும் செய்த அற்புதங்களைப் பட்டியற்படுத்தி வகுப்பில் காட்சிப்படுத்துக.
2. சமயகுரவர் நால்வரும் அருளிய திருமுறைகளைப் பட்டியலிடுக.
3. 'நால்வர் காட்டிய வழி' என்னும் தலைப்பில் வகுப்பில் ஐந்து நிமிட நேரம் உரையாற்றுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாசமுனிவர்



- ஞானப்பிரகாசமுனிவர் யாழ்ப்பாணத்தில் உள்ள திருநெல்வேலியில் கி.பி. 1625 ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது தந்தையார் காராளபிள்ளை என்பவராவார்.
- இவர் வாழ்ந்த காலம் யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.
- போர்த்துக்கேயர் ஆட்சியில், ஒவ்வொரு குடியினரும் ஓர் ஒழுங்குமுறைக்கமைய ஒவ்வொரு பசுவைப் பறங்கியர் உணவுக்காகக் கொடுத்தல் வேண்டும் என்ற சட்டத்தை விதித்திருந்தனர். இச்சட்டம் பசுவைத் தெய்வமாக மதிக்கும் சைவமக்களுக்குப் பெரும் கவலையை அளித்தது.
- இறைபக்தியும் உயிர்களிடத்து மிக்க அன்பும் பூண்ட ஞானப்பிரகாசர் மாட்டைக் கொலை செய்யும் கொடுந்தொழிலுக்கு உடந்தையாகி வாழ விரும்பவில்லை. தாம் பசு வழங்கும் முறை வருதற்கு முதல் நாளே இரவோடிரவாக யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்டுத் தமிழகம் சென்றார்.
- தமிழ்நாடு சென்ற ஞானப்பிரகாசர் வேதாரணியத்தில் தங்கியிருந்து சிலகாலம் சமயத் தொண்டாற்றினார். பின்னர் அங்கிருந்து திருப்புகலூர் சென்று அண்ணாசாமி ஆசாரியரிடத்தில் சிவதீட்சை பெற்றார்.
- சிதம்பரத்தை வசிப்பிடமாக்கிக் கொண்ட ஞானப்பிரகாசர் நடராசப்பெருமானிடம் பேரன்பு கொண்டு வாழ்நாள் முழுவதும் சிவத்தொண்டாற்றினார்.
- இவர் வங்காளம் சென்றிருந்தபோது அங்கிருந்த பிராமணத்துறவி ஒருவரிடம் வடமொழியில் உள்ள தருக்கம், மீமாம்சை, வியாகரணம் முதலியவற்றைக் கற்றார். குருஉபதேசம் பெற்றார். குருவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைப்படி திருவண்ணாமலை ஆதீனத்தை அடைந்து விசேட தீட்சை பெற்றுத் துறவியானார். துறவியான காரணத்தால் 'முனிவர்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பெற்றார்.

- வடமொழியிலும் தமிழிலும் சைவசித்தாந்த நூல்களை இயற்றும் ஆற்றல் பெற்றவராக விளங்கினார்.
- இவர் சிதம்பரத்தில் 'ஞானப்பிரகாசம்' என்னும் குளத்தையும், அதனை அடுத்து மடம் ஒன்றையும் உருவாக்கினார். அவற்றின் அருகில் ஆச்சிரமம் ஒன்றையும் அமைத்தார். தமது இறுதிக்காலத்தில் அங்கிருந்து சமய நூல்களுக்கு உரை எழுதுவதிலும் சிவப்பணிகளிலும் தீவிர கவனம் செலுத்தினார்.
- சிவஞானசித்தியார் - சுபக்கத்திற்குத் தமிழில் இவர் எழுதியுள்ள உரை சிறப்பு வாய்ந்தது. வடமொழியில் சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிரசாத தீபிகை முதலான நூல்களையும் பௌட்கராகம விருத்தி, சிவஞானபோத விருத்தி முதலிய உரைநூல்களையும் எழுதியுள்ளார்.
- யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகம் சென்று சைவசித்தாந்தப் பணிபுரிந்த ஞானப்பிரகாசர் இவ்வுலகில் வாழ்ந்த காலம் 33 ஆண்டுகளேயாகும். இக்குறுகிய காலத்தில் இவர் ஆற்றிய பணிகள் போற்றுதற்குரியனவாகும்.
- பெரும் சமய சிந்தனையாளராக விளங்கிய இப்பெரியார் கி.பி. 1658ஆம் ஆண்டு பங்குனிமாதம் பூச நட்சத்திரத்தில் இறையடி எய்தினார்.
- சிதம்பரத்தில் இவர் உருவாக்கிய குளமும், தாபித்த மடமும் என்றும் இவரை நினைவூட்டும் என்பதில் ஐயமில்லை.

---

**பாடம்: 14** — **வினா - விடை**

---

1. **ஞானப்பிரகாசமுனிவரிடம் இளமைமுதல் காணப்பட்ட நற்பண்புகள் எவை?**

✧ *உயிர்களிடத்து அன்பு, இறைபக்தி, அநீதியான சட்டத்திற்கு அடிபணியாத தன்மை ஆதியாம் பண்புகள் காணப்பட்டன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இவர் யாழ்ப்பாணத்தை விட்டுத் தமிழகம் சென்றமைக்கான காரணம் என்ன?

✧ *பறங்கியருக்கு உணவுக்காகப் பசுவைக் கொடுக்க விரும்பாமை.*

3. ஞானப்பிரகாசர் யாரிடம் சிவதீட்சை பெற்றார்?

✧ *அண்ணாசாமி ஆசாரியரிடத்தில் சிவதீட்சை பெற்றார்.*

4. வங்காளத்தில் தங்கியிருந்த காலத்தில் பிராமணத் துறவியிடம் இவர் எவற்றைக் கற்றுக் கொண்டார்?

✧ *வடமொழியில் உள்ள தருக்கம், மீமாம்சை, வியாகரணம் முதலியவற்றைக் கற்றுக் கொண்டார்.*

5. இவர் எங்கு விசேட தீட்சை பெற்றுத் துறவியானார்?

✧ *திருவண்ணாமலை ஆதீனத்தில் விசேட தீட்சை பெற்றுத் துறவியானார்.*

6. இவரை முனிவர் என்று அழைப்பது ஏன்?

✧ *துறவியான காரணத்தினாலும் ஆச்சிரமத்தில் வதிந்தமையாலும், சீரிய சமயத் தொண்டரானதினாலும் இவரை முனிவர் என அழைத்தனர்.*

7. ஞானப்பிரகாசமுனிவர் சிதம்பரத்தில் தாபித்தவை எவை?

✧ *ஞானப்பிரகாசம் என்னும் குளம், ஞானப்பிரகாசம் மடம், ஆச்சிரமம் ஆகியனவாகும்.*

8. ஞானப்பிரகாசமுனிவர் எழுதிய நூல்களுள் சிறப்பு வாய்ந்தது எது?

✧ *சிவஞானசித்தியார் - சுபக்கத்திற்கான உரை*

9. இவர் வடமொழியில் எழுதிய நூல்கள் எவை?

✧ *சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிரசாத தீபிகை*

10. ஞானப்பிரகாசமுனிவர் எழுதிய உரைநூல்கள் சில தருக.

✧ *பௌட்கராகம விருத்தியுரை, சிவஞான போத விருத்தியுரை, சிவஞானசித்தியார் - சுபக்கம் உரை.*

11. ஞானப்பிரகாசர் இறையடி எய்திய தினம் எது?

✧ *கி.பி. 1658 ஆம் ஆண்டு பங்குனி மாத பூச நட்சத்திர நன்னாள் ஆகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| ஞானப்பிரகாசமுனிவரின் பிறப்பிடம் | சிதம்பரம் |
| ஞானப்பிரகாசம் குளம் | ஆதீனம் |
| பிரமாண தீபிகை | பறங்கியர் |
| திருவண்ணாமலை | சிவஞானசித்தியார் |
| பசுவதைக்கு அஞ்சி தமிழகம் சென்றவர் | திருநெல்வேலி |
| போர்த்துக்கேயர் | ஞானப்பிரகாசர் |
| சைவசித்தாந்த நூல் | வடமொழிநூல் |

2. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ. ஞானப்பிரகாசர் இயல்பாகவே உயிர்களிடத்து ................ பூண்டவர்.

ஆ. சட்டத்திற்கு அடிபணிந்து பசுவைக்கொடுக்க அவர் மனம் ..................................

இ. பசுவதைக்கு உடந்தையாக இருக்க விரும்பாது ....................... சென்றார்.

ஈ. சிதம்பரத்தில்............................ என்னும் குளம் உள்ளது.

உ. .................................. சிறந்த சைவசித்தாந்த நூலாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| சிவஞானசித்தியார் | அன்பு | ஒப்பவில்லை | ஞானப்பிரகாசம் | தமிழகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வருவன சரியாயின் ✓ என்றும் பிழையாயின் × என்றும் அடையாளம் இடுங்கள்.

அ. ஞானப்பிரகாச முனிவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். (............)

ஆ. இவர் பசுவதைக்கு உடந்தையாகச் செயற்பட்டமையால் தமிழகம் சென்றார். (............)

இ. ஞானப்பிரகாசமுனிவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை வாய்ந்தவர். (............)

ஈ. இவர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டமையால் முனிவர் எனும் சிறப்புப்பெற்றார். (............)

உ. ஞானப்பிரகாசமுனிவர் சமயப்பணி எதிலும் ஈடுபடவில்லை. (............)

4. விடை எழுதுங்கள்.

அ. ஞானப்பிரகாசர் யாழ்ப்பாணத்தை விட்டுத் தமிழகம் சென்றதற்கான காரணம் யாது?

..........................................................................................................

..........................................................................................................

ஆ. போர்த்துக்கேயரைக் குறிக்கும் மற்றொரு பெயர் யாது?

..........................................................................................................

இ. யாழ்ப்பாணத்தில் வீட்டுக்கு ஒரு பசு வழங்கவேண்டுமெனச் சட்டம் இயற்றியோர் யார்?

..........................................................................................................

ஈ. ஞானப்பிரகாசமுனிவர் சிதம்பரத்தில் செய்த பணிகள் எவை?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. ஞானப்பிரகாசர் எழுதிய உரைநூல்கள் எவை?

.......................................................................................................

.......................................................................................................

ஊ. ஞானப்பிரகாசமுனிவர் சைவத்துக்கு ஆற்றிய பணிகள் இரண்டு தருக.

.......................................................................................................

.......................................................................................................

எ. இவர் எழுதிய வடமொழி நூல்கள் எவை?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

- செயற்பாடு:

1. இப்பாடத்தைக் கற்றதன் மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட முக்கிய விடயம் எதுவென வகுப்பில் கலந்துரையாடுங்கள்.
2. தமிழகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையேயான சமயத்தொடர்புகள் குறித்த தகவல்களைத் திரட்டுங்கள்.
3. ஈழத்திலிருந்து தமிழ்நாட்டுக்குச் சென்று சமய, தமிழ்ப் பணிகள் ஆற்றிய பெரியோர்களின் பட்டியலைத் தயாரித்து வகுப்பில் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புக்கள்

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



- ஈழத்திலும், தமிழகத்திலும் தமிழும் சைவமும் வளரப் பெரும் பணியாற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார்.
- அவர் யாழ்ப்பாணத்து நல்லூரில் 1822ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18ஆம் திகதி கந்தப்பிள்ளை, சிவகாமியம்மையாரின் மகனாகப் பிறந்தார்.
- இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம் என்பதாகும்.
- ஆறுமுகம் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், நல்லூர் வேலாயுதமுதலியார், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் ம. சரவணமுத்துப்புலவர் ஆகியோரிடம் தமிழ் இலக்கிய, இலக்கணங்களை நன்கு கற்றார்.
- தமிழோடு வடமொழியையும் நன்கு கற்றுத் தேர்ந்தார்.
- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என அழைக்கப்படும் வெஸ்லியன் மெதடிஸ்த மிசன் பாடசாலையில் ஆங்கிலம் கற்றார். அதன் அதிபராயிருந்த பீற்றர் பார்சிவல் பாதிரியாரின் மதிப்புக்குரியவரானார். அங்கு சிறிது காலம் ஆசிரியராகவும் பணியாற்றினார்.
- சைவத்தையும், தமிழையும் தமது இரு கண்களாகக் கருதிச் செயற்பட்ட இவர் சிறந்த சிவபக்தி உடையவர். சிவனடியார் மீது பக்தி கொண்டவர். சிறந்த பேச்சாளர். நைட்டிகப் பிரமச்சாரியாக வாழ்ந்தவர். சிறந்த செயல் வீரர். கல்விமான்.
- இவரது சமயப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி என்பன உலகறிந்தவையாகும்.
- சைவசமயத்தை வளர்க்க இவர் பல வழிமுறைகளைக் கையாண்டார். ஆலயங்களில் சைவப் பிரசங்கங்களை நிகழ்த்தினார். சிவசின்னங்களின் பெருமைகளை எடுத்துரைத்தார். பிற சமயத்தினரின் மதமாற்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சைவப்பிள்ளைகள் சைவச் சூழலில் சைவசமயம் சார்ந்த கல்வியைப் பெறவேண்டுமெனக் கருதினார். இதன்பொருட்டு யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலும் சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவினார். ஊர்கள் தோறும் சைவப்பாடசாலைகள் தோன்ற வழிசெய்தார்.

- யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் அச்சகங்களை நிறுவி நூல்கள் பலவற்றைப் பதிப்பித்து வெளியிட்டார். பாடநூல்கள் பலவற்றைத் தாமே எழுதி வெளியிட்டார்.

- சைவவினாவிடை, பாலபாடம், பெரியபுராணவசனம், கந்தபுராணவசனம், இலக்கணச்சுருக்கம், திருவிளையாடற் புராணவசனம் முதலானவை நாவலர் எழுதிய நூல்களாகும்.

- வசனநடை கைவந்த வல்லாளர் எனவும் தமிழ் உரைநடையின் தந்தை எனவும் போற்றப்பட்டார்.

- ஆறுமுகத்தின் கல்விப் புலமையையும் நாவன்மையையும், சைவத் தமிழ்ப்பணிகளையும் நன்குணர்ந்த திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் எனும் பட்டத்தை வழங்கிப் பாராட்டியது.

- ஆறுமுகம் ஆறுமுகநாவலர் ஆனார்.

- ஆறுமுகநாவலரைச் சைவ உலகு ஐந்தாம் குரவர் எனப் போற்றுகிறது.

- நாவலரது பேச்சாலும் எழுத்தாலும் செயலாலும் சைவம் புத்துயிர் பெற்றது. சைவமக்கள் திருநீறு, உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களை அணியவும் திருமுறைகளைப் பாடவும், விரதங்களை அனுட்டிக்கவும் ஆலயதரிசனம் செய்யவும் சமய மரபுகளைப் பேணவும் முற்பட்டனர்.

- சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பணிசெய்த நாவலர் 1879 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21 ஆந் திகதி இறையடி எய்தினார். இவரது குருபூசைத்தினம் கார்த்திகை மாத மக நட்சத்திரமாகும்.

- நாவலர் பெருமானுக்குச் சைவமக்கள் பல ஊர்களிலும் உருவச் சிலையமைத்து விழா நடத்திக் கௌரவித்துள்ளனர்.

- இலங்கை அரசும் அவரைத் தேசிய வீரர்களில் ஒருவராகப் பிரகடனப் படுத்தி நினைவு முத்திரை வெளியிட்டுக் கௌரவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ நாவலர் பெருமானின் பணிகளைத் தமிழ்ப் பதிப்புத்துறையின் தந்தை எனப் போற்றப்படும் சி.வை. தாமோதரம்பிள்ளை பின்வரும் பாடலில் நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

♦ ''நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கே பிர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை''.

---

பாடம்: **15** வினா - விடை

---

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்த நாள் எது? பிறந்த இடம் எது?

✧ *18.12.1822. நல்லூர்*

2. அவரின் தாய் - தந்தையர் பெயர் என்ன?

✧ *தாய் - சிவகாமியம்மை, தந்தை - கந்தப்பிள்ளை*

3. நாவலருக்கு பெற்றோர் இட்ட பெயர் என்ன?

✧ *ஆறுமுகம்*

4. நாவலர் என்னும் பட்டம் இவருக்கு எதற்காக, எவ்வாதீனத்தால் வழங்கப்பட்டது?

✧ *ஆறுமுகத்தின் கல்விப்புலமையையும், நாவன்மையையும் சைவத் தமிழ்ப் பணிகளையும் பாராட்டித் திருவாவடுதுறை ஆதீனத்தால் 'நாவலர்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.*

5. நாவலருக்குக் குருகுல முறையில் கல்வி கற்பித்த ஆசிரியர்களின் பெயர்களைக் கூறுக.

✧ *நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப்புலவர்.*

6. ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படுபவர் யார்?

✧ *ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்*

7. நாவலர் ஆங்கிலக் கல்வியை எங்கே கற்றார்?

✧ *யாழ்ப்பாணம் வெஸ்லியன் மெதடிஸ்த மிசன் மத்திய கல்லூரியில் கற்றார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. நாவலரிடம் காணப்பட்ட சிறந்த பண்புகள் எவை?**

✧ *நாவலர் சைவத்தையும், தமிழையும் தமது இரு கண்களாக மதித்து வாழ்ந்தவர். பிரசங்க வன்மை, வாக்குச்சாமர்த்தியம், நல்லொழுக்கம், சிவபக்தி, சிவனடியார் பக்தி என்பன அவரிடம் காணப்பட்டன. சைவத்தையும் தமிழையும் பாதுகாப்பதே நோக்கமாகக் கொண்டு நைட்டிகப் பிரமச்சாரியாக வாழ்ந்து தொண்டாற்றியமை.*

**9. நாவலர் நிறுவிய முதலாவது பாடசாலை எது? எப்போது நிறுவப்பட்டது?**

✧ *யா/வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை. (தற்போது இது யா/வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயம் என்னும் பெயருடன் இயங்குகிறது) 1848 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.*

**10. சிதம்பரத்தில் நாவலர் நிறுவிய பாடசாலையின் பெயர் என்ன?**

✧ *சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை*

**11. நாவலர் சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் நிறுவிய அச்சுக்கூடங்களின் பெயர் என்ன?**

✧ *வித்தியாநுபாலன யந்திரசாலை.*

**12. நாவலர் எழுதிய நூல்கள் சில கூறுக.**

✧ *சைவவினாவிடை, பாலபாடம், பெரியபுராணவசனம், கந்தபுராணவசனம், திருவிளையாடற் புராணவசனம்.*

**13. அவர் பதிப்பித்த நூல்கள் சில கூறுக.**

✧ *கந்தபுராணம், நன்னூல் காண்டிகையுரை, திருக்குறள் பரிமேலழகர் உரை, சேதுபுராணம்.*

**14. நாவலர் சமயப்பணிகள் சில தருக.**

✧ 1. *சிவாலயங்களிலும் மடாலயங்களிலும் சைவசமய உண்மைகளை விளக்கிப் பிரசங்கம் செய்தார்.*

2. *ஆலயங்களில் புராணபடனம் செய்தார்.*

3. *சைவத்தின் சிறப்பினை விளக்கும் பல்வேறு துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டார்.*

4. *மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்தும் பொருட்டுத் தீவிர பிரசாரத்திலீடுபட்டார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. *திருக்கேதீச்சரம், கீரிமலைச்சிவன் கோயில் என்பனவற்றின் தொன்மைச் சிறப்புக்களை மக்களுக்கு எடுத்துக் கூறினார். அவற்றைப் புனரமைத்து நித்திய, நைமித்திய பூசைகளுக்கு வழிவகுக்குமாறு சைவ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.*

6. *சைவசமயநூல்கள் பலவற்றை எழுதியும், பதிப்பித்தும் பாரிய தொண்டாற்றினார்.*

**15. நாவலரின் சைவப் பிரசங்கத்தால் ஏற்பட்ட நன்மைகள் எவை?**

✧ *சைவமக்கள் சிவசின்னங்களை அணியவும், திருமுறைகளைப் பாடவும் விரதங்களை அனுட்டிக்கவும் ஆலய தரிசனம் செய்யவும் சமய மரபுகளைப் பேணவும் முற்பட்டனர்.*

**16. நாவலர் இறைபதம் அடைந்த நாள் எது?**

✧ *5.12.1879 இல் (கார்த்திகை மாதம் மக நாளில்) இறைபதம் அடைந்தார்.*

---

**பாடம்: 15** | **பயிற்சி : 27**

---

1. சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் இயற்பெயர்,

1. நாவலர் 2. ஆறுமுகம்
3. கந்தப்பிள்ளை 4. சுப்பிரமணியம்

ஆ. ஐந்தாம் குரவர் என்று அழைக்கப்படுபவர்,

1. சுந்தரர் 2. ஆறுமுகநாவலர்
3. மாணிக்கவாசகர் 4. அருணகிரிநாதர்

இ. நாவலர் என்னும் பட்டம் வழங்கிய ஆதீனம்,

1. திருப்பனந்தாள் ஆதீனம் 2. குன்றக்குடி ஆதீனம்
3. நல்லை ஆதீனம் 4. திருவாவடுதுறை ஆதீனம்

ஈ. நாவலர் ஆசிரியராகப் பணியாற்றிய கல்லூரி,

1. யாழ் - வெஸ்லியன் மெதடிஸ்த மிசன் மத்திய கல்லூரி
2. யாழ் - வேம்படி மகளிர் கல்லூரி
3. யாழ் - நாவலர் மகாவித்தியாலயம்
4. யாழ் - வைத்தீஸ்வராக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. நாவலர் சிதம்பரத்தில் அமைத்த பாடசாலையின் பெயர்,

1. நாவலர் வித்தியாலயம்
2. சைவப்பிரகாச வித்தியாலயம்
3. இந்து ஆரம்ப பாடசாலை
4. ஸ்ரீகணேச வித்தியாசாலை

2. சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் அடையாளம் இடுங்கள்.

அ. நாவலர் தமிழையும் சைவத்தையும் இரு கண்கள் எனக் கருதி வாழ்ந்தவர். (............)

ஆ. நாவலர் மேற்கொண்ட பணிகளில் புராண படனம் செய்தலும் ஒன்றாகும். (............)

இ. நாவலர் சிதம்பரத்தில் வைத்தீஸ்வர வித்தியாலயத்தைத் தாபித்தார். (............)

ஈ. கந்தபுராணம், நன்னூல், காண்டிகையுரை ஆதியாம் நூல்களை நாவலர் பதிப்பித்தார். (............)

உ. நாவலர் மதமாற்றத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்தார். (............)

3. விடை எழுதுங்கள்.

அ. நாவலர் எழுதிய நூல்கள் மூன்றின் பெயர் தருக.

..........................................................................................................

..........................................................................................................

ஆ. நாவலருக்குக் கற்பித்த ஆசிரியர்கள் இருவரைக் குறிப்பிடுக.

..........................................................................................................

இ. நாவலர் நிறுவிய முதலாவது பாடசாலை எது? அதன் தற்போதைய பெயர் என்ன?

..........................................................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. நாவலர் பிறந்த திகதியையும் அவர் இறைபதமடைந்த திகதியையும் எழுதுக.

..........................................................................................................

..........................................................................................................

உ. நாவலரின் சமயப் பிரசாரத்தால் ஏற்பட்ட நன்மைகளைத் தருக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

ஊ. நாவலர் பதிப்பித்த நூல்கள் நான்கின் பெயர் தருக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

எ. நாவலரின் சமயப் பணிகள் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

- செயற்பாடு:

1. ஆறுமுகநாவலரின் சமய, சமூக, கல்விப்பணிகள் தொடர்பான தகவல்களை திரட்டி வகுப்பில் காட்சிப்படுத்துக.
2. நாவலரின் நற்பணிகள் குறித்து 5 நிமிட நேர உரையொன்றினை எழுதி வகுப்பில் வாசிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பொருள்

- உலகில் உள்ள எல்லாவற்றையும் பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருள்களுள் அடக்கலாம்.
- இவை மூன்றும் என்றும் உள்ளவை; அநாதியானவை.
- பதி என்பது கடவுளைக் குறிக்கும். கடவுளை ஆண்டவன், இறைவன் எனப் பல பெயர்களால் அழைப்பர்.
- பதி பரிபூரணமானவர். அவர் எங்கும் நிறைந்தவர்; என்றும் உள்ளவர்; எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிபவர்; அளவற்ற அருளாளர். நிகரற்ற கருணையாளர். அவருக்குத் தளைகளே இல்லை. உலகம், உயிர்கள் எல்லாவற்றையும் கடந்து உள் நிற்பதால் பதியைக் கடவுள் என்றும் உலகினை ஆட்சி புரிவதனால் ஆண்டவன் என்றும் அழைப்பர்.
- பதி உயிர்கள் தோறும் ஒன்றாகி, உடனாகி, வேறாகி இருக்கின்றார். எல்லா உயிர்களிலும் அவர் உறைந்துள்ளார். ஆதலால் நாம் எல்லா உயிர்களுக்கும் நல்லனவே செய்தல் வேண்டும்.
- பசு (உயிர்கள்) எண்ணற்றவை. தாம் செய்த செயல்களின் பலனை அனுபவிப்பவை. அவை பாசத்தால் கட்டுண்டவை. உயிர்கள் தமது தன்மையை உணர்வதில்லை. அறிவித்தால் அறியும் தன்மையுடையவை. அவை தமது தன்மையை அறிந்து, பதியை அடைதலே முத்தியாகும்.
- நாம் கடவுளுக்கும் அடியார்களுக்கும் தொண்டு செய்தல் வேண்டும். தொண்டின் மூலம் பிறப்பு, இறப்பைக் கடந்து முத்தியின்பத்தைப் பெறலாம்.
- பாசம் உயிர்களைப் பற்றி நிற்கும். இதனைத் தளை, பந்தித்து நிற்பது என்றும் கூறுவர். பாசம் உயிர்களின் அறிவை மயக்கி, துன்பத்தை இன்பமாகக் காட்டி, அவற்றை அனுபவிக்கச் செய்து, பிறவிகளை வழங்குகிறது. உயிர்கள் கடவுளை அறியாதபடி பாசம் தடை செய்கிறது.
- பதி முற்றறிவுள்ளது. பசு சிற்றறிவுள்ளது. அறிவித்தால் அறியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையுடையது. அறிவித்தாலும் அறியமுடியாத பொருள் பாசம். இது அறிவற்ற பொருள்.

- சைவசமயம் இம்மூன்று பொருள்களையும் என்றும் உள்ள பொருள் எனக் கூறுகிறது.
- ஆணவம், கன்மம், மாயை மூன்றும் மும்மலங்கள் எனப்படும். இவற்றையே பாசத்தளை என்பர்.

---

பாடம்: 16 — வினா - விடை

---

1. சைவசமயம் கூறும் முப்பொருள்களும் எவை?

✧ *பதி, பசு, பாசம் (கடவுள், உயிர், மூவகை மலங்கள்)*

2. இறைவனைக் கடவுள் என்றழைப்பது ஏன்?

✧ *உலகம், உயிர்கள் ஆகியவற்றைக் கடந்து நிற்பதால்.*

3. இறைவன் எப்படி இருக்கின்றான்?

✧ *இறைவன் உயிர்கள் தோறும் ஒன்றாகி, உடனாகி, வேறாகி இருக்கின்றான்.*

4. இறைவனின் சிறப்பியல்புகள் எவை?

✧ *இறைவன் பரிபூரணமானவன். என்றும் உள்ளவன், எங்கும் நிறைந்தவன், எல்லாம் அறிபவன், எல்லாம் வல்லவன், கருணை நிறைந்தவன், பாசங்களினின்றும் (தளைகளினின்றும்) நீங்கியவன்.*

5. உயிர்களின் தன்மை என்ன?

✧ *உயிர்கள் தெய்வத்தன்மை உடையவை. அவை தமது தெய்வத்தன்மையைத் தெரிந்திருப்பதில்லை. அறிவித்தால் அறியும் தன்மையுடையவை. தமது தெய்வத்தன்மையை உணர்ந்து மெய்யறிவு பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு எய்திய மெய்யடியார்கள் பலர் இவ்வுலகில் வாழ்ந்துள்ளார்கள்.*

6. மும்மலங்களும் எவை?

✧ *ஆணவம், கன்மம், மாயை*

7. அறிவித்தாலும் அறியப்படாத பொருள் எது?

✧ *பாசம் (அறிவற்ற பொருள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அறிவித்தால் அறியும் பொருள் எது?

✧ பசு (உயிர் - சிற்றறிவுள்ள பொருள்)

9. அறிவிக்காமல் தானே அறியும் பொருள் எது?

✧ பதி (இறைவன் - முற்றறிவுள்ள பொருள்)

10. கடவுளை ஆண்டவன் என்று அழைப்பது ஏன்?

✧ கடவுளே உலகினை ஆட்சிபுரிவதால் ஆண்டவன் என்று அழைக்கப்படுகிறார்.

11. பாசத்தைக் குறிக்கும் வேறு ஒரு சொல் தருக.

✧ பந்தித்து நிற்பது. பாசம் உயிர்களின் அறிவை மயக்கி, துன்பத்தை இன்பமாகக் காட்டி, அவற்றை அனுபவிக்கச் செய்து பிறவிகளை வழங்குகின்றது. உயிர்கள் கடவுளை அறியாதபடி பாசம் தடை செய்வதால் அதனைத் தளை என்றும் அழைப்பர். (தளை - கட்டு. உயிர்களைப் பற்றி நிற்பது.)

---

பாடம்: 16 பயிற்சி : 28

---

1. கூட்டில் பொருத்தமான எழுத்துக்களை எழுதுக.

அ. பதி, பசு, பாசம் என்பன

ஆ. ஆணவம், கன்மம், மாயை என்பன

இ. இறைவன் என்றும்

ஈ. அவர் எல்லாம்

உ. இறைவன் எல்லாம்

| | | | | |
|---|---|---|---|---|
| மு | __ | பொ | __ | ள் |
| __ | ல | ங் | __ | ள் |
| உ | __ | ள | வ | __ |
| __ | றி | __ | வ | __ |
| வ | __ | ல | __ | __ |

2. சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுக.

அ. பதி என்பது கடவுளைக் குறிக்கும். (..........)

ஆ. ஆணவம் உயிர்களைக் குறிக்கும். (..........)

இ. மலங்கள் மூவகைப்படும். (..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. உலகம், உயிர்கள் ஆகியவற்றை
எல்லாம் கடந்து நிற்பான் கடவுள். (..........)

உ. அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் பசு. (..........)

3. விடை எழுதுங்கள்.

அ. முப்பொருள்கள் எவை?

..........................................................................................................

ஆ. மும்மலங்களும் எவை?

..........................................................................................................

இ. இறைவன் உயிர்கள் தோறும் எப்படி இருக்கின்றான்?

..........................................................................................................

..........................................................................................................

ஈ. அறிவிக்காமல் தானே அறியும் பொருளை எவ்வாறு அழைப்பர்?

..........................................................................................................

உ. உண்மையான கடவுள் வழிபாடு யாது?

..........................................................................................................

..........................................................................................................

ஊ. முற்றறிவுள்ள பொருள், சிற்றறிவுள்ள பொருள், அறிவற்ற பொருள் எனப்படுபவை எவை?

..........................................................................................................

..........................................................................................................

4. பதியின் சிறப்புக்கள் குறித்து எழுதுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சைவமரபு

- ஈழநாடு சைவம் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகும். இதனாலேயே திருமூலர் இதனைச் 'சிவபூமி' என அழைத்தார்.
- பண்டைய ஈழத்தில் ஐந்து ஈஸ்வரங்கள் இருந்ததாக வரலாறு கூறுகிறது.
- ஈழத்தின் வடக்கே நகுலேஸ்வரமும் (கீரிமலைச்சிவன் கோவில்) கிழக்கே திருக்கோணேச்சரமும், மேற்கே முன்னேஸ்வரமும், வடமேற்கே திருக்கேதீஸ்வரமும் அமைந்துள்ளன. இவற்றை விடத் தெற்கே தெய்வந்துறையில் (தேவந்துற) சந்திரசேகர ஈஸ்வரம் என்ற சிவாலயமும் இருந்ததாகத் தெரிகிறது.
- இங்கு குறிப்பிடப்படும் ஐந்து சிவாலயங்களுள் இரு ஆலயங்கள் தேவாரப் பாடல் பெற்ற சிறப்புக்கு உரியனவாகும்.
- திருக்கோணேச்சரத்தைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.
- திருக்கேதீச்சரம் சுந்தரமூர்த்தி நாயனாராலும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாராலும் தேவாரம் பாடப்பெற்ற பெருமைக்குரியது.
- இவற்றைவிட கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம் என்பனவும் நமது நாட்டில் உள்ள சிவாலயங்களில் குறிப்பிடத்தக்கன.
- ஈழத்தில் புகழ்பெற்ற அம்மன் ஆலயங்கள் பல உள்ளன. அடியார்கள் பராசக்தி, பூரணி, நாகேஸ்வரி, முத்துமாரி, நாரணி, சுந்தரி, உமை எனப் பல பெயர்களால் அம்மனை அழைப்பர்.
- நமது நாட்டில் உள்ள அம்மன் ஆலயங்களில் நயினாதீவு ஸ்ரீநாகபூஷணியம்மன் ஆலயம், தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம், மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம், திருகோணமலை பத்திரகாளியம்மன் ஆலயம், வெள்ளவத்தை மயூராபதி பத்திரகாளியம்மன் ஆலயம் என்பன புகழ்பெற்ற அம்மன் ஆலயங்களாக விளங்குகின்றன.
- ஈழத்தின் பல பாகங்களிலும் சிறப்புமிகு விநாயகர் ஆலயங்கள் பல உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயம், கண்டி கட்டுக்கலை செல்வவிநாயகர் கோயில் என்பன புகழ்பெற்ற விநாயகர் ஆலயங்களாகும்.

♦ இலங்கையில் முருகவழிபாடு வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே நிலவிவருகின்றது. கதிர்காமம், மண்டூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, நல்லூர், வெருகல், உகந்தை, திருக்கோவில், போரதீவு, சித்தாண்டி, தாந்தாமலை, பேராதனை (குறிஞ்சிக்குமரன்) ஆதியாம் இடங்களில் புகழ்பெற்ற முருகன் ஆலயங்கள் அமைந்துள்ளன.

♦ ஈழத்தின் சைவமரபு தனித்துவமானது. சிவன், அம்மன், விநாயகர், முருகன் ஆகியோருக்குத் தனித்தனி ஆலயங்கள் அமைந்துள்ளபோதும், அவை அனைத்தையும் சிவ பரம்பொருளின் வடிவாகவே கருதும் சிவநெறி இங்கு ஆழப் பதிந்துள்ளது.

♦ ''யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்'' என்னும் சிவஞான சித்தியாரின் கூற்றினை ஈழத்துச் சைவசமய மரபில் நாம் காணமுடியும்.

---

பாடம்: 17 — வினா - விடை

---

1. திருமூலரால் 'சிவபூமி' எனச் சிறப்பித்துக் கூறப்பட்ட நாடு எது?

✧ இலங்கை

2. இலங்கையில் தேவாரப் பாடல் பெற்ற சிவாலயங்கள் எவை?

✧ *திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம்*

3. நமது நாட்டில் உள்ள தான்தோன்றீஸ்வரர் ஆலயங்கள் எவை?

✧ *கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் என்பனவாகும்.*

4. இலங்கையில் உள்ள புகழ் பெற்ற அம்மன் ஆலயங்கள் நான்கின் பெயர் தருக.

✧ 1. *நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயம்*

2. *தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. *மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்*

4. *திருகோணமலை பத்திரகாளியம்மன் ஆலயம்*

**5. இலங்கையில் வரலாற்றுப் புகழ்பெற்ற சிவாலயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

✧ *1. திருக்கோணேச்சரம் 2. திருக்கேதீஸ்வரம் 3. கீரிமலை நகுலேஸ்வரம் 4. சிலாபம் முன்னேஸ்வரம்*

**6. சக்தியை அடியார்கள் எப்பெயர்களால் அழைப்பர்?**

✧ *பராசக்தி, பூரணி, புராதனி, புராந்தரி, நாரணி, நாராயணி, பார்வதி*

**7. இலங்கையில் உள்ள புகழ்பெற்ற விநாயகர் ஆலயங்கள் ஐந்தின் பெயர் தருக.**

✧ 1. *மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்*

2. *சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயம்*

3. *கண்டி, கட்டுக்கலை செல்வ விநாயகர் கோயில்*

4. *மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்*

5. *நீர்வேலி அரச கேசரிப்பிள்ளையார் கோயில்*

**8. நமது நாட்டில் உள்ள, வரலாற்றுப் பெருமைமிக்க முருகன் ஆலயங்கள் சிலவற்றின் பெயர் தருக.**

✧ 1. *மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்*

2. *நல்லூர்க் கந்தசுவாமி கோயில்*

3. *கதிர்காமம் கந்தன் ஆலயம்*

4. *வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயில்*

5. *உகந்தை முருகன் கோயில்*

6. *திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி கோவில்*

**9. பேராதனையில் அமைந்துள்ள முருகன் கோயிலை எப்படி அழைப்பர்?**

✧ *குறிஞ்சிக்குமரன் கோயில் என்று அழைப்பர்*

**10. நமது நாட்டுச் சைவமரபில் காணப்படும் தனித்துவம் யாது?**

✧ *நமது நாட்டில் சிவன், அம்மன், விநாயகர், முருகன் ஆலயங்கள் பல தனித்தனி அமைக்கப்பட்டுள்ள போதிலும் அவை அனைத்தையும் சிவ பரம்பொருளாகவே பார்க்கும் சிவநெறி ஆழமாக வேரூன்றியுள்ளது. இதுவே ஈழத்துச் சைவமரபின் தனித்துவமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| செல்வச்சந்நிதி | கதிர்காமம் |
| நகுலேஸ்வரம் | நயினாதீவு |
| திருக்கோணேச்சரம் | மன்னார் |
| முன்னேஸ்வரம் | தொண்டமானாறு |
| குறிஞ்சிக்குமரன் ஆலயம் | திருகோணமலை |
| திருக்கேதீஸ்வரம் | திருமூலர் |
| கட்டுக்கலை செல்வவிநாயகர் ஆலயம் | கீரிமலை |
| ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயம் | கண்டி |
| 'சிவபூமி' | பேராதனை |
| திருப்புகழ் பாடல் பெற்ற தலம் | சிலாபம் |

2. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. இலங்கையில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் ஒன்று,

1. முன்னேஸ்வரம் 2. திருக்கேதீஸ்வரம்
3. நகுலேஸ்வரம்

ஆ. சரித்திரப் புகழ்பெற்ற முருகன் ஆலயம்,

1. செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்
2. குறிஞ்சிக்குமரன் கோயில்
3. நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

இ. அம்பிகையைக் குறிக்கும் பெயர் அல்லாதது,

1. பூரணி 2. துரந்தரி 3. வந்திரி

ஈ. மாதாரு பாகனார் எனப்படுபவர்,

1. முருகன் 2. வைரவர் 3. சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. சிவஞானசித்தியார் நூல் செய்தவர்,

1. அருணந்திசிவாச்சாரியார் 2. திருமூலர்
3. திருஞானசம்பந்தர்

ஊ. இலங்கையில் தான்தோன்றீஸ்வரம் உள்ள இடம் அல்லாதது,

1. கொக்கட்டிச்சோலை 2. மண்டூர்
3. ஒட்டிசுட்டான்

3. பின்வருவன சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுங்கள்.

அ. ஈழத்தில் சிவநெறி ஆழ வேரூன்றி உள்ளது. (..........)

ஆ. சிவபரம்பொருளையே பல பெயர்களால் பல வடிவங்களில் வணங்குகிறோம். (..........)

இ. முருக வழிபாடு இலங்கையில் கைவிடப்பட்டுவிட்டது.(..........)

ஈ. பண்டைக்காலத்தில் இலங்கையில் ஐந்து ஈஸ்வரங்கள் இருந்தன. (..........)

உ. சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கோணேச்சரப் பதிகம் பாடியுள்ளார். (..........)

4. விடை எழுதுங்கள்.

அ. இலங்கையில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் எவை?

..........................................................................................

ஆ. 'சிவபூமி' என்று இலங்கையைச் சிறப்பித்துக் கூறியவர் யார்? அவர் இயற்றிய நூலின் பெயர் என்ன?

..........................................................................................

இ. கிழக்கு இலங்கையில் முருக வழிபாட்டுக்குரிய புகழ்பெற்ற ஆலயங்கள் எவை?

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. இலங்கையில் திருப்புகழ் பாடல்பெற்ற தலம் எது?

..........................................................................................

உ. தான்தோன்றீஸ்வரம் என்றால் என்ன?

..........................................................................................

..........................................................................................

ஊ. உங்களுக்குத் தெரிந்த தான்தோன்றீஸ்வரங்கள் இரண்டின் பெயர் தருக.

..........................................................................................

..........................................................................................

எ. நமது நாட்டில் உள்ள புகழ்பெற்ற விநாயகர் ஆலயங்கள் மூன்றின் பெயரை எழுதுங்கள்.

..........................................................................................

..........................................................................................

ஏ. இலங்கையில் உள்ள புகழ்பெற்ற அம்மன் ஆலயங்கள் நான்கின் பெயர் தருக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஐ. நீங்கள் விரும்பும் முருகன் ஆலயம் ஒன்றைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ. சக்தியைக் குறிக்கும் ஐந்து பெயர்கள் எழுதுங்கள்.

.................................................................................................

.................................................................................................



ஔ. படத்தில் காணப்படும் முருகன் ஆலயம் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

- செயற்பாடு:

1. இலங்கையில் உள்ள புகழ்பெற்ற சிவாலயங்கள், அம்மன் ஆலயங்கள், விநாயகர் ஆலயங்கள், முருகன் ஆலயங்கள் என்பனவற்றைப் பற்றிய தகவல்கள், படங்களைச் சேகரித்து, பட்டியற்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் ஆலயங்கள்

♦ இலங்கையில் விநாயகர் வழிபாடு பண்டுதொட்டு நிலவி வருகின்றது.

♦ வன்னிப்பகுதிகளிலும், அநுராதபுரம், பொலனறுவை, தெய்வந்துறை ஆதியாம் இடங்களிலும் காணப்படும் புராதன விநாயகர் ஆலயங்களின் அழிபாடுகள் இதற்குச் சான்றாகவுள்ளன.

♦ இன்றும் பல விநாயகர் ஆலயங்கள் ஈழத்தில் சிறப்புடனும் பொலிவுடனும் விளங்குகின்றன.

♦ இலங்கையின் வடபகுதியில் உள்ள விநாயகர் ஆலயங்கள் பல யாழ்ப்பாண அரசர்களால் அமைக்கப்பட்டனவாகும்.

♦ நல்லூரில் உள்ள வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம் பரராச சேகர மன்னனால் கட்டப்பட்டதாகும். உரும்பிராயில் உள்ள கருணாகரப் பிள்ளையார் ஆலயம் கருணாகரத் தொண்டமானாலும், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம் அரசகேசரியினாலும் கட்டப்பட்டனவாகும்.

♦ இணுவில் பரராசசேகரப் பிள்ளையார், செகராசசேகரப்பிள்ளையார் ஆலயங்களும் சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் என்பனவும் வடபகுதியில் உள்ள விநாயகர் ஆலயங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

♦ மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் கிழக்கிலங்கையின் புகழ்பெற்ற விநாயகர் ஆலயமாகும். ஆண்டுதோறும் ஆடி அமாவாசைத் தினத்தன்று இங்கு பெருந்திரளானோர் பிதிர்க்கடன் செலுத்துவர். வடக்கே கீரிமலை போன்று கிழக்கே இத்தலம் புண்ணிய தலமாகக் கருதப்படுகிறது.

♦ மாருதப்புரவீக வல்லியின் மகனான பாலசிங்க மன்னன் மேற்கொண்ட சிந்து (கடல்) யாத்திரையின் போது கிடைத்த சிந்தாத்திரைப் பிள்ளையார் ஆலயம் வீரமுனையில் உள்ளது.

♦ களுதேவாலயக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் களுதாவளைப் பிள்ளையார் ஆலயம், செங்கலடிப் பிரதேசத்தில் உள்ள காளிகாமடு கற்பக விநாயகர் ஆலயம், கல்லடி பிள்ளையார் ஆலயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரையம்பதி திருநீலகண்டப் பிள்ளையார் கோயில், சங்கமன்கண்டிப் பிள்ளையார் ஆலயம், மட்டக்களப்பு புளியந்தீவு ஆனைப்பந்தி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம் என்பனவும் திருகோணமலை இரட்ணசிங்கப் பிள்ளையார் ஆலயம், ஆலையடிப்பிள்ளையார் ஆலயம், அன்புவெளிபுரம் தில்லை அம்பலப் பிள்ளையார் ஆலயம் என்பனவும் கிழக்குப் பகுதியில் உள்ள விநாயகர் ஆலயங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

- மலையகப் பகுதியில் உள்ள விநாயகர் ஆலயங்களில் கண்டி கட்டுக்கலை செல்வவிநாயகர் ஆலயம், ஹற்றன் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றைவிடக் கதிர்காமத்திலும் செல்லக் கதிர்காமத்திலும் உள்ள மாணிக்கப் பிள்ளையார் ஆலயங்கள் என்பனவும் குறிப்பிடத்தக்க விநாயகர் ஆலயங்களாகும்.

---

பாடம்: **18** வினா - விடை

---

**1. ஆனைமுகத்தான் எனப்படுபவர் யார்?**

✧ *விநாயகர்*

**2. இலங்கையில் புராதனகாலம் முதல் விநாயகர் வழிபாடு இருந்து வந்துள்ளமைக்குரிய சான்றுகள் எவை?**

✧ *வன்னிப்பகுதிகளிலும், அநுராதபுரம், பொலனறுவை, தெய்வந்துறை ஆதியாம் இடங்களிலும் காணப்படும் புராதன விநாயகர் ஆலயங்களின் அழிபாடுகள் இதற்குச் சான்றாகவுள்ளன.*

**3. வடபகுதியில் உள்ள புகழ்பெற்ற விநாயகர் ஆலயங்கள் எவை?**

✧ 1. *நல்லூரில் உள்ள வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம்.*
2. *உரும்பிராயில் உள்ள கருணாகரப் பிள்ளையார் ஆலயம்.*
3. *நீர்வேலியில் உள்ள அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம்.*
4. *இணுவிலில் உள்ள பரராசசேகரப் பிள்ளையார், செகராசசேகரப் பிள்ளையார் ஆலயங்கள்.*
5. *சுழிபுரத்தில் உள்ள பறாளை விநாயகர் ஆலயம்.*
6. *முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம்.*
7. *மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள புகழ்பெற்ற பிள்ளையார் கோயில்கள் எவை?**

✧ *மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயம், வீரமுனை சிந்தாத்திரைப் பிள்ளையார் ஆலயம், களுதாவளைப் பிள்ளையார் ஆலயம், காளிகாமடு கற்பக விநாயகர் ஆலயம், கல்லடி பிள்ளையார் ஆலயம், ஆரையம்பதி திருநீலகண்டப் பிள்ளையார் ஆலயம், சங்கமன் கண்டிப் பிள்ளையார் ஆலயம், மட்டக்களப்பு புளியந்தீவு ஆனைப்பந்தி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம் என்பனவாகும். இவற்றை விடத் திருகோணமலை இரட்ணசிங்கப் பிள்ளையார் ஆலயம், ஆலையடிப் பிள்ளையார் ஆலயம், அன்புவெளிபுரம் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம் ஆகியனவும் குறிப்பிடத்தக்க விநாயகர் ஆலயங்களாகும்.*

**5. கீரிமலையில் நிகழ்வதைப் போன்று கிழக்கு இலங்கையில் ஆடி அமாவாசைத் தினத்தன்று பக்தர்கள் பிதிர்க்கடன் செய்யும் ஆலயம் எது?**

✧ *மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயமாகும்.*

**6. வடபகுதியில் தமிழரசர்கள் அமைப்பித்த விநாயகர் ஆலயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

✧ ௧. *நல்லூர் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம்.*

௨. *நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம்.*

௩. *உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம்.*

௪. *இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம்*

**7. வடபகுதியில் மிகச் சிறிய ஆலயத்துள் அமர்ந்திருந்து அருள்பொழியும் விநாயகரின் பெயர் என்ன?**

✧ *முறிகண்டிப் பிள்ளையார்.*

**8. கல்வெட்டுக் குறிப்புக் கொண்ட பிள்ளையார் ஆலயம் ஒன்றைக் குறிப்பிடுக.**

✧ *களுதாவளையில் உள்ள களுதாவளைப் பிள்ளையார் ஆலயம். (களுதாவளைக் கல்வெட்டில் இவ்வாலயம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது)*

**9. மலைநாட்டில் உள்ள புகழ்பெற்ற இரு விநாயகர் ஆலயங்களின் பெயரை எழுதுக.**

✧ ௧. *கட்டுக்கலை செல்வவிநாயகர் ஆலயம்.*

௨. *ஹற்றன் மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கதிர்காமத்தில் உள்ள பிள்ளையார் ஆலயங்கள் எவை?

✧ 1. *கதிர்காமம் பிள்ளையார் ஆலயம்*

2. *செல்லக்கதிர்காமம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்*

11. இலங்கையில் பள்ளுப்பாடல் பெற்ற விநாயகர் ஆலயம் எது?

✧ *சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயம். (நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் பறாளை விநாயகர் பள்ளு என்னும் நூலை எழுதியுள்ளார்.)*

---

பாடம்: 18 பயிற்சி : 30

---

1. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம் | அரசகேசரி |
| நல்லூர் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம் | வீரமுனை சிந்தாத்திரைப் பிள்ளையார் ஆலயம் |
| பறாளை விநாயகர் பள்ளு | மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் |
| பாலசிங்க மன்னன் | பரராசசேகரன் |
| நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம் | கருணாகரத் தொண்டமான் |
| செல்லக்கதிர்காமம் | சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயம் |

2. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. அரசகேசரியினால் அமைக்கப்பெற்ற ஆலயம்,

1. இணுவில் பரராச சேகரப்பிள்ளையார் ஆலயம்
2. நல்லூர் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம்
3. நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம்
4. மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. வடக்கே கீரிமலை போன்று கிழக்கே ஆடி அமாவாசைத் தினத்தன்று பிதிர்க்கடன் செய்யப்படும் புண்ணிய தலம்,

1. களுதாவளைப் பிள்ளையார் கோவில்
2. வீரமுனை சிந்தாத்திரைப் பிள்ளையார் ஆலயம்
3. காளிகாமடு கற்பகவிநாயகர் ஆலயம்
4. அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்

இ. மாருதப்புரவீகவல்லியின் மகன்,

1. செகராசசேகரன்
2. பரராசசேகரன்
3. பாலசிங்கன்
4. அரசகேசரி

ஈ. செல்லக்கதிர்காமத்தில் உள்ள விநாயகர் ஆலயம்,

1. மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்
2. கதிர்காமக்கந்தன் ஆலயம்
3. கட்டுக்கலை செல்வவிநாயகர் ஆலயம்
4. தேவந்துறை சந்திரசேகரர் ஆலயம்

உ. 'திருவாக்கும்...' என்னும் வெண்பாவை இயற்றியவர்,

1. சின்னத்தம்பிப்புலவர்
2. அரசகேசரி
3. ஔவையார்
4. கபிலதேவநாயனார்

3. விடை எழுதுங்கள்.

அ. விநாயகரை வழிபடுதலால் பெறும் நன்மைகள் எவை?

..............................................................................................

..............................................................................................

ஆ. ஆனமுகத்தானைத் தேவர்களும் தொழுவது ஏன்?

..............................................................................................

..............................................................................................

இ. வடபகுதியில் புகழ்பெற்று விளங்கும் விநாயகர் ஆலயங்கள் ஐந்தின் பெயர் தருக.

..............................................................................................

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. கிழக்கு இலங்கையில் புகழ்பெற்று விளங்கும் பிள்ளையார் கோயில்கள் மூன்றின் பெயர் தருக.

.......................................................................................

.......................................................................................

உ. இலங்கையின் மத்திய மலைநாட்டில் உள்ள விநாயகர் ஆலயம் இரண்டின் பெயர் எழுதுக.

.......................................................................................

.......................................................................................

ஊ. இலங்கையில் தொன்று தொட்டு விநாயகர் வழிபாடு இருந்து வந்துள்ளது என்பதற்குரிய சான்றுகள் எவை?

.......................................................................................

.......................................................................................

4. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ. விநாயகர் வழிபாடு புராதன காலத்தில் இலங்கையில் நிலை ..........................................

ஆ. வடபகுதியில் தமிழரசர்கள் விநாயகர் .............................. பலவற்றைக் கட்டுவித்தனர்.

இ. இலங்கையின் பல பாகங்களிலும் .................................. ஆலயங்கள் உள்ளன.

ஈ. விநாயகரை வழிபடுதலால் காரிய சித்தியும் பெருமையும் வாக்குவன்மையும் ...................................................

உ. ............................................ முகத்தானைத் தேவர்களும் கை கூப்பித் தொழுகின்றனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| உண்டாகும் | பெற்றிருந்தது | ஆனை | விநாயகர் | ஆலயங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உங்கள் ஊரில் உள்ள விநாயகர் ஆலயங்களின் பெயர்களை எழுதுக.

.....................................................................................................


.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

- செயற்பாடு:

1. இலங்கையில் உள்ள புகழ்பெற்ற விநாயகர் ஆலயங்களின் பெயர்களையும் அவை அமைந்துள்ள இடங்களின் பெயர்களையும் பட்டியற்படுத்தி வகுப்பில் காட்சிப்படுத்துக.
2. 'திருவாக்கும்...' என்னும் பாடலின் பொழிப்புரையை எழுதி வகுப்பில் வாசித்துக் காட்டுக.




நல்லூர் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேச்சரம்



- இலங்கையில் உள்ள சிவத்தலங்களுள் தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணேச்சரமும் ஒன்றாகும்.
- திருகோணமலையில் 'சுவாமிமலை' எனப்படும் மலைப்பகுதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது.
- இலங்கையில் மிகத் தொன்மை வாய்ந்த சிவத்தலமாக இது கருதப்படுகிறது.
- மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் முறையாக அமைந்த தலம் இதுவாகும்.
- இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானின் பெயர் கோணேச்சரர். இறைவி மாதுமையாள். இத்தலத்தின் தீர்த்தம் பாவநாசம் என்பதாகும். கல்லால் தலவிருட்சமாக உள்ளது.
- திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் கோணேச்சரர் மீது தேவாரப்பதிகம் பாடியுள்ளார். திருக்கோணேச்சரப் பதிகம் என இது அழைக்கப்படுகிறது.
- அருணகிரிநாதரும் இத்தலத்தின் மீது திருப்புகழ் பாடியுள்ளார்.
- புராண, இதிகாசக் கதைகள் மூலம் இவ்வாலயத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளலாம்.
- இலங்கை மன்னனான இராவணன் கோணேச்சரரைத் தினந்தோறும் வழிபட்டு வந்தான் எனக் கர்ண பரம்பரைக்கதைகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவ்வாலயம் மனுச்சோழ மன்னனால் கட்டுவிக்கப்பட்டதென்றும் அவன் மகன் குளக்கோட்ட மன்னன் இங்கு பல திருப்பணி வேலைகளைச் செய்தானென்றும் வரலாறு கூறுகிறது. குளக்கோட்ட மன்னன் பெருந்தொகையான காணிகளை இவ்வாலயத்துக்கு வழங்கியுள்ளதோடு பல ஊழியர்களையும் ஆலயப் பணிகளுக்காக நியமித்தான் என்று இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது.

- புகழ்பெற்று விளங்கிய இச் சிவாலயம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய அந்நியர்களின் ஆட்சிக்காலங்களில் இடித்தழிக்கப்பட்டது. அடியார்கள் விக்கிரகங்களை நிலத்தின் கீழ் புதைத்து வைத்து மனதால் துதித்து வந்தனர். 1950 ஆம் ஆண்டிலே பல விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டன. அடியார்களின் பெருமுயற்சியால் மீண்டும் சிவாலயம் இங்கு உருப்பெற்றது. 1963ஆம் ஆண்டில் மீண்டும் விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து ஆகம விதிப்படி பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

- ஆண்டுதோறும் பங்குனி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மகோற்சவம் 18 நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும். இவ்வாலயத்தில் நிகழும் மகாசிவராத்திரி மிக்க சிறப்புக்குரியது.

---

பாடம்: **19** வினா - விடை

---

**1. திருக்கோணேச்சரம் எங்கு உள்ளது?**

✧ *இலங்கையில் திருகோணமலையில், 'சுவாமிமலை' எனப்படும் உயர்ந்த மலைப்பகுதியில் அமைந்துள்ளது.*

**2. இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவன், இறைவி, தீர்த்தம், தலவிருட்சம் ஆகியவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.**

✧ *இறைவன் : கோணேச்சரர்* *இறைவி : மாதுமையாள்*
*தீர்த்தம் : பாவநாசம்* *தலவிருட்சம் : கல்லால்*

**3. இவ்வாலயத்தின் தொன்மைச்சிறப்புக்கு ஆதாரமாகக் கூறப்படும் கதைகளில் ஒன்றினைக் குறிப்பிடுக.**

✧ *சிறந்த சிவபக்தனும் இலங்கை மன்னனுமான இராவணன் தினந் தோறும் கோணேச்சரரை வழிபட்டு வந்ததாகக் கூறப்படும் கதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. திருக்கோணேச்சரத்தில் திருப்பணி செய்த மன்னர் இருவர் பெயர் தருக.

✧ 1. *மனுச்சோழன் 2. குளக்கோட்டன்*

5. இவ்வாலயத்தின் மீது தேவாரப் பதிகம் பாடிய நாயனார் யார்?

✧ *திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்*

6. இவ்வாலயத்தின் மீது திருப்புகழ் பாடியவரின் பெயர் என்ன?

✧ *அருணகிரிநாதர்*

7. திருக்கோணேச்சரத்துக்கு அழிவு செய்த அந்நிய ஆட்சியினர் யாவர்?

✧ *போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சியினர்*

8. இவ்வேளையில் அடியார்கள் விக்கிரகங்களை எவ்வாறு பேணினர்?

✧ *நிலத்தின் கீழ்ப்புதைத்து வைத்துப் பாதுகாத்தனர்.*

9. நிலத்தின் கீழ் மறைத்து வைக்கப்பட்ட விக்கிரகங்கள் எப்போது கண்டெடுக்கப்பட்டன?

✧ *1950 ஆம் ஆண்டிலே கண்டெடுக்கப்பட்டன*

10. புதுக்கோயில் மகா கும்பாபிஷேகம் எப்போது நடைபெற்றது?

✧ *1963 ஆம் ஆண்டில் நடைபெற்றது*

11. இவ்வாலயத்தின் பூசைகள், உற்சவங்கள் எம்முறையைப் பின்பற்றி நடைபெறுகின்றன?

✧ *சைவ ஆகம விதிகளுக்கு அமைய நடைபெறுகின்றன.*

12. கோணேசர் ஆலய மகோற்சவ காலம் எது?

✧ *வருடந்தோறும் பங்குனி உத்தரத்தன்று கொடியேற்றத்துடன் தொடங்கி 18 நாட்களுக்கு நடைபெறும்.*

13. திருக்கோணேச்சரத்தின் பெருமையினை அறிய உதவும் நூல்கள் சிலவற்றின் பெயர் தருக.

✧ 1. *கோணேசர் கல்வெட்டு*
2. *தக்கிண கைலாசபுராணம்*
3. *திருக்கோணாசலபுராணம்*
4. *திருக்கோணேச்சரப் பதிகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. திருக்கோணேச்சரத்தின் பெருமையினை எடுத்துரைக்கும் நூல்,

1. கோணேசர் கல்வெட்டு
2. பெரியபுராணம்
3. கைலாயமாலை
4. யாழ்ப்பாண வைபவமாலை

ஆ. திருக்கோணேச்சரம் மீது தேவாரம் பாடிய நாயனார்,

1. அப்பர்
2. சுந்தரர்
3. திருஞானசம்பந்தர்
4. மாணிக்கவாசகர்

இ. இராவணன் வழிபட்ட சிவத்தலம்,

1. திருக்கேதீச்சரம்
2. திருக்கோணேச்சரம்
3. முன்னேஸ்வரம்
4. கதிர்காமம்

ஈ. கோயிலும் சுனையுங் கடலுடன் சூழ்ந்த மாமலை,

1. சிவனொளிபாதம்
2. கீரிமலை
3. கோணமாமலை
4. மாதோட்டம்

உ. கோணேச்சரர் ஆலயத்தில் திருப்பணிகள் பல செய்த மன்னன்,

1. இராவணன்
2. குளக்கோட்டன்
3. பரராசசேகரன்
4. செகராசசேகரன்

2. சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.

அ. இலங்கை மன்னன் இராவணன் சிறந்த சிவபக்தன். (..........)

ஆ. இராவணன் கோணேச்சரர் மீது மிகுந்த பக்தி கொண்டவன். (..........)

இ. கோணேச்சரத்தில் சைவ ஆகம விதிப்படி பூசைகள் நடைபெறுவதில்லை. (..........)

ஈ. திருக்கோணேச்சரப் பதிகத்தைச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியுள்ளார். (..........)

உ. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இவ்வாலயம் இடித்தழிக்கப்பட்டது. (..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| டச்சுக்காரர் | குளக்கோட்டன் |
| மனுச்சோழமன்னனின் மகன் | சுவாமிமலை |
| திருக்கோணேச்சரம் | ஒல்லாந்தர் |
| கோணேச்சரர் வீற்றிருக்கும் மலை | மாதுமையாள் |
| கோணேச்சரர் | திருக்கோணேச்சரத் தீர்த்தம் |
| பாவநாசம் | இராவணன் வழிபட்ட தலம் |

4. விடை எழுதுங்கள்.

அ. திருக்கோணேச்சர ஆலயம் அமைந்துள்ள இடம் எது?

..............................................................................................

ஆ. திருக்கோணேச்சர ஆலயத்தின் மீது தேவாரம் பாடிய நாயனார் யார்?

..............................................................................................

இ. திருக்கோணேச்சர ஆலயத்தின் தலவிருட்சம் யாது?

..............................................................................................

ஈ. திருக்கோணேச்சரத்தில் எழுந்தருளியுள்ள பெருமானதும், இறைவியினதும் பெயர்களை எழுதுக.

..............................................................................................

..............................................................................................

உ. திருக்கோணேச்சர ஆலய மகோற்சவம் நடைபெறும் காலம் எது?

..............................................................................................

..............................................................................................

ஊ. இவ்வாலயத்தின் திருப்பணிக்கு உதவிய மன்னர்களின் பெயர்களைத் தருக.

..............................................................................................

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. திருக்கோணேச்சரத்தின் பெருமை கூறும் நூல்கள் மூன்றின் பெயர் தருக.

..................................................................................................

..................................................................................................

ஏ. திருக்கோணேச்சரத்தின் மீது திருப்புகழ் பாடியவர் யார்?

..................................................................................................

ஐ. இவ்வாலயத்திற்குத் தீங்கு விளைவித்த அந்நியர்கள் யாவர்?

..................................................................................................

ஒ. அவர்களிடமிருந்து விக்கிரகங்களை அடியார்கள் எவ்வாறு பாதுகாத்தனர்?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

ஓ. புதுக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் எப்போது நடைபெற்றது?

..................................................................................................


..................................................................................................

- செயற்பாடு:
  1. திருக்கோணேச்சரம் தொடர்பான தகவல்கள், பாடல்கள், படங்களைச் சேகரித்துச் சிறு நூலாக அமைத்து வகுப்பில் காட்சிப்படுத்துக.
  2. கோணேச்சரப் பதிகத்தில் உள்ள 'தாயினும் நல்ல தலைவர்...' எனும் தேவாரத்தின் பொழிப்புரையை அறிந்து வகுப்பில் கூறுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமம்



- இலங்கையில் முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள தலங்களுள் மிகவும் புராதனமான தலம் கதிர்காமம் ஆகும். இது முருக பக்தர்களின் பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலமாகவும் திகழ்கிறது.
- கதிர்காமம் இலங்கையின் தென் கிழக்கில் உள்ளது. இதன் அருகில் மாணிக்க கங்கை ஓடுகிறது. இந்நதியே இத்தலத்தின் தீர்த்தமாகும்.
- கதிர் - ஒளி, காமம் - அன்பு. கதிர்காமம் என்றால் முருகனின் தெய்வீக ஒளியும் அன்பும் நிறைந்த தலம் எனப் பொருள்படும். கதிர்காமம் என்பதற்குத் தினை என்னும் தானியம் நிறைந்த கிராமம் என்றும் பொருள் கூறுவர். தினைப்புனத்து வள்ளியை முருகன் இங்கு திருமணம் செய்து கொண்டான் என்பதற்கு இதுவும் ஆதாரமாகிறது.
- கதிர்காமத்தில் பூசை செய்யும் பூசகர் 'கப்புறாளை' என்று அழைக்கப்படுகிறார். இங்கு வாயைத் துணியினால் கட்டி, மௌன பூசை செய்வர். இப்பூசை ஆகம முறை சாராத வழிபாடாகும்.
- கதிர்காமத்தின் பெரிய கோயில் முருகனுக்கு உரியது. தெற்கு நோக்கி அமைந்துள்ள மூலஸ்தான வாசல் எப்பொழுதும் திரைச்சீலையினால் மறைக்கப்பட்டிருக்கும்.
- கதிர்காம ஆலயத்தின் வலப்பக்கத்தில் மாணிக்கப்பிள்ளையார் ஆலயமும், இடப்பக்கத்தில் வீதிக்கு வெளியே தெய்வயானை அம்மன் ஆலயமும் உள்ளன.
- வள்ளியம்மன் ஆலயம் முருகன் ஆலயத்துக்கு எதிரே இருக்கிறது.
- ஆண்டுதோறும் ஆடிமாதத்தில் கதிர்காமக் கந்தனின் திருவிழாக்கள் நிகழும். திருவிழா நாட்களில் மூலஸ்தானத்தில் இருக்கும் இயந்திரத்தகடு வைக்கப்பட்ட பெட்டியை, அலங்கரிக்கப் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை மீது எழுந்தருளச் செய்து வீதிவலமாகக் கொண்டு வருவர்.

- சித்திரை வருடப்பிறப்பு, திருக்கார்த்திகை நாட்களிலும் இங்கு சிறப்பான திருவிழாக்கள் நடைபெறும்.
- தேனும் தினைமாவும் கொண்டு மாவிளக்கேற்றுதல், காவடி எடுத்தல், கர்ப்பூரத் தீபச்சட்டி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்களைப் பக்தர்கள் இங்கு நிறைவேற்றுவர்.
- கதிர்காமம் செல்வோர் செல்லக்கதிர்காமம் சென்று அங்குள்ள மாணிக்கப்பிள்ளையாரை வழிபடத் தவறுவதில்லை. அவரை வழிபட்ட பின்னர் கதிரைமலை உச்சியில் எழுந்தருளியிருக்கும் கதிரைமலைக்கந்தனை வழிபட்டுத் தம் யாத்திரையினை நிறைவு செய்வர்.
- ஆடிமாத உற்சவத்திற் கலந்து கொள்ளும் பொருட்டு அடியார்கள் செல்வச்சந்நிதியிலிருந்து புறப்பட்டுப் பாதயாத்திரையாகக் கிழக்கிலங்கை வழியாகக் கதிர்காமம் சென்றடைவது வழக்கம்.
- முருகதலங்கள் மீது திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் கதிர்காமத் தலத்தின் மீதும் திருப்புகழ் பாடியுள்ளார்.
- 'இறவாமல் பிறவாமல்...' என்ற தொடக்கத்தையுடைய இத்திருப்புகழ் கதிர்காமக் கந்தனைப் போற்றும் வகையில் அமைந்துள்ளது.

---

## பாடம்: 20 வினா - விடை

---

**1. இலங்கையில் உள்ள மிகப் புராதன முருக தலம் எது?**

✧ *கதிர்காமம்*

**2. கதிர்காமம் என்பதன் பொருள் யாது?**

✧ *தெய்வீக ஒளியும் முருகனின் அன்பும் நிறைந்த தலம் என்பது இதன் பொருளாகும். தினை என்னும் தானியம் நிறைந்த கிராமம் என்றும் இதற்குப் பொருள் கொள்ளப்படும்.*

**3. கதிர்காமத்தில் நடைபெறும் பூசைமுறை பற்றிக் கூறுக.**

✧ *இங்கு நடைபெறும் பூசை முறையானது ஆகம விதிகளுக்குப் புறம்பானது. வாயைத் துணியினால் கட்டிக் கொண்டு மௌன பூசையினை கப்புறாளைமார் இங்கு நடத்துகின்றனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கதிர்காம ஆலயத்தின் திர்த்தம் எது?

✧ *மாணிக்ககங்கை*

5. கதிர்காமத்தில் உள்ள வேறு ஆலயங்கள் எவை?

✧ *வள்ளியம்மன் ஆலயம், தெய்வயானை அம்மன் ஆலயம், பிள்ளையார் ஆலயம்*

6. கதிர்காம ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நடைபெறும் மாதம் எது?

✧ *ஆடி மாதம்*

7. திருவிழா நாட்களில் இடம்பெறும் முக்கிய நிகழ்வு யாது?

✧ *மூலஸ்தானத்தில் இருக்கும் இயந்திரத்தகடு வைக்கப்பட்ட பெட்டியை அலங்கரிக்கப்பட்ட யானை மீது எழுந்தருளச் செய்து வீதிவலமாகக் கொண்டு வருவர். இந்நிகழ்வு திருவிழா நாட்களில் வெகு சிறப்பாக நடைபெறும்.*

8. கதிர்காமத்தில் நிகழும் விசேட விழாக்கள் எவை?

✧ *சித்திரைப்புத்தாண்டுப் பிறப்பு, திருக்கார்த்திகைத் திருநாள் ஆகியனவாகும்.*

9. கதிர்காமத்தில் பக்தர்கள் எவ்வாறு தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்கின்றனர்?

✧ *தேனும் தினைமாவும் கொண்டு மாவிளக்கேற்றுதல், காவடி எடுத்தல், கர்ப்பூரத் தீபச்சட்டி எடுத்தல் போன்றவற்றின் மூலம் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுகின்றனர்.*

10. கதிர்காம யாத்திரை செல்வோர் பின்பற்றும் நடைமுறை யாது?

✧ *கதிர்காம யாத்திரை செல்வோர் கதிர்காமத்தின் புனித தீர்த்தமான மாணிக்ககங்கையில் நீராடிய பின்னர் கதிர்காமக் கந்தனை வழிபடுவர். உற்சவ நிகழ்வுகளில் பங்கு கொள்வர். பின்னர் செல்லக் கதிர்காமம் சென்று மாணிக்கப்பிள்ளையாரை வழிபட்ட பின் கதிரைமலை உச்சியில் எழுந்தருளியுள்ள கதிரைமலைக் கந்தனைத் தரிசித்துத் தம் யாத்திரையை நிறைவு செய்வர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| மாணிக்ககங்கை | மாணிக்கப்பிள்ளையார் |
| பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலம் | அருணகிரிநாதர் |
| கப்புறாளை | கதிர்காம ஆலயத்தின் தீர்த்தம் |
| செல்லக்கதிர்காமம் | கதிர்காமக் கந்தனின் பூசகர் |
| திருப்புகழ் | கதிர்காமம் |

2. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

அ. இலங்கையில் உள்ள மிகப் புராதனமான முருக தலம்,

1. மண்டூர் முருகன் ஆலயம்
2. கதிர்காமம்
3. பம்பலப்பிட்டி கதிரேசன் கோயில்
4. பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலயம்

ஆ. கதிர்காமத்தில் இடம்பெறும் பூசைமுறை,

1. ஆகமமுறை சார்ந்தது
2. குமாராலய விதிமுறை சார்ந்தது
3. ஆகமமுறைக்குப் புறம்பானது
4. வேறுபாடானது

இ. 'கப்புறாளை' வாயைத் துணியினால் கட்டிக்கொண்டு செய்யும் பூசை

1. மௌனபூசை 2. கூட்டுப் பிரார்த்தனை
3. பரார்த்தபூசை 4. எதுவுமில்லை

ஈ. கதிர்காமத்தின் அருகில் ஓடும் நதி,

1. வளவகங்கை 2. மாணிக்ககங்கை
3. களுகங்கை 4. களனிகங்கை

உ. கதிர்காமத் தலத்தின் மீது திருப்புகழ் பாடியவர்,

1. அருணாசலத்தேசிகர் 2. அருணகிரிநாதர்
3. அருணாசலக்கவிராயர் 4. அப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியில் எழுதுங்கள்.

அ. கதிர்காமத்தில் வருடந்தோறும் ஆடிமாதத்தில் ................ நடைபெறும்.

ஆ. கதிர்காமம் தினை நிறைந்த கிராமம் என்றும் .................

இ. சகல இன மக்களும் வழிபடும் தலம் .................. ஆகும்.

ஈ. ............................... நாட்களில் யானை மீது இயந்திரத் தகட்டுடன் கூடிய பெட்டி வைக்கப்பட்டு வீதிவலமாகக் கொண்டு வரப்படும்.

உ. ............................ முறை சாராத வழிபாடு கதிர்காமத்தில் நடைபெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| திருவிழா | ஆகம | மகோற்சவம் | பொருள்படும் | கதிர்காமம் |

4. விடை எழுதுக.

அ. இலங்கையில் உள்ள புராதன முருகன் ஆலயங்கள் மூன்றின் பெயர் தருக.

..........................................................................................

..........................................................................................

ஆ. கதிர்காமத்தில் நிகழும் விசேட விழாக்கள் எவை?

..........................................................................................

..........................................................................................

இ. கதிர்காமத்தலத்தின் தீர்த்தம் எது?

..........................................................................................

ஈ. கதிர்காமக்கந்தன் மீது பாடப்பெற்ற திருப்புகழை எழுதுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. திருவிழாக்காலங்களில் கதிர்காமத்தில் பக்தர்கள் எவ்வாறு வழிபடுவர்?

.............................................................................................................

.............................................................................................................

ஊ. கதிர்காமம் செல்வோர் அங்கு தரிசிக்க வேண்டிய முக்கிய தலங்கள் எவை?

.............................................................................................................

எ. கதிர்காமத்தில் நடைபெறும் பூசைமுறை பற்றி எழுதுக.

.............................................................................................................

.............................................................................................................

ஏ. உங்கள் ஊரில் உள்ள முருகன் ஆலயம் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக..

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

- செயற்பாடு
  1. கதிர்காம யாத்திரை பற்றி ஐந்து நிமிட நேரம் வகுப்பில் உரையாற்றுக.
  2. கதிர்காம ஆலயம் பற்றிய விபரங்களைச் சேகரித்து வகுப்பில் காட்சிபடுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டிறுதிப் பரீட்சை
## மாதிரி வினாத்தாள்

### பகுதி I

தரம் : 6 நேரம்: 1 மணி 30 நிமி

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுங்கள்.
- கொடுக்கப்பட்ட நான்கு விடைகளுள் சரியானதென நீர் கருதும் விடையின் கீழ்க் கீறிடுங்கள்.

1. ஓம் என்பது எங்கணும் ஓயாது ஒலிக்கின்ற ஓர்,
   1. ஒளி 2. ஓசை 3. உருவம் 4. சுழி

2. திருக்கோயில்களில் நாள்தோறும் நடைபெறும் பூசை,
   1. நித்திய பூசை 2. நைமித்திய பூசை
   3. திருவிழா 4. அபிடேகம்

3. பஞ்சபுராணத்தில் அடங்காதாது,
   1. திருவாசகம் 2. திருவிசைப்பா
   3. திருப்புகழ் 4. திருப்பல்லாண்டு

4. பாடசாலையில் கொண்டாடப்படும் சமய விழாக்களில் ஒன்று,
   1. கலைவிழா 2. பெற்றார் தினவிழா
   3. நவராத்திரி விழா 4. தைப்பொங்கல் விழா

5. மருணீக்கியார் என அழைக்கப்பட்டவர்,
   1. சுந்தரர் 2. திருவாதவூரர்
   3. சம்பந்தர் 4. ஆளுடைய அரசு

6. பிரமாபுரமேவிய பெம்மான் யார்?
   1. பிரம்மா 2. சிவபெருமான்
   3. ஞானசம்பந்தர் 4. சிவபாதவிருதயர்

7. 'கூற்றாயினவாறு..' என்னும் தேவாரம் அருளிச் செய்யப்பட்ட தலம்,
   1. சீர்காழி 2. விருவீழிமிழலை
   3. திருச்செந்தூர் 4. திருவதிகை வீரட்டானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பித்தன் என்பதன் பொருள்,

1. பேரருள் உடையவன் 2. சுந்தரன் 3. இறைவன் 4. அடிமை

9. திருக்கோணேச்சரத்தின் தீர்த்தம்,

1. மாதோட்டம் 2. பாலாவி 3. பாபநாசம் 4. கீரிமலை

10. 'பூசுவதும் வெண்ணீறு...' என்னும் திருச்சாழல் அருளப்பட்ட தலம்,

1. தில்லை 2. திருவாலவாய்
3. திருவாதவூர் 4. திருப்பெருந்துறை

11. செயற்கரிய செயல்கள் செய்த நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் புராணம்,

1. திருவாதவூரடிகள் புராணம் 2. கந்த புராணம்
3. திருவிசைப்பா புராணம் 4. திருத்தொண்டர் புராணம்

12. அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள்,

1. பதி 2. பசு 3. பாசம் 4. இறைவன்

13. நாவலரின் பெருமுயற்சியால் புனரமைக்கப்பட்ட ஆலயம்,

1. திருக்கோணேச்சரம் 2. திருக்கேதீச்சரம்
3. திருத்தணி 4. திருப்பதி

14. 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' - இதில் எழுத்தறிவித்தவன்,

1. இறைவன் 2. மாணவன் 3. ஆசிரியன் 4. எழுத்தாளன்

15. சரியைத் தொண்டு அல்லாதது,

1. திருவலகிடுதல் 2. தீபமேற்றுதல்
3. தீட்சை பெறல் 4. தீவர்த்தி பிடித்தல்

16. சக்தி என்னும் சொல்லுக்குப் பொருள்,

1. வல்லமை 2. அம்மன் 3. மின்சாரம் 4. உமை

17. சிவசின்னங்களுள் ஒன்று,

1. பூமாலை 2. திருநீறு 3. அன்னம் 4. மலர்

18. சமய விழுமியப் பண்பு அல்லாதது,

1. உண்மை பேசுதல் 2. பொய் பேசுதல்
3. தருமம் செய்தல் 4. பிறர்க்கு உதவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. பருந்திடமிருந்து புறாவைக் காத்த அரசன்,

1. பாரி 2. மனுநீதிகண்ட சோழன்
3. சிபிச்சக்கரவர்த்தி 4. மகேந்திரவர்மன்

20. சைவசமயி ஒருவரின் கடமைகளில் ஒன்று,

1. பணம் சேர்த்தல் 2. பெற்றாரைக் கைவிடுதல்
3. பெரியோரைக் கனம் பண்ணுதல் 4. ஆலயம் செல்லாமை

21. பெரியோர்களின் ஆசீர்வாதம் நமக்கு,

1. பயன் தராது 2. கிட்டாது
3. நன்மை தரும் 4. நன்மை தரா

22. 'அறம் செய விரும்பு' என்று பாடியவர்,

1. திருவள்ளுவர் 2. சம்பந்தர்
3. ஔவையார் 4. மாணிக்கவாசகர்

23. பகிர்ந்துண்ணலுடன் தொடர்புடைய பண்டிகை ஒன்று,

1. சித்திரைவருடப் பிறப்பு 2. சிவராத்திரி
3. விநாயகர் சதுர்த்தி 4. மாசிமகமம்

24. தன்னம்பிக்கையால் உயர்ந்தோர்களில் ஒருவர்,

1. பாரதியார் 2. நெப்போலியன் 3. சேந்தனார் 4. அப்பர்

25. திருக்கேதாரத் தலத்தைப் பற்றித் தேவாரப் பதிகம் பாடியவர்?

1. திருநாவுக்கரசர் 2. திருஞானசம்பந்தர்
3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

26. திருப்பல்லாண்டு பாடியவர்,

1. திருநாவுக்கரசர் 2. கருவூர்த்தேவர்
3. மாணிக்கவாசகர் 4. சேந்தனார்

27. ஆன்மா லயப்படும் இடம்,

1. ஆலயம் 2. பாடசாலை 3. வீடு 4. மண்டபம்

28. சித்தாந்த சிகாமணி என்னும் வடமொழி நூலை எழுதியவர்,

1. நாவலர் 2. ஞானப்பிரகாச முனிவர்
3. அருணந்தி சிவாச்சாரியார் 4. திருவாதவூரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. இறைவனின் பெருமையைப் பாடுகின்ற தெய்வத் தன்மை பொருந்திய இசைப்பாடல்,

1. தேவாரம் 2. திருப்புகழ்
3. திருவிசைப்பா 4. திருக்குறள்

30. அறிவிக்காமல் தானே அறியும் பொருள்,

1. பசு 2. பாசம் 3. பதி 4. உயிர்

(30 × 1 = 30 புள்ளிகள்)

## பகுதி II

**I.**

1. ஆலயத்தில் செய்யத்தக்க சரியைத் தொண்டுகள் ஐந்து தருக.
2. ஞானசம்பந்தர் கூறும் 'உள்ளங்கவர் கள்வன்' யார்? அவர் எத்தலத்தில் காட்சியளித்தார்?
3. சமணர்கள் நாவுக்கரசருக்கு ஏற்படுத்திய துன்பங்கள் எவை?
4. சேந்தனாரின் சிவபக்தியின் சிறப்பினைத் தில்லை நடராசப் பெருமான் உலகுக்கு எங்ஙனம் எடுத்துக்காட்டினார்?
5. திருப்பல்லாண்டு பாடியவர் யார்? பாடப்பெற்ற சந்தர்ப்பம் யாது?
6. அருணகிரிநாதர் பாடிய நூல்கள் இரண்டின் பெயர் தருக. அவர் திருப்புகழ் பாடிய ஈழத்தலம் எது?
7. சைவசமயம் கூறும் முப்பொருள்களும் எவை?
8. நாவலர் பெருமான் ஆற்றிய சமய, கல்விப் பணிகள் நான்கு தருக.
9. ஞானப்பிரகாச முனிவர் சைவசமயத்துக்கு ஆற்றிய பணிகள் எவை?
10. இலங்கையில் உள்ள புகழ் பெற்ற சிவாலயங்கள் எவை? அவற்றில் ஒன்றைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

(10 × 5 = 50 புள்ளிகள்)

**II. பின்வரும் பாடல்களில் எவையேனும் இரண்டினை எழுதி, பாடியவர், சந்தர்ப்பம், பண், தலம் என்பனவற்றைத் தருக.**

அ) 'பித்தா பிறை சூடி....'

ஆ) 'கூற்றாயினவாறு...'

இ) 'சீரும் திருவும் பொலியச்...'

ஈ) 'பொன்னார் மேனியனே...'

(20 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விற்பனையாளர்:
லங்கா புத்தகசாலை,
F.L-1/14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12
☎ 2341942

ISBN 955-1013-93-X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org